படைப்பு

ஊற்று-6 | நதி-2 | ஜூன்- 2023 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



நடுவர் : எழுத்தாளர் பெருமாள் முருகன்

## அம்மையார் ஹைறூன்பீவி நினைவு

## சிறுகதைப் பரிசுப்போட்டி முடிவுகள் 2023

# படைப்பு தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-6 | நதி-2 | ஜூன் 2023

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **அம்மையார் ஹைநூன்பீவி நினைவு 'சிறுகதைப் பரிசுப்போட்டி' முடிவுகள் 2023** -பக். 05
- **முக்கோணத்தில் கதை** - கவிஜி -பக். 32
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** - மு.முருகேஷ் -பக். 37
- **கரீபியன் தீவுகளில் அலையும் தமிழனின் ஆன்மா** - இந்திரன் -பக். 47
- **வானவில் வண்ண மின்னல்** - ஆதிரன் -பக். 51
- **கைதொட்டா தீட்டாம்...** - கவிஞர் ஏகாதசி -பக். 54
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..** - கடிதங்கள் -பக். 57

## சிறுகதைகள்


- **சூலாடு குத்து**
  – ராஜி -பக். 06
- **விருத்தசேதனம்**
  – இ.செல்வ ராஜ் -பக். 20
- **தோற்றப் பிழை**
  – எஸ்.நந்த குமார் -பக். 26
- **அதுவொரு அப்பாக்கள் காலம்**
  – ஆண்டன்பெனி -பக். 43


## கவிதைகள்


- **யாழ் தண்விகா** -பக். 62
- **ராம் பெரியசாமி** -பக். 62
- **கோ. பாரதிமோகன்** -பக். 63
- **மா. காளிதாஸ்** -பக். 63


படைப்பு

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' அறுபத்திரண்டாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

அம்மையார் ஹைறுான்பீவி நினைவு 'சிறுகதைப் பரிசுப்போட்டி' முடிவுகள் இவ்இதழில் வெளியாகியுள்ளன.

முதல் பரிசு பெற்றிருக்கிற சிறுகதை சூலாடு குத்து. ஒரு சிறுமியின் மன உணர்வுகளுக்கும் நிஜத்துக்குமான போராட்டத்தைச் சொல்கிற கதை. அந்தச் சிறுமியின் கனவுப் பயத்துக்குத் தீர்வு காண முற்படுகின்றனர் பெற்றோர். பரிகாரமாகச் சொல்லப்படும் விஷயத்தில்தான் பிரச்சினை எழுகிறது. பலி கொடுக்க சூலாடு கேட்டுச் செல்லும் இடத்தில் வளைகாப்பு நடக்கிறது. இயல்பாகவே எழும் அச்சம் மற்றும் பாச உணர்வினால் சூலாடு மறுக்கப்படுகிறது. ஆனால் மறுத்தவர்களின் வீட்டில் பனை தீப்பற்றி எரிய பயந்து கொடுத்துவிடுகிறார்கள். அசைவம் சாப்பிடும் வழக்கமிருந்தாலும் சிறுமி தனக்காகப் பலி கொடுக்கப்படும் ஆட்டினை எண்ணி வருந்துகிறாள். எந்தத் தெய்வத்துக்குப் பலி அளிக்கச் சொல்கிறார்களோ அந்தத் தெய்வத்திடமே பலியைத் தவிர்க்கச் சொல்கிறாள் சிறுமி. இறுதியில் பலி கொடுக்கப்பட்டுவிடுகிறது. எந்தக் கனவுப் பயத்திற்காகப் பலி கொடுக்கப்பட்டதோ அந்தக் கனவு வேறொரு வடிவில் வருவதாகக் கதை முடிகிறது.

ஒரு கிராமத்து மனம் கனவை எப்படி அணுகுகிறது என்பது முக்கியமான புள்ளி. அதற்கான பரிகாரத் தேடலில் நாட்டுப்புறச் சடங்குகள் முன்னிறுத்தப்படுகின்றன. இடையில் நிகழ்த்தப்படும் வளைகாப்புச் சடங்கு தனி. அங்கு குழந்தை இல்லாதவளுக்கு விளையாட்டாய் நடத்தும் வளைகாப்பு வாழ்க்கையை இயல்பாய் அணுகும் ஒரு வித்தையைச் சொல்கிறது. சூலாடு கேட்டுச் செல்லும் வீட்டில் நடக்கும் வளைகாப்பு என்பது நல்ல முரண். நடுவில் ஒரு காதல் கதையும் வந்து செல்கிறது. ஆட்டை வெட்டுபவனுக்கும் சிறுமியின் தோழிக்குமான காதல். தாவணி வாங்கிக் கொடுப்பதற்காகத் தான் வெட்டும் ஆட்டின் தலையில் கூடுதலாய்த் தன் பங்கிற்கு வெட்டத்துணிபவன் மாட்டிக்கொள்கிறான். ஆனாலும் ஆடு தப்பித்த பாடில்லை.

கிராமத்துக் களத்தில் எளிய மக்களின் பயம், ஆசை, கோபம், இயலாமை, பக்தி, இரக்கம் என்பதான உணர்வுகள் அழகாய் இந்தக் கதையில் சித்தரிக்கப்படுகின்றன. கனவில் தொடங்கிக் கனவில் முடிவதான கதைப் போக்கு. இவ்வாறான சிறந்த தளத்தில் படைக்கப்பட்டிருக்கிறது 'சூலாடு குத்து' சிறுகதை.

விருத்தசேதனம் சிறுகதை இரண்டாவது பரிசு பெற்றிருக்கிறது. ஒரு ஆணின் உணர்வுகளைப் பேசுகிறது. உடல் உபாதையால் அவதியுறும் ஒருவன் அதற்கான தீர்வு காண்பதுதான் கதை. ஆனால் வெளியில் பகிர முடியாத அந்த உடல் உபாதை அவனுக்குக் கடும் உளைச்சலைத் தந்திருக்கிறது. அவனது உணர்வுகளைச் சுற்றியுள்ளோர் எப்படி கையாண்டனர் என்பதை விரிவாய்ச் சொல்லியிருக்கிறது சிறுகதை.

தோற்றப்பிழை சிறுகதை மூன்றாவது பரிசு பெற்றிருக்கிறது. ஆழமான ஒரு அன்பை மென்மையாகச் சொல்லியிருக்கும் கதை. இளமைக்காலத்தில் வசீகரமாய் இருக்கும் ஒன்று முதுமையில் இல்லாமல் போவது இயல்பான ஒன்று. ஆனால் வசீகரித்த ஒரு மனம் இளமையில் தன்னில் எதனை ரசித்தாளோ அதின்றி முதுமையில் அவளைக் காண மறுக்கிறது. இயல்பான நடையுடன் எளிய கதைப்போக்குடன் செல்லும் கதை.

சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இன்னும் கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர்.

# அம்மையார் ஹைறுான்பீவி நினைவு
# சிறுகதைப் பரிசுப்போட்டி-முடிவுகள் 2023

படைப்புக் குழுமம் சிறுகதை இலக்கிய வகைமைக்குப் பங்களிக்கும் வகையில் 'சிறுகதைப் பரிசுப்போட்டி'யினைத் தொடர்ந்து நடத்திவருகிறது. படைப்புக் குழுமத்தின் முக்கிய அங்கத்தினரான சகா என்ற சலீம்கான் தன் தாயார் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகையினை வழங்குகிறார். எந்தக் கருவிலும் சிறுகதை அமையலாம் எனப் படைப்பாளர்களுக்கான முழுச் சுதந்திரத்துடன் போட்டி நடத்தப்பட்டது. இணையத்தில் எழுத்தாளர்கள் பல்வேறு பொருண்மைகளில் சிறுகதைகளைப் பதிந்தனர்.

தமிழின் தகைசான்ற எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்கள் நடுவராகப் பங்கேற்றுப் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தெரிவு செய்துள்ளார். முதல் மூன்று பரிசு பெற்ற சிறுகதைகள் சான்றிதழ்களுடன் இவ்விதழில் வெளியாகின்றன. பரிசு பெற்ற பிற சிறுகதைகள் அடுத்த இதழிலிருந்து வெளியாகும்.

## பரிசு விவரம்

| | | |
|---|---|---|
| மொத்தப் பரிசு | : | 42,000 ரூபாய் |
| முதல் பரிசு | : | 20,000 ரூபாய் |
| இரண்டாம் பரிசு | : | 10,000 ரூபாய் |
| மூன்றாம் பரிசு | : | 5000 ரூபாய் |
| சிறப்புப் பரிசு | : | 7 நபர்கள் - தலா 1000 ரூபாய் |

படைப்பு விழாவன்று பரிசுத் தொகையும் சான்றிதழும் நேரில் வழங்கப்படும்.

## பரிசு பெற்ற சிறுகதைகள்

- **முதல் பரிசு : சூலாடு குத்து**
  (எழுத்தாளர் : ராஜி)
- **இரண்டாம் பரிசு : விருத்தசேதனம்**
  (எழுத்தாளர் : இ.செல்வ ராஜ்)
- **மூன்றாம் பரிசு : தோற்றப் பிழை**
  (எழுத்தாளர் : எஸ்.நந்த குமார்)

## சிறப்புப் பரிசுகள்

- **றஹீம் ஜிப்ரான் ஜீவிதம்**
  (எழுத்தாளர் : இ.நஸ்புள்ளாஹ்)
- **எதிர் ரோமக்காரன்**
  (எழுத்தாளர் : மகிவனி )
- **மார்ப்பால்**
  (எழுத்தாளர் : ஹரிஹரசாஸ்தா. ரா)
- **செல்லாக்காசு**
  (எழுத்தாளர் : நர்மதா தேவி)
- **சிவப்பு சேலைக்காரி**
  (எழுத்தாளர் : சப்திகா)
- **பொன்வண்டு காலம்**
  (எழுத்தாளர் : நித்வி)
- **குப்பன்ன பாத்துக்குவான்**
  (எழுத்தாளர் : சத்தியராஜ் குப்புசாமி)

முதல் பரிசு
பெற்ற சிறுகதை


பதிவுஎண்:521/2018

படைப்பு
குழுமத்தின் இணைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
முதல் பரிசு பெற்ற
படைப்பாளி ராஜி
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17 - 03 - 2023
நாள்

எழுத்தாளர் பெருமாள்

ராஜி

# சூலாடு குத்து



ஓவியங்கள் - திண்டுக்கல் தமிழ்ப்பித்தன், அழ.ரஜினிகாந்தன்

கருமேகங்களால் இருள் சூழ்ந்திருந்தது. பட்டவிளாகம் கிராமத்து வறண்ட வயல்கள். அந்தர வானெங்கும் காகங்கள் வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டிருந்தன. காகங்களின் பதட்ட இரைச்சல் காதுகளை அளந்தது. முழு கிரகணத்தின் போதான அப்பகல் இருட்டில் ஒரு கற்பனைச் சிறுமியைப் போல் நடு வயலில் நின்றுகொண்டு இருந்தாள் சுபா. இம்முறை பள்ளி முடிந்து வீடு திரும்பும் வேளையில் இங்கே மாட்டிக்கொண்டாள். தூரத்தில் ஒரு காளை மாடு நிற்பதைக் கண்டாள் சுபா. கூர்க் கொம்புகளில் கருப்பு வண்ணம் பூசப்பட்ட அந்த மாடு சுபாவை நோக்கி உக்கிரமாக ஓடி வந்தது. தன் பள்ளிப்பையைத் தூர வீசிவிட்டு வயக்காட்டில் விழுந்தெழுந்து பயந்தோடினாள் அச்சிறுமி. வரப்புகளும், வயல் வெடிப்புகளும் பலமுறை தடுக்கிவிட்டு உள்ளங்கைகளைச் சிராய்த்தது. ஓடிவரும் காளையின் குளம்போசையும், கழுத்து மணியோசையும் சுபாவை அதட்டியது. மாட்டின் வேகத்துக்கு ஈடு தர முடியாமல் மூச்சிரைத்து முழங்கால் பிடித்து நின்றாள். விரட்டி வந்த மாடு சுபாவை

முட்டி ஆழ்துளைக்குள் தள்ளியது. குழிக்குள் விழுந்தவள் தலைக்கு மேலே தெரியும் வட்ட வெளிச்சத்தைப் பார்த்து வீலென்று கத்தியபடி, படுக்கையிலிருந்து திடுக்கென்று எழுந்தாள்.

இன்னிக்கும் அதே கனவா என்று கட்டிலில் கிடந்த சுபாவை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள் அம்மா நளாயினி. ஊரிலேயே பெரிய கல்லுவீடு பட்டாளத்தார் வீடு. ஊரின் முதல் மற்றும் ஒரே கல்லுவீடும் அதுதான். வெள்ளக்காரன் காலத்திலேயே ஜமீன் பங்களாக்களுக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் உள்ளூர்க்காரர்களைக் கொண்டே எழுப்பிய முதல் கல்லு வீடு. வீடு எழும்பிய இரண்டு தலைமுறைகளுக்குப் பிறகும் இன்று வரை அந்த வீட்டுப் பெண்களுக்குக் கல்லுவீட்டுப் பெரியம்மா, கல்லுவீட்டு ஆச்சியக்கா என்பதுதான் அடையாளப் பெயரே! வீட்டுப் பெரியவர் பட்டாளத்தார் ஓமியப்பன் மிலிட்டரியில் இருந்தவர். ஆனால் வீட்டு ஆபிசர் என்னவோ பட்டாளத்தம்மா நளாயினிதான்.

வாசலின் இரண்டு பக்கமும் தோள் உயரத் திண்ணைகள். திண்ணையில் நின்று எக்கினாலும் உத்திரம் கையில் ஆப்புடாது. முடிப்பையில் இருந்த சொச்சச் சுண்ணாம்பில் மூனாவது வீட்டு வீராசாமியய்யா எப்போதோ போட்ட ஆடுபுலியாட்டக் கோடுகள் இன்னமும் அப்படியே திண்ணையில் இருக்கிறது. உச்சி வெயில் நேரத்தில் தெருவின் வயசான ஆம்பளைங்க கூடி ஆடுபுலியாட்டம் ஆடுவது அவற்றில்தான். அவர்களில் சிலர் சாய்ந்துகொள்ள திண்ணையின் ஆறு தூண்களில் மூன்று வசதியாயிருக்கும். அவர்கள் குடிக்க எப்போதும் ஒரு பானை தண்ணி பக்கத்திலேயே இருக்கும். தண்ணி ஏதும் தீந்துபோனால் திரும்ப நிரப்பி வைப்பது பட்டாளத்தார் மகள் சுபாதான். திண்ணையை அலசும்போது கூட அந்தச் சுண்ணாம்புக் கோடுகள் அழியாமல் மேலாக்கவேதான் அலசுவாள்.

ரெண்டு மாசமாக சுபாவுக்குத் தூக்கத்தில் மாடு முட்டும் கனவு. தொடர்ந்து தினசரி வரும் ஒரே கனவால் ரொம்பவே தொந்தரவாகிப் போயிருந்தாள் சுபா. வீட்டு மாட்டிடம் பால் கறக்கக் கூட மாட்டுக்கொட்டகை பக்கம் போக அஞ்சுவதானாள். ரெண்டு மாசம் முன்னதான் சுபாவுக்கு மஞ்சத்தண்ணி ஊத்தி கன்னித்துணி கட்டிட்டுப் போனான் முறைமாமன் சுந்தரம். அதற்கு அப்பறம்தான் தொடர் மாடு முட்டும் கனவுகள். சாமிக்குத்தம் ஆயிருக்குமெனப் பட்டாளத்தம்மாவுக்கு ஒரே அச்சம். அதனால் வாக்கு கேட்டு நேத்திக்கடன் ஏதாவது இருந்தாலும் பண்ணிவிடுவது என்று வாக்கு சொல்லும் வீராயி பாட்டியை வரச் சொல்லி நேற்றிரவே ஆள் அனுப்பிச் சொல்லி விட்டுவிட்டாள் பட்டாளத்தம்மா.

பட்டாளத்தார் அப்போதுதான் சங்கர் கடைக்குப் போய் டீ குடித்துவிட்டு வந்திருந்தார். வெள்ளி மங்கிக்கொண்டிருந்தது. விடியற்காலை வாசலில் சாணி கரைச்சு ஊத்தும் நேரமே கல்லுவீட்டுக்கு வந்துவிட்டாள் வீராயி. சாமி வாக்கு சொல்பவள் மட்டுமல்ல; ஊரின் ஒரே நாவிதச்சியும், பொம்பள சாமியாடியும் வீராயிதான். அதனால் வீராயிக்கு ஊரில் எல்லோரிடமும் ஒரு பெருமதிப்பும் எல்லார் வீடுகளிலும் அந்த வீட்டுக்காரப் பெரிய பொம்பளையைப் போல நடந்துகொள்ள உரிமையும் இருந்தது. கருத்த ஒல்லியான தேகம். அடி மூங்கிற்போத்து போல் தலையிலிருந்து கால் வரை அகலத்தில் ஒரே அளவிலான உடல்வாகு. ஊர் சின்னப்பயல்களிடம் சொரைக்காக் கெழவி என்றொரு பட்டப்பெயரும் அவளுக்கு உண்டு.

வாசலிலிருந்த வேப்பமரத்தில் ஒரு கொத்து வேப்பிலையை முறித்து எடுத்துக்கொண்டு போய் வீட்டுச் சாமி மூலையில் உக்கார்ந்து விளக்கேற்றினாள் வீராயி. வீட்டின் ஓரத்தில் சமையலறையிலோ, பத்தாய இடுக்கிலோ, அகல் வெளிச்சத்துக்குக் காத்துக் கிடக்கும் இருட்டு மூலையில், சுவற்றில் தாழ ரெட்டைக் கையகல அளவில் மஞ்சளால் வட்டங்கள் பூசப்பட்டிருக்கும். வட்டத்தில் பதினொன்னு பதிமூனென்று கணக்காக சிவப்பு பொட்டுகள் வைக்கப்பட்டு இருக்கும். எல்லாவற்றிலும் முதல் மஞ்சள் வட்டம் வீட்டுக் குலசாமி. அதற்குப் பக்கத்திலேயே பூசியிருக்கும்

ஏனைய வட்டங்களை வீட்டில் தவறிப்போன பெரியவர்களாக வேண்டிக்கொள்வது வழமை.

பார்த்த மாத்திரத்தில் ஓமியப்பனும், நளாயினியும் பின்னாடியே போய் வீராயி முதுகுக்குப் பின் கை கட்டி நின்றுகொண்டனர். கொஞ்ச நாழி கண்களை மூடி உக்காந்திருந்தவள், கண்களைத் திறக்காமலேயே "ஆயாள கூப்புடு" என்றாள். பாதி உறக்கத்தில் வந்து வீராயி முன்பு உக்காந்தாள் சுபா. கண்களைத் திறந்து சுபாவைப் பார்த்தாள் வீராயி. சுபாவும் பார்த்தாள். இந்த விடியற்காலை பூசைகளையெல்லாம் சுபா எப்போதும் அவள் வீட்டில் கண்டதேயில்லை. பனிவெளியான சாம்பிராணி மூட்டத்துக்கு நடுவே முகம் முழுவதும் மஞ்சளும், நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுமாய் உக்காந்திருந்த கிழவியைப் பார்த்துக் கொஞ்சம் பயந்தும் போயிருந்தாள் சுபா.

சுபாவைப் பார்த்து, "என்ன கனா கண்ட ஆயா" என்றாள் பாட்டி.

"மாடு முதுவுல முட்டி குழில தள்ளி வுடுது ஆத்தா..."

"மாடு தொரத்துச்சா? முட்டுச்சா?"

"தொரத்தி முட்டுச்சு..."

"குழில வுழுந்த நீ செத்தியா? பொழச்சியா?"

"சாகல... காப்பாத்துங்க காப்பாத்துங்கனு கத்துனேன்..." கண்களை மூடி வேண்ட ஆரம்பித்தாள் வீராயி.

`வடக்க நின்னு ஊரக் காக்கும் ஆச்சியக்கா ஆச்சியக்கா... ஆச்சியக்கா கூட நிக்கும் பெரியண்ணன் பெரியண்ணன்... புள்ள பயத்துக்குக் காரணம் என்ன முன்ன வந்து சொல்லிடு நீ... வடக்க வயக்காடு பனங்காடு நடுவ நின்னு... அருவா நீட்டி குதுர மேய்க்கும் வீரண்ணன் வீரண்ணன்... புள்ள பயத்துக்குக் காரணம் என்ன முன்ன வந்து சொல்லிடு நீ... எல்லை தாண்டி ஏதோ ஒன்னு கல்லு வீடு வந்துருச்சு... ஊருக்குள்ள குந்திக்கிட்டு நோட்டம் வுடும் செல்லியாயி... செல்லியாயி மகமாயி.... நீயும் ஆத்தா வுட்டுட்டியே உன் புள்ளய எது கிட்டயோ... என்ன ஆச்சு எது வெரட்டுச்சு... சொல்லிப்புடு சொல்லிப்புடு... கண்ணு முன்ன காட்டிப்புடு... கூட காவ நின்னுப்புடு...`

உருவி ஆய்ந்த கொத்து வேப்பிலையில் பாதியை அள்ளி, "சாமி பக்கத்தாப்ள வைய்யாயா" என்றாள் பாட்டி. வலது கையில் பாதியை அள்ளி, இடது பக்க விளக்கோரம் வைத்தாள் சுபா. எடுத்து வைத்த இலைகளை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தவள், "பதினேழு... ஒத்தப்படையில வருது" என்றாள். பிறகு சோழி உருட்டிப் பார்த்தாள். பொறையேறி இருமினாள். சிலுப்பினாள். கோவமாய் உறுமினாள். "சாமியை ஏய்ய்" என அதட்டினாள். பிறகு வாக்கு சொல்லத் துவங்கினாள்.

`கொள்ளவாச வடக்கால... ஐயங்கண்ணு பொறத்தால... கெணறொன்னு இருந்துச்சு ரொம்ப காலம் முன்னால... பொறந்து விளையாண்ட கன்னுக்குட்டியொன்னு தண்ணியில்லாக் கெணத்துல வுழுந்துடுச்சு... தொப்புள்கொடி காயல சீம்பாலும் சப்பல... பச்சப்புள்ள உசுரு போச்சு பொறந்த செத்த நேரத்துல... கூட ஆட ஆளக் கேக்குது வயசுப்புள்ள உசுரு கேக்குது... அமாவாச முடியக்குள்ள படையல் ஒன்ன போட்டுப்புடு... சூலாடொன்னு குத்திப் போடு ஆச்சியக்கா கோயிலுல... அதுக்கப்பறம் அது பாடு கெணத்தடியில ஆச்சிப் பாடு... கண்ணு போய் ஒறங்கிப்புடும் வூட்டவுட்டு ஓடிப்புடும்...`

துண்ணூரை அள்ளி சுபா தலையில் அதக்கிவிட்டு, தட்டிலிருந்த வெத்தலைப்பாக்கை எடுத்துக்கொண்டு, "கிளம்புறேன் ஆயா" என்று எழுந்தாள் வீராயி. "போய்க் கேளு..." என்று பட்டாளத்தார் தோளைத் தள்ளினாள் நளாயினி.

"அமாவாசைக்கு இன்னும் மூனு கெழமதான் ஆத்தா இருக்கு, இப்புடி சொன்னா நான் என்னத்தா பண்ண...?" என்றார் பட்டாளத்தார்.



"ஆத்தாவுக்கும் என்ன கொற வெச்சியோ! இல்லனா நீ படையல் போட்டுக் கேக்குற வரையா உன்ன விடுஞ்சாமி? இப்ப வுட்டா அடுத்த ஆறாநா மகமாயி காப்பு கட்டு... அடுத்த நாப்பத்தஞ்சு நாளுக்குக் குலசாமி கெடா வெட்டு போட முடியாது. நாள கெடத்தாம ரெண்டாநா சோக்கரு பேரன் காது குத்தோட சேத்து முன்னாடியே பண்ணிப்புடு ஓமியப்பா."

"இல்லத்தா... மேச்ச சந்தையும் நேத்து முடிஞ்சு போச்சு, இப்ப செனையாட்டுக்கு அதுவும் வெள்ளாட்டுக்கு நான் எந்தக் கிடையில போய் நிக்க? எந்த யாவாரிய கேக்க?"

குங்குமப் பொட்டு நெற்றி சுருங்க யோசித்த வீராயி, "ஒரு சேதி சொல்றேன் கேப்பியா?" என்றாள்.

"சொல்லுத்தா, என் வம்சத்துக்கே புள்ளப்பேறு பாத்த பொம்பள நீ, உன் வாக்க மறுப்பனா!?"

"இன்னிக்கு மருமொவ வளக்காப்புனு அம்சம் வந்து நேத்து கூப்புட்டுப் போனா, அவ பட்டில ஒரு ஆடு பாத்த நெகா... உன்னட மருளாளிப்பயதான? கூட்டுக்கும், வாக்குக்கும் ஆப்புடுற பயதான், அவங்கிட்ட கேளு, நான் இப்ப அங்கதான் போறேன், கொஞ்ச நேரஞ்சென்டு வா பேசிப் பாப்போம்."

"சரித்தா... சரித்தா..." என்ற பட்டாளத்தார் வீராயியை வழியனுப்ப, வீராயி திண்ணையைத் தாண்டும் வரை அமைதியாயிருந்த நளாயினி பிறகு துவங்கினாள்.

"ஏன்யா? அவ வாசக் கோலத்துல புள்ளியை எண்ணுனதுக்கே தண்ணி மோந்து ஊத்தி மொத்தக் கோலத்தையும் அழிச்சுப் போட்டு, தாட்டியம் காட்டுனவ அந்த அம்சம்... அவளா நீ போய்க் கேட்டு இந்தானு ஆட்ட குடுக்கப் போறா??"

"புள்ளைக்கி வேணும்னா கேட்டுத்தான்டி ஆவணும்... காரியம் யாருக்குனு நெனப்பு இல்லையா?"

"என்னமோய்யா!!! போவக்குள்ள ஆறுமுகம் அத்தானக் கூப்புட்டுப் போ... அவரப் பேசச் சொல்லி நீ சும்மா நில்லு... உன் சொல்லுக்கு இல்லனுட்டா கேக்காது எனக்கு..." கண்களில் நீர் அதக்கிக்கொண்டாள் நளாயினி.

•

"நீ தீட்டும் கோலங்கள் என் நெஞ்சம்... நான் பாடும் கீதங்கள் உன் வண்ணம்.... இரண்டு நதிகளும் வரும் இரண்டு கரையிலே... வெள்ளங்கள் ஒன்றல்லவா.... ஆஆஆ... ஆஆஆஆ..." பாடிக்கொண்டே கல்லுவீட்டுக்குள் வந்த தேவி, பின் வாசலில் உட்காந்திருந்த சுபாவைச் சீண்டினாள்.. "வாடி, கொடுக்காப்புளி புடுங்க போகலாம்."

"இம்மோங்காலைலயா? அம்மா கேட்டா வைய்யும், நான் வரல," என்றாள் சுபா.



“அப்ப வா கல்லாங்கா வெள்ளாடலாம்...” சுபாவின் கையைப் பிடித்து இழுத்தாள் தேவி.

“விடிஞ்சா கல்லாங்கா, பொழுது சாஞ்சா செல்லிக்கோடு, நான் வரல, நீ போய் அமுதா கூட விளையாடு..”

“ஏன் மினுக்கி மூஞ்சுல தேனு வழியுது??? என்னாச்சு மயிலுக்கு??”

“தெனம் ராவாணா மாடு முட்டு கனா, உறக்கமே போச்சு... வீராயாயா வந்து பரிகாரம் சொல்லிட்டுப் போச்சு, வெள்ளாடு வாங்கி சூலாடு குத்தணுமாம். அப்படினா என்ன?”

“அது தெரியாதா? வீடுவாச கழுவி... செனையாடு ஒன்னு புடிச்சு.... படையல் போட்டு... தண்ணி தெளிச்சு... கூர் தொரட்டியெடுத்து ஆட்டு வயித்துல குத்தி... குட்டிய எடுத்துத் தலையத் திருகி ஆச்சி முன்ன வெச்சு உருமியடிப்பாங்க...” கொஞ்சிக்கொஞ்சி வண்ணவண்ணமாய்க் கதை சொன்னாள் தேவி. “போதும்... போதும்... போதும்...” கண்களைக் கைப்படாமல் கசக்கி மூடினாள் சுபா.

தேவி விவரித்து முடிக்கும் முன்னரே அச்சத்தில் வெளிர்ந்து விட்டது அவள் முகம்.

“யாருடி உனக்கு இதெல்லாம் சொல்லுறா?”

“வெத்தலக்காம்பு கிள்ளி பாக்கு ஒடச்சுக் குடுத்தா எங்க அம்மாயி நெதம் இப்படி எதாவது ஆட்டஞ்சொல்லும். அதுமில்லாம போன திருவிழாக்கு வண்டிக்காரு மாமா ஊருக்குப் போயிருந்தப்போ அங்க ஒருத்தர் சூலாடு குத்திப் படையல் போட்டாரு பாத்தேன்.”

“சின்ன சிசு காவு ஏக்குமா? அது என்ன பாவம் பண்ணுச்சு??”

“முந்தாநேத்து, குளுருக்குத் தலைல துண்டக் கட்டிட்டுக் கறுக்கல்லயே போய் நின்னு, ஊரு திடல்ல வெட்டுன ஆட்டுல மூனு கிலோவப் பட்டாளத்தார் மாமாதான் வாங்கியாந்தாருனு கேள்வி!! அப்ப தெரியலயோ பாவம்னு?”

“அது வேற இது வேற...”

“நீயுந்தான மத்தியானமா கொல்லைல உக்காந்து ஊக்கக் கொண்டு பல்லக் குத்திட்டுருந்த?? கொன்னா பாவம் தின்னா போச்சு...” என்று கையை விரித்துக் காட்டிச் சிரித்தாள் தேவி.

“உனக்குப் புரியலடி விடு...”

“உனக்குத்தான்டி புரியல, ஆத்தா கேட்டா குடுத்துத்தானே ஆவணும். அவ காவ காத்து வளத்தது அவளுக்கு இல்லனா வேற யாருக்கு? சரி நீ சாப்புட்டு முடிச்சுட்டுச் சத்தம் போடு வாரேன், குமுளித் தோப்புல கொடுக்காப்புளி உலுக்கப் போவோம்”, என்று பின்வாசல் வழியே வெளியே கிளம்பினாள் தேவி.

சுபாவுக்கு ஏதோ ஒன்று உறுத்திக்கொண்டே இருந்தது. தனக்காக ஏதுமறியா ஒரு தாயும், சேயும் உயிர் விடப்போவதை எண்ணி நொந்துகொண்டு இருந்தாள். ‘அம்சம் பெரியம்மா பலிக்கு ஆட்டைக் கொடுக்கக் கூடாது, கொடுக்கக் கூடாது...’ என்று உள்ளுக்குள் ஆச்சியக்காவிடம் வேண்டிக்கொண்டே இருந்தாள். ஆமாம்... ஆட்டைப் பலி கொடுக்கப்போகும் அதே ஆச்சியக்காவிடம்தான். உண்மையில் சுபா இத்தனை இளகிய மனசுக்காரியெல்லாம் கிடையாது. புற்றீசல்களைப் புகை வைத்துப் பிடித்துப் பொடியரைத்திருக்கிறாள். தட்டான்களைப் பிடித்து வால்களில் நூல் கட்டித் தோரணமாக்கி விளையாடியிருக்கிறாள். தேவி சொன்னது போல், மூன்று கிலோ ஆட்டுக்கறியைத் தானே கழுவிச் சமைத்து ஒரு சலனமுமின்றி உண்டு உறங்கும் ஒருத்திதான் அவள். இருந்தும் அந்த சூலாடு குத்து ஏனோ அவளை உள்ளுக்குள் தொந்தரவு செய்துகொண்டே இருந்தது. கொக்கிப்புழுவிடம் சிக்கிய கெண்டை மீன் போல அச்சிந்தனையில் சிக்கிப்போனாள் சுபா. “ஆடெல்லாம் வேணாம் ஆத்தா, சனிக்கெழும ஆனா வந்து நெய்விளக்கு போடுறேன்...” என்று ஆச்சியக்காவிடம் வேண்டிக்கொண்டாள்.

காற்றில் ஜன்னல் அடிக்கும் சத்தத்துக்கும், அம்மா பத்தாயத்தாழை திறக்கும் சத்தத்துக்கும், சுவற்றில் சாத்தியிருந்த கயித்துக் கட்டில் கீழே சாய்ந்த சத்தத்துக்கும், வாசலில் கோலமாவுக்காரன் தராசை உலுக்கும் சத்தத்துக்கும் அப்பா வந்துவிட்டாரோ என்று வாசலை எட்டிப் பார்த்தாள். கைகளைக் கோத்து உள்ளுக்குள் அடிக்கடி ஏதோ முனகிக்கொண்டாள். நாமுச்சுரும் வேண்டிக்கொண்டிருந்தது வீணாகவில்லை. கடைசியாக, சுபாவின் வேண்டுதல் பலித்துத்தான் போனது. மூஞ்சைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார் பட்டாளத்தார். ஆட்டைக் கேட்டுப்போன அப்பாவிடமும், ஆறுமுகம் சித்தப்பாவிடமும் ஆட்டைத் தர முடியாது என்று மறுத்து அனுப்பிவிட்டாள் அம்சம்.

------------------

புளிசோறு, எலுமிச்சஞ்சோறு, தயிர்சோறு, எள்ளுசோறு, தேங்காச்சோறோடு சேர்த்து உளுந்தவட, கடப்பா, சட்டினி, மல்லாக்கொட்ட சாந்து, கோணாரப்பளம், கொத்தரவத்தயென்று அம்சம் வீட்டுக் கொல்லப்பக்கமே வளையக்காப்பு விருந்துக்கு மணந்துகொண்டிருந்தது. கதவோரம் அம்சத்தின் பெரிய மக கோதை அம்மியில் மொளாசாந்து அரைத்துக்கொண்டிருந்தாள். அதற்குப் பின்னாடி நாத்தனார் மக தமிழரசி வட தட்டிக் கொடுக்க, மாலா சின்னம்மா கொப்பரையில் போட்டு எடுத்துக்கொண்டிருந்தாள். கோதை மகன் பெரியவன் துருவி வைத்திருந்த தேங்கா சீவலை அள்ளி வாயில் போட, இந்தாயென்று அதட்டினாள் மாலா.

“ஏம்மா... இந்த வேலையெல்லாம் ஒரு ஆளு வெச்சு செஞ்சுட்டா சுலுவாருக்கும்ல? அடுப்படில வெந்து நோகுது...” அலுத்துக்கொண்டாள் கோதை.

“முறையா அவுங்க வீட்டுலருந்து இதெல்லாம் ஆக்கிக் கொண்டாறணும்... உந்தம்பி இங்கிருந்து இருநூறு மைல் தாண்டிப் பொண்ணு கட்டிட்டு வந்தா அப்பறம் இதெல்லாம் நம்ம கடன்தான. அதுக்குனு தவுசுப்புள்ள வெச்சுப் பொங்கியிறக்கி

ஒன்னொன்னு வாய்ல வெக்க முடியாம போனா என்ன பண்ண? வூட்டுக் கைப் பக்குவம் வருமாத்தா?" என்றாள் அம்சம்.

"அவுங்க வூட்டுலருந்து எல்லாம் வந்துட்டாங்க, இன்னும் அஞ்சு நிமிசத்துல புள்ளயார் கோவில்ல சூடம் காமிச்சுட்டு வந்துருவாங்க" என்று கொல்லப்பக்கம் வந்து சேதி சொன்னார் அம்சம் வீட்டுக்காரர் முத்து. சேலை முந்தானையை இழுத்துக் கழுத்தைத் துடைத்துக்கொண்டு வாசல் பார்த்து ஓடினாள் அம்சம். "கழுத்துல மாவு ஒட்டிருக்கு. ஒழுங்கா தொடச்சுட்டுப் போமா" என்று கத்தினாள் பெரியவ கோதை.

வாசலிலேயே பெரிய கீத்து பந்தல் நட்டு நூறாளு கால நீட்டிக் குந்த பெரிய இடம் உண்டு. சீரா, செனத்தியா, பூவா, பழமா இருவத்தியஞ்சு முப்பது தாம்பாலம் வந்து பந்தலை நிரப்பியது. அதிரசமும், எள்ளடையும், சீனியுருண்டையும் அவற்றில் பெரிய தட்டு. ஆண்கள் எல்லாம் பின்னாடி அடுக்கி இருந்த நாற்காலிகளில் போய் உக்கார்ந்துவிட்டனர். பெண்களும், பெண் பிள்ளைகளும், நண்டு சிண்டுகளும் கீழே விரித்திருந்த தார்ப்பாயில் உக்காந்திருந்தனர். கிழவியொருத்தி வாயிலிருந்த வெத்தலையைத் துப்பிவிட்டு வந்து உக்கார்ந்தாள். அம்சத்தின் சின்ன மருமக லெச்சுமி புது சேலையும், முழு சிரிப்புமாக வந்து முன்னால் கிடந்த பலகைக்கட்டையில் உக்கார்ந்தாள். மடியில் வைக்க அம்மிக்கொழவி, தோளில் வைக்க வாழைத்தட்டு, கன்னத்துல பூச மஞ்சளும், வாயில போட சக்கரையுமென எல்லாமே ரெடி.

முதல் ஆளாய் நலங்கு செய்யக் கூடயிருந்த வீராயி பாட்டியை அழைத்தாள் அம்சம். பிரசவம் பார்க்கப் போகும் பெண்ணே வளகாப்பிலும், பிரசவம் பார்த்த பெண்ணே புள்ள பதினாறிலும் முதல் நலங்கு செய்வது வழி. அம்மிக்கொழவியைத் தூக்கி லெச்சுமி மடியில் வெச்சு, "புள்ள உருளுது புடி" என்று கன்னத்தைக் கிள்ளினாள் வீராயி.

`கங்க நதி தண்ணியெடுத்து.... பட்டவிளாக நதி தண்ணியெடுத்து.... கங்க நதி தண்ணியெடுத்து.... பட்டவிளாக நதி தண்ணியெடுத்து.... கங்க நதி தண்ணியெடுத்து.... பட்டவிளாக நதி தண்ணியெடுத்து....` பாட்டு பாடி, வாழைத்தட்டைத் தூக்கிக் காட்டிவிட்டு, கழுத்திலிருந்த மாலையின் ஒத்த பூவைப் பிச்சு "இந்தா ஆத்தா எடுத்துக்க" என்று சாமிக்காக மேலே தூக்கிப் போட்டாள்.

"பட்டவிளாகத்துல ஏது ஆத்தா நதி" எனக் கூட்டத்தில் கன்னிப்பெண்ணொருத்தி பரிகசித்துக் கேள்வியெழுப்பினாள்.

"பொறக்கப்போற புள்ள வீட்டுல நாலு தூணுக்கும் ஒன்னுக்கு அடிக்கும் அப்ப பாப்ப தாயி பட்டவிளாகத்து நதிய" என்று பதிலுக்கு எதிர் விட்டு பறக்கவிட்டாள் வீராயி. வேப்பிலக்காப்பை மாட்டிவிட்டு, மஞ்சளை அள்ளிக் கன்னத்தில் பூசி, "ரெண்டு கண்ணும் மினுக்குதே.. பேறுக்கு பொம்பளப்புள்ளதான்னு நெனைக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டாள் கிழவி.

"ஏன்த்தா, ஆம்பளப்புள்ள பொறந்தா தூக்கிப் போட்டுட போறோமா?" என்றாள் மாலா பதிலுக்கு.

"தூக்கியெல்லாம் போட வேணாம், என்கிட்ட குடுத்துடு. நான் வெச்சுக்கறேன்" என்றாள் கோதையின் தோழி சித்ரா.

"நீ பத்து நாள் வெச்சுக்க, நாங்க பத்து நாள் வெச்சுக்கறோம்" என்றார் முத்து.

"இந்தா... என்ன?? என் பேரப்புள்ளய மாத்தி மாத்தி எல்லாம் ஏலம் வுட்டுட்டு இருக்கீங்க???" சிரித்தாள் அம்சம்.

அப்பறம் ஒருத்தொருத்தராக வந்து நலங்கு முடிக்க பந்தி ஒரு பக்கம் ஓடிக்கொண்டிருந்தது. கடைசியாக வந்து பின்னால் இரண்டு நாற்காலிகளில் அமர்ந்தனர் பட்டாளத்தாரும், ஆறுமுகமும். தூரத்திலிருந்து கண்களில் ஜாடை காட்டி "கொஞ்ச நேரம் இரு" என்றாள் வீராயி. கைநிறைய வளையல்களோடு லெச்சுமி பிறந்த வீடு அனுப்பி வைக்கப்பட்டாள். லெச்சுமி வீட்டுக்காரர்களும் விழா முடிந்த கையோடு வந்த வண்டியிலேயே திரும்பிவிட்டனர். சொந்த

ஊர் பெருசுக சிலர் மட்டும் பந்தலில் உக்காந்து வெத்தல சீவல் போட்டுக்கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டுச் சித்ரா, கோதையின் சிறுவத்திய சிநேகிதி. இப்போதும்தான். சின்ன வயசிலிருந்து கோதையோடு ஒன்னு மண்ணாக விளையாடிக் கிடந்தவள். கல்யாணம் முடிஞ்சு ஒம்போது வருசமாகியும் பிள்ளைப்பேறு இல்லாத சித்ராவை உக்காரவைத்து வளகாப்பு நலுங்கு வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தனர் கோதையும், இளம்பெண்கள் சிலரும்.

ஆறுமுகம் மட்டும் திண்ணையில் போய் உக்காந்து முத்து அண்ணன் காதில் லேசாய் விஷயத்தைப் போட்டார். "சுபாவும் உனக்கு மக மொறதான் ஆவுது. ஆச்சிக்குக் கொடுக்கணும்னா அது பட்டாளத்தாரண்ணன் கொடுத்தா என்ன நீ கொடுத்தா என்ன முத்து? என்ன யோசிக்கிற?"

"யோசிக்க ஒன்னுமில்லய்யா... வீட்டம்மாகிட்ட ஒரு வாய் கேட்டுக்கிட்டு..." கதவுக்குப் பின்னாலிலிருந்து எல்லாத்தையும் காதில் வாங்கிக்கொண்டிருந்த அம்சம் இடையில் குறுக்கிட்டு, "என் வூட்டுல ஒரு மாசமான புள்ளய வெச்சுக்கிட்டு செனையாட்ட நான் பலிக்குக் குடுப்பேனா? கதவ சாத்துனா அறுகா இடுக்குலருக்கற கொளவிக்கூடு துண்டுப்படும்னு கள்ளன் வந்தாலும் ஆச்சுனு கதவ சாத்தாம தலைமாட்டுல அருவாள போத்திட்டுத் தெனம் தூங்குறாரு ஏம்புருசன்... இங்க வந்து துவளக்குட்டி கேக்குறியே.. நல்லாவா அத்தான் இருக்கு ஒனக்கு? அந்தப் பெரிய மனுசன்தான் வந்து நிக்கிறாருனா ஒனக்கு எங்க போச்சு பொறக்கன?"

"இந்தா... வீட்டம்மாகிட்ட ஒரு வாய் கேக்குறேன்னு சொன்னா... நீ வாய்க்கு வந்ததக் கேட்டுட்டு இருக்க? குணத்துல சொக்கன் அந்த மனுசன்... வீடு தேடி வந்தவங்கள வாச காட்டி அனுப்பவா கேக்க? ஒரு மருளாடிக்கெழவி வாச தேடி வந்து நிக்கிறா.. அந்தக் கெழவிக்கு மட்டில்ல??" அதட்டினார் முத்து.

"வுடுண்ணே! ஆசையா வளத்துருக்கும், பொசுக்குனு கேட்டா ஆதங்கப்படத்தான் செய்யும்... சாயங்காலமா பொழுது போய் என்னனு பேசிட்டு..." மறுபடியும் குறுக்கிட்டாள் அம்சம், "பொழுது போய்க் கேட்டாலும், எப்ப கேட்டாலும் இதான் எஞ்சேதி. இதுக்கு மேல பேசாதத்தான் நீயி... இத இப்டியே வுடுறது நல்லது..." கதவைக் கட்டிக்கொண்டாள்.

ஆறுமுகத்தையும், பக்கத்தில் உக்காந்திருந்த பட்டாளத்தாரையும் கையறுநிலையில் ஒரு பார்வை பார்த்தார் முத்து. 'பரவால்லய்யா...' என்று கண்களிலேயே பதிலளித்தார் பட்டாளத்தார். கையிலிருந்த சொம்பு தண்ணியைக் குடித்துவிட்டு நடையைக் கட்டினர் இருவரும்.

அம்சத்துக்கு இது ஒரு இக்கட்டான தருணம். ரொம்ப பெரிய தர்மசங்கடம். பட்டாளத்தாரோடோ, ஆறுமுகத்தோடோ அல்ல. அம்சத்துக்கும், ஆச்சியக்காவுக்கும் இடையேதான் அது. வாக்கப்பட்டு வந்த வீட்டுக் குலதெய்வம்தான் என்றாலும், ஆச்சியக்காவுக்கும் அவளுக்கும் இடையே ஒரு நீண்ட பந்தம் உண்டு. கொஞ்ச வருசத்துக்கு முன்பு அம்சத்தின் அண்ணனுக்கு ஒரு விபத்து. உடைந்து போன கால் எலும்புகள் கூடவே கூடாது என்று டாக்டர்கள் சொல்லிவிட்ட



பிறகு ஆச்சியக்காவுக்கு நேந்திக்கிட்ட பிறகே அண்ணன் கால் சரியானது என்பது அவள் நம்பிக்கை. யாருக்கு எது செஞ்சாலும் பிறந்தவீட்டு ரத்தத்தைக் காப்பாற்றிய சாமியில்லையா!? ஆனாலும் இப்போது அந்த ஆட்டைத் தர முடியாத சூழ்நிலை. முத்துவின் பரம்பரையிலேயே எல்லா மருமகள்களுக்கும் முதல் குழந்தை ஆறேழு வருஷம் கழித்தேதான் பிறந்திருக்கிறது. லெச்சுமி மட்டும்தான் இதில் விலக்கு. அதனால் வீட்டிலிருக்கும் இன்னொரு சூலுயிரைப் பலிக்குக் கொடுப்பதில் அவளுக்குப் பெரும் தயக்கம். அந்த ஆட்டின் மீது அவளுக்குத் தனிப்பட்ட கரிசனம் ஏதும் இல்லையென்றாலும், ஒரு உயிரைத் தாங்குவதாலேயே அதைத் தன் மருமகளோடு ஒத்து நினைத்துக்கொண்டாள். அதே சமயம் தன் எல்லா இக்கட்டான சூழ்நிலைகளிலும் பெரிய நம்பிக்கையாக உடனிருந்து காத்த ஆச்சிக்கென்று வந்ததைத் திருப்பியனுப்பியதில் ஒரு இயலாமை. இரண்டும் சேர்ந்து அம்சத்தைப் பெரிதாய் வாட்டின. நீந்தப்போன ரெண்டு புள்ளைங்க ஆத்துல போனா தாய் மனசு, தான் புள்ளயதானே முதல்ல போய்த் தூக்கும்!

-----------------

“சரி, நீ சாப்புட்டு முடிச்சுட்டுச் சத்தம் போடு வாரேன், குமுளித் தோப்புல கொடுக்காப்புளி உலுக்கப் போவோம்” என்று பின்வாசல் வழியே வெளியே கிளம்பினாள் தேவி. சுபா வீட்டுப் பின் வாசலிலிருந்து வாய்க்காலைக் கடந்தால் போஸ்ட்மேன் வீட்டு மாந்தோப்பு, அதற்குப் பின்னால் கரும்புக் காடு. வழியெல்லாம் காஞ்சூரு செடி மண்டிக் கிடக்கும். கணுக்காலுக்கு மேலே ஒத்திவிட்டால் மண்ணெண்ணெய் ஊத்திச் சொறிஞ்சாலும் அரிப்பு அடங்காது. அதனால் அந்தப் பாதை முழுக்க கண்காணியா நடக்கணும். கரும்புக்காட்டு ஓரமாய் நடந்து போவது தேவி வீட்டு போர்செட்டுக்குப் போகும் குறுக்கு வழி. போகும் வழியெல்லாம் பாம்புத் தடம் பார்த்து நடப்பவள் போல் எதையோ தேடிக்கொண்டே நடந்தாள். வரப்புக்கு வெளியே போனவளின் இடுப்பில் கையை விட்டுக் காட்டுக்குள் மறைவாய் இழுத்தான் சேது. இரு கைகளையும் இடுப்பில் மடக்கிப் பிடித்ததில் மீள முடியாது மாட்டிக்கொண்டாள் தேவி. தலையால் முட்டிப் பார்த்தாள். கால்களை பின்னே உந்திப் பிடியை அகற்ற முடியுமாயென முயற்சித்தாள். இன்னும் இறுக்கினான் சேது. வேட்டைக்கண்ணியில் மாட்டிய சிறு முயல் போல சேதுவின் பிடியில் சிக்குண்டிருந்தாள் தேவி. நெஞ்சோடு மடக்கியிருக்கும் கைகளை நீட்டி முழக்கி மீள முயன்று முடியாமல் சோர்ந்தாள்.

“சரி, இன்னிக்கும் நீதான் ஜெயிச்ச, விடு...” மேலே நிமிர்ந்து முகத்தைப் பார்த்து முறைத்தாள்.

“எப்பவும் நாந்தான் ஜெயிப்பேன்,” பிடியின் இறுக்கத்தை மட்டும் தளர்த்தி அகல விடாமல் கைகளைத் தேவிக்குப் பின்னால் கோர்த்திருந்தான் சேது.

“அதுக்கென்ன இப்போ? மெடலா குத்தணும்?? யாராவது பாத்துடப் போறாங்க விடு...”

“குத்துனா வேணாம்னு சொல்லுவேனா? குருகு கண்ணும் காணாக்காடு இது, பயப்படாத... அந்த மெடல குடு...” குனிந்து கன்னத்தைக் காட்டினான்.

“இதுக்கொன்னும் கொறச்சலில்ல... காலங்காத்தால வீட்டுல வேலை செஞ்சுட்டுருந்தவள இதுக்குத்தான் கண்ணக் காட்டிக் கூப்டியா?” கன்னத்தில் அறைந்தாள் தேவி.

“ஆமான்னா மட்டும் கரிசனம் காட்டவா போற??”

“கண்டிப்பா மாட்டேன்... திருவிழாக்குச் சீமசிலுக்குல தாவணி வாங்கித் தரேன்னியே வாங்கித் தந்தியா?”

“நெஞ்சுக் கொண்டார சிங்கப்பூருக்கு ஆளு முடிச்சுருக்கேன். அடுத்த அப்பிய கார்த்தியல்ல கப்பல்ல வந்து சேரும் பாரேன்...”

“அப்ப அந்தக் கரிசனமும் கப்பல் கரை

தட்டுனதுமே கிடைக்கும்..”

“இன்னிக்கே கிடைச்சா என்ன பண்ணப் போறியாம்??”

“ம்ம்ம்??? அடுத்த வாரம் திருவிழாக்கு மொளப்பாரி தூக்கும்போது நீ வாங்கித் தர அந்த சீமசிலுக்கயே உடுத்திக்கிறேன், இப்ப விடு...” முதுகுக்குப் பின்னால் கோர்த்திருந்த சேதுவின் கைகளை உதறிவிட்டு நகர்ந்தாள்.

“ஏய்ய்... அஞ்சு நிமிசம் பேசிட்டாவது போடி...”

“இன்னும் செத்த நாழில எங்கப்பா வயலுக்குத் தண்ணி பாய்ச்ச வருவாரு... வேணும்னா அஞ்சு நிமிசம் அவருகிட்ட பேசு...” ரெண்டு பாய்ச்சலில் மாந்தோப்பைச் சேர்ந்துவிட்டாள். ‘தாவணி வாங்கப் போதுமான காசு கையில் இல்லை. சட்டப்பையில் இருந்த ரெண்டு ரூபாவைக் கூட நேற்று அடுப்பு விறகுக்குத் துடைத்துவிட்டாள் அம்மா. உண்டியல் செருவாடு கொஞ்சம் உண்டு. ஆனால் அது மட்டும் போதாது. முருகேசன் இல்லனா அப்புரு யாருகிட்டயாவது கைமாத்து கேக்கலாமா?? கைமாத்து வாங்கி சிநேகிதிக்குத் தாவணியா? ச்சீச்சீ...’ இன்னிக்குக் கடையில் ஆத்தின அத்தனை டீயிலும் இதே ஞாபகம். ஒரு யோசனையும் சிக்கின பாடில்ல. ‘சங்கர் மாமாவக் காசு கேட்டா குடுப்பாரா?’ ‘கண்டிப்பா மாட்டாரு...’ வேற என்னதான் பண்ணுறதுனு நூத்தியம்பதாவது முறை யோசிச்சு முடிக்கும்போது மணி ராத்திரி பதினொன்னு ஆகியிருந்தது.

கல்லாக் காசை எண்ணி டிரவுசர் பையில் அதக்கிவிட்டார் கடை ஓனர் சங்கர். வடை அடுக்கும் கண்ணாடிப் பெட்டியின் எண்ணெய்ப் பிசுக்குகளைத் துடைத்து முடிச்சாச்சு. கடைசி கிளாஸைக் கூட கழுவியாச்சு. யோசித்துக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான் சேது. பட்டணத்திலிருந்து வேலை முடிந்து வீடு திரும்பிய அப்புருவும், சேதுவோடு சேர்ந்துகொண்டான். வழக்கமாக இருவரும் வெட்டிப் பேச்சை ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாது. போன வாரம் ராஜா கொட்டாயில் பார்த்த ரஜினி படத்தில் ஆரம்பித்து, வயக்காட்டுக்கு வரப்பு வெட்டிய கதை, பனங்காட்டுல நுங்கு சீவிய கதை, ஊருல யாருக்கு யாரு கூட வம்பு, யாருக்கு யாரோட சிநேகிதமென்று நீண்டுகொண்டே போகும். புறணியில் பெண்கள் தோற்றுப் போவார்கள். அதிலும் கள்ளுக்காட்டுப் பக்கம் செத்த நேரம் ஒதுங்கிவிட்டால் அவ்வளவுதான். ராத்திரி ரெண்டு பேரும் வீடு சேர மாட்டார்கள்.

டீக்கடையிலிருந்து அல்லிக்குளத்தைத் தாண்டிப் பொறவாய்க்காலைக் கடந்தால் அம்சம் மற்றும் முத்துவுக்குச் சொந்தமான கள்ளுக்காடு வந்துவிடும். அங்கிருந்து ரெண்டெட்டு தூரம் நடந்தால் முந்திரித் தோப்பு. அப்பறம் மகமாயி கோவில்தான். அதுக்குப் பின்னாடி நாலாவது மனை சேது வீடு, அதுக்கடுத்த மனை அப்புரு வீடு. இன்று அல்லிக்குளத்தைத் தாண்டும் வரை அப்புரு பேச்சுக்கு உம்ம் கொட்டிக்கொண்டு மட்டுமே வந்தான் சேது. வாயில் பீடி ஒன்றைப் பற்ற வைத்துவிட்டு, தன் பணத்தேவையைச் சொன்னான்.

“ஒரு யோசனை இருக்கு மாப்ள..” என்றான் அப்புரு. வாயிலிருந்த பீடியைக் கையிலெடுத்துப் புகையை வெளியே தள்ளினான் சேது.

“சொல்லு மச்சான்...”

“நாளன்னைக்கு ஆச்சி கோயில்ல சோக்கரு தாத்தா பேரன் காதுக்குத்து வருது...”

“ஆமா... நான்தான் கடா வெட்டுறேன்...” திரும்ப பீடியை வாயில் வைத்து ஒரு இழு இழுத்தான் சேது. வாய்க்காலுக்கு அந்தப் பக்கம் ஒரே தாவாகத் தாவினான் அப்புரு. முழங்கால் அளவு தண்ணீரில் இறங்கி மறுபக்கம் நடந்து வந்தான் சேது.

“ஆட்டுத் தலையும் காலும் வெட்டுறவனுக்குத்தான...???” வாயிலிருந்த பீடியைப் பக்கத்திலிருந்த ஒத்தப்பனை மரத்துக் கறுக்கிடுக்கில் சொறுகிவிட்டு வேட்டியை மேலே ஏத்திக் கட்டிச் சேற்றுக் காலை

அலம்பினான் சேது.

“ஆமா மச்சான், ஆனா அது பத்தாது...” என்று சேது சொல்ல, இருவரும் கள்ளுக்காடு பார்த்து நடக்கத் தொடங்கினர்.

“அது பத்தாதுதான் மாப்ள, சோக்கரு சொந்த பந்தமெல்லாம் கூடி இருவது கடாக்கு மேல வெட்டுதுங்க. தோல உரிக்கிறவன் கொடல கழுவறவனுக்குக் காலு குடலு போக, தலை உனக்குத் தான???”

“ஆமா...”

“நாளைக்கு வெட்டுற நீ ஒரேயோரு காரியஞ்செய்யி, தலையோட சேத்து நாலு வெரக்கட கழுத்தைச் சேத்துப் போடு, கடாவுக்கு அரக்கிலோனாலும் போதும். மொத்தமா கசாப்புக் கடைல போட்டுக் காசு வாங்கிருவோம்.”



“ஆனா இது ஏய்ப்பில்லயா? சாமிக்குத்தம் ஏதும் ஆயிப்போனா?”

“எல்லாம் யாவாரம்தான் மாப்ள... தொழில் தந்திரம் இதெல்லாம், பூ விக்கிற பொம்பள மொழம் போடுற மாதிரி, காய் விக்கிறவன் அளந்து போடுற மாதிரி, ஒன்னும் தப்பில்ல...”

‘இது ஏச்சு சம்பாதிப்பதில்லையா!?’ ‘அப்புரு சொன்னதும் சரிதான்... இதெப்படி தப்பாகும்?? இது தொழில் தந்திரம்தானே!?!!!’, இரவெல்லாம் உறக்கமின்றி ஒரே சிந்தனையாக ஓடிக்கொண்டிருந்தது. கட்டிலில் பல முறை புரண்டு படுத்தான். இழுத்துப் போத்திக்கொண்டான். சுற்றிக் கேட்கும் தவளைகள் சத்தத்தையும், ஈசல்கள் ரீங்காரத்தையும் கொஞ்ச நேரம் கவனித்தான். நட்சத்திரங்களை முறைத்தான். ‘இதெல்லாம் தப்பில்ல’ என்று தனக்குத் தானே சுய ஆறுதல் சொல்லித் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள முயற்சித்தான். ஆனாலும் தூக்கம் வந்த பாடில்லை.

கொஞ்ச நேரத்தில் வீட்டுக்குப் பின்னால் ஜனங்கள் கூச்சல் இரைத்தது. அரக்கப்பறக்க ஒரு கூட்டமே குடம் வாளியோடு ஓடிக்கொண்டிருந்தது. என்னயேதென்று கூடவே சேதுவும் எழுந்து ஓடினான். பொறைவாய்க்கால் வழித்தடம் ஓரமாய் இருந்த அம்சம் வீட்டு ஒத்தப்பனை மரம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. ஒத்தப்பனை மரம் என்பது பனந்தோப்பிலிருந்து வெளியே தனியாக நிற்கும் எல்லை மரம். தோப்புக்கு வழிகாட்டி அதுதான். அந்த ஒற்றை மரத்தில் கருப்புத் துணி கட்டியிருந்தால் பின்னாலிருக்கும் தோப்பில் கள் இறக்கப்படுகிறது என்பது குறிப்பு. கள் இறக்கும் கூலிகள் அதை வணங்கிவிட்டு மரம் ஏறுவதும் ஒரு மரபு.

ஊரே கூடிவிட்டது. ஆளுக்கொரு வாளியில் தண்ணீரை வாரி, தூரத்திலிருந்து வீசிப் பார்த்தனர். ஒரு சொக்கப்பனை அரக்கனைப் போல அடியிலிருந்து தலை வரை அனல் பற்றி எரிந்தது மரம். பனந்தலையை அணைப்பது அத்தனை எளிய காரியமில்லையே!! கறுக்குகள்

வெடித்துப் பொறிகளாக நாலாப்பக்கமும் சிதறின. பொறிகள் விழும் திசையெல்லாம் சிறுசிறு தணல்கள் பற்றின. சுற்றியிருந்த தணல்களை அணைக்கவே ஜனம் பெரும்பாடு பட்டுக்கொண்டு இருந்தது.

“டேய்... ஓடிப்போய் முதல்ல ஊரு முக்குலருக்கற ட்ரான்ஸ்பாரத்த அணைங்கடா...” தன் சின்ன பையன் செந்திலை ஏவினார் சங்கர்.

“சரிப்பா” என்று ஓட்டம் பிடித்தான் செந்தில்.

“தூரத்துலருந்தே தண்ணிய வீசுங்கடா, பக்கத்துல போயிக் கறுக்கு தெறிச்சா கண்ண ஒத்திடும்” விடலைகளை வேலை வாங்கிக்கொண்டு இருந்தார் சுபாஷ் வாத்தியார். முத்து ஒரு பக்கம் வாளியோடு ஓடிக்கொண்டு இருந்தார். அம்சம் தலையில் அடித்துக்கொண்டு அழுதுகொண்டு இருந்தாள். கூட்டத்தில் ஒருவன் “காலைல ஆச்சிக்குக் கேட்டதுக்கு ஆட்ட தர மாட்டேன்ன இப்ப பாரு ஆச்சி கொள்ளி வெச்சுருச்சு” என்றான்.

அதைக் காதில் வாங்கி, ஆதங்கத்தை அடக்க முடியாது விசும்பினாள் அம்சம். தோளில் சாய்த்து அம்சத்தை வீட்டுக்கு அழைத்துப் போனாள் கோதை. நூறு பேரில் ஒருவனாய் சேதுவும் வாளியும் கையுமாக அங்குமிங்கும் ஓடிக்கொண்டு இருந்தான். ஊரே கூடித் தீயை அணைக்க விடியற்காலை ஆகிவிட்டது. பட்டவிளாகம் அல்லிக்குளம் தாண்டி ஏழாம் ஊரு காப்புக்குடி வரை மேல்வானத்தில் புகை மூட்டம் தெரிந்தது. ராமுச்சுரும் கூடித் தீயணைத்ததில் காலை ஒன்பது மணி வரை பலரும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை.

எதையோ பறிக்கொடுத்தவள் போல் அடுப்பங்கறையில் உக்காந்திருந்தாள் அம்சம். டீ போட்டு ஒரு டம்ளரில் கொண்டு வந்து அம்சத்திடம் கொடுத்தாள் கோதை. நிமிர்ந்து கோதை முகத்தைப் பார்த்தாள் அம்சம். என்ன நினைத்தாளோ தெரியாது. நேராகப் பட்டிக்குப் போய் அந்தச் சூலாட்டை நடத்திக்கொண்டு போனாள். பட்டாளத்தார் வீட்டு வாசல் வேப்பமரத்தில் கட்டிவிட்டு யாரிடமும் எதுவும் பேசாமல் வீட்டுக்குப் போய்விட்டாள். காரணத்தைக் கணித்துவிட்ட பட்டாளத்தார் இதற்காக சந்தோசப்படவில்லை.

“ஆட்டுக்குக் காசக் குடுத்து விட்டுடுங்க” என்று பட்டாளத்தார் கையில் காசைத் திணித்தாள் நளாயினி. காசை எடுத்துக்கொண்டு நாளைக்கு நடக்கப்போகும் சூலாடு குத்துக்கு சாமான் வாங்க, கடைத்தெரு கிளம்பினார் பட்டாளத்தார். சுபாவின் மகிழ்ச்சிதான் ஒருநாள் கூட முழுசாக நீடிக்கவில்லை. உன்ன போய் நம்பினேன் பாருனு ஆச்சியை ஏசினாள். “உன் காதுக்கு என் பேச்சு கேக்காது, ஆனா மூச்சுக்கு முழு ஆடு கேக்குதா?” என்று புலம்பினாள். ஆடு கிடைக்காத போதென்றாலும் பரவாயில்லை. இப்போது ஆடே வீடு தேடி வந்திருக்கிறது. இப்போது போய் வேண்டாம் என்றால் அப்பா கேக்கக் கூட மாட்டார். ‘ஆட்டை அவிழ்த்துவிட்டுத் துரத்தி விட்டுவிடலாமா!!! அவிழ்த்துவிட்டால் நேராக அம்சம் பெரியம்மா வீட்டுக்குத்தான் போகும். அப்பறம் திரும்ப இங்கதான் வரும். வேறென்ன பண்ணலாம்?!?!’ சுபாவுக்கு ஒரு யோசனையும் கிடைக்கவில்லை.

கடைத்தெரு போன பட்டாளத்தார் திரும்ப வந்தார். “என்னங்க ஆச்சு??” என்று வினவினாள் நளாயினி. “காசக் கொடுத்ததுக்கு அம்சம் வாங்க மாட்டேனுடுச்சு, எஞ்சாமிக்குத்தான!? சும்மா வெச்சுக்கனுது... இனாமா வாங்கிப் பொலி போட நாம என்ன கீழயா கிடக்கோம்? இல்ல அத சாமிதான் ஏத்துக்குமா!?? முத்து கைல காசக் குடுத்துட்டு வந்து சேந்துட்டேன்,” என்ற பட்டாளத்தார் சொம்பை வாங்கித் தண்ணீரைக் குடித்தார்.

“பூசாரிகிட்ட பேசுனிங்களா??” தண்ணீர் குடிக்கும் வரை காத்திருந்து கேட்டாள் நளாயினி.


“அதெல்லாம் பேசியாச்சு... சோக்கரு கடாவெல்லாம் சேதுதான் வெட்டுறானாம், அவனே சூலாடும் குத்தி வெச்சுருவான்னாரு... நீ வீட்ட அலசி விட்டு மத்ததத் தோது பண்ணு, நாளைக்குக் காலைல கோயிலுக்குப் போகணும்...” என்று பட்டாளத்தார்

சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்த சுபாவுக்கு இருந்த கொஞ்சநெஞ்ச நம்பிக்கையும் போய்விட்டது. இனி அந்த ஆடும் குட்டியும் பலியாகியே தீரும், வேறு ஏதாவது நம்மால் செய்ய முடியுமா??? வாய்ப்பேயில்லை. ஆனாலும் ஒரு சின்ன நம்பிக்கை இருந்தது. அந்த ஆடு எப்படியாவது பலியாகாமல் தப்பித்து விடுமென்று அரைகுறையாக நம்பினாள். மறுபடியும் ஏசிய ஆச்சியையே வேண்டிக்கொண்டாள். "ஏன் ஆத்தா சோதிக்கிற??? அந்த ஆட்டை விட்டுத்தான் தொலையேன், நீ வேற என்ன கேட்டாலும் தாரேன்..."

ராத்திரி முழுக்கத் தூங்காமல் சுபாவின் மனசுக்குள் ஒரே அலைக்கழிப்பு. விடியும்பொழுது பூசைக்கு எல்லாம் தயாராகிக்கொண்டு இருந்தது. ஆளுக்கொன்றாகக் கையிலெடுத்துக் கொண்டு கோயில் பக்கம் நடந்தனர். சுபா வீட்டில் தனியாகத்தான் இருந்தாள். ஏதாவது நடக்க வேண்டும், மழையோ, இடியோ, கோவில் குடிசை பத்தி எரிஞ்சாலும் பரவாயில்லை... இன்று எப்படியாவது அந்த ஆடு குத்துப்படாது தப்பி விட வேண்டுமென்று மறுபடியும் மறுபடியும் வேண்டிக்கொண்டே இருந்தாள்.

கோவிலில் கூட்டம் கூடியது. உருமிச் சத்தம், கொட்டுச் சத்தமென்று ஒரே அலப்பரை. அங்காளிப் பங்காளி மருளாளிக கூடினர். தோரணம் கட்டுவது, கொழா கட்டுவது லைட்டு கட்டுவதென்று ஆளுக்கொரு வேலை. கோவிலுக்குப் பின்புறம் மாமன் மச்சான்கள் கூடி கள்ளு குடித்துக்கொண்டு இருந்தனர். முறைப்பெண்களைப் பசங்க சிலர் சுத்துப் போட்டுக்கொண்டிருந்தனர். சோக்கர் தங்கராசின் மருமகள்கள் இருவரும் பொங்கல் வைத்துக்கொண்டு இருந்தனர். வாளி மோரைத் தூக்கிக்கொண்டு கிளாஸில் எல்லாருக்கும் கொடுத்துக்கொண்டு இருந்தான் சங்கர் மகன் செந்தில். கட்டி வைத்திருந்த இருவது ஆடுகளுக்கும் மாலை போட்டுச் சோடித்துக்கொண்டு இருந்தான் சேது. தூரத்திலிருந்து சேதுவைச் சொக்க வைப்பது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்தாள் தேவி. அமைதியாக ஒரு ஓரமாக உக்காந்திருந்தாள் அம்சம்.

காது குத்து முடிந்து எல்லா ஆடுகளும் ஆச்சிக்கு முன் கொண்டு வரப்பட்டன. அரிவாளில் பட்டை அடித்து பூ சுற்றி சூடம் காட்டினான் சேது. முதல் ஆட்டைக் கொண்டு வந்து தலையில் மஞ்சத்தண்ணி தெளித்தார் சேகர். ஆடு தலையைச் சிலுப்பியது... ஓங்கிய அரிவாளை இறக்கினான் சேது. 'பொத்த்த்...' வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த தாயொருத்தி பக்கத்தில் இருந்த தன் தலைச்சன் பிள்ளையைக் கண்களை மூடி வயிற்றோடு அணைத்துக்கொண்டாள். கூடியிருந்த பெண்கள் குலவையிட்டனர். காற்றசைவுக்குக் காம்பொடிந்து விழுந்த கனிந்த பழத்தைப் போல எந்த அதிர்வுமின்றி வெடுக்கென விழுந்தது ஆட்டின் தலை. முண்டத்தின் கால்களை வெட்டி ஆட்டுத் தலையின் வாயில் திணித்தான் சேது. அடுத்து இரண்டாவது ஆடு கொண்டு வரப்பட்டது... தலையில்



மஞ்சத்தண்ணி தெளித்தார் சேகர்... அப்புரு சொன்னது போல் சேதுவுக்கு ஆட்டின் தலை நாலு வெரக்கட நீளமாகவே தெரிந்தது. 'பொத்த்...'

கூட்டத்திலிருந்த அம்சம் திரும்பிப் பார்த்தாள். அவளது சூலாடு கடைசியாக நின்றுகொண்டு இருந்தது. அந்தச் சம்பவத்தைக் காண மனமில்லாதவளாக அங்கிருந்து கிளம்பி வீடு பார்த்து நடக்கத் தொடங்கினாள் அம்சம். கோவிலிலிருந்து விலகிச் செல்லச் செல்லப் பெண்களின் குலவை சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. கண்களில் நீர் இல்லை, ஆனால், தொண்டையைக் கவ்வுவதைப் போலொரு அழுகை, ஆத்திரம். தலையில் முக்காடு போட்டுவிட்டு வந்து வீட்டைச் சேர்ந்தாள் அம்சம். இன்னொரு பக்கம் கல்லுவீட்டு வாசலிலேயே காத்திருந்தாள் சுபா. கடா வெட்டு இந்நேரம் முடிந்திருக்கும். எல்லாரும் இந்நேரம் வீடு வந்திருக்க வேண்டும். இப்போது கூட மனதுக்குள் ஒரு சின்ன நம்பிக்கை, எதாவது நடந்து அந்த ஆடு தப்பித்துவிடாதா என்று!

தேவி அழுதுகொண்டே வந்தாள். "ஏன் அழுற? என்னாச்சுடி?" என்றாள் சுபா.

"கடா வெட்டுல சண்டையாகிடுச்சு. உங்கப்பா, மணிமாறன் மாமா, செல்லதொர மாமா எல்லாம் சேந்து சேதுவ நல்லா அடிச்சுட்டாங்க."

"என்னாச்சு?? ஏன் சண்ட?? அழாம சொல்லு..."

"எல்லாக் கிடாவும் வெட்டியாச்சு... கடைசியா, சூலாடுக் குத்துக்கு உங்க வீட்டு ஆடு நின்னுட்டு இருந்துச்சு. அப்போ, வெட்டி போட்ட எல்லா ஆட்டுலயும் தலைலருந்து கழுத்துக்கு நகர்த்தி சேர்த்து வெட்டிருக்கறதப் பாத்துட்டு செல்லதொர மாமா சேதுவத் திட்டிட்டு அடிச்சுட்டாரு. ஆச்சிக்குப் போடுற படையலையே ஏய்க்கிறியா திருட்டுப்பயலே, அந்தப்பயலே, இந்தப்பயலேனு ஏச்சுப்பாட்டு வேற... கூடவே எல்லாரும் சேந்துக்கிட்டாங்க... மணிமாறன் மாமா வேற குடிச்சுருந்தாரு... குடிச்சுட்டு நல்லா அடிச்சுப் போட்டுட்டாரு அவன.. அப்பறம் சூலாட்டுல கைய வெச்சா கைய வெட்டிப்புடுவேன் போடானு சொல்லி அவன சட்டயக் கிழிச்சு வெரட்டி விட்டாங்க பாவம்..." என்ற தேவியின் கன்னங்கள் அழுது வீங்கி இருந்தன.

தோழியின் சிநேகிதன் கூட்டத்தில் உதைபட்டதைப் பற்றியெல்லாம் சுபாவுக்கு இம்மியும் கவலையிருந்ததாய்த் தெரியவில்லை. காத்திருந்து தாங்க முடியாதவளாய் ஆட்டைப் பற்றி விசாரித்தாள்.

"அப்பறம் என்னாச்சு??"

"அப்பறம் என்னாச்சு?? அருவா வீச ஆளு இல்லாம எங்க சூலாட்ட விட்டுட்டாங்களா??"

"இல்ல.... சேதுவ வெரட்டிட்டு சேகர் மாமாவே படையல் போட்டு, உங்க சூலாட்டக் குத்தி போட்டாரு... பாவம் சேது... அவ.....னுக்கு...... நல்.........ல..... அ.........டி...... எ.......ன்.....ன...... பண்....ணு........வா.....ன்..." விசும்பினாள் தேவி. கண்கள் சொருகிக் கீழே சரிந்தாள் சுபா...

------------------

இந்தக் கிடா வெட்டுப் படையல் நடந்து ஏழு வருடங்கள் ஆகின்றன. இப்போதும் ஒவ்வொரு வருடமும் கிடா வெட்டு நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், அதற்குப் பிறகு சேதுதான் ஒருமுறை கூட கோவில் பக்கம் ஒதுங்கக் கூட இல்லை. அவனுக்கு அந்தக் கோவில் பக்கம் போவதே பிடிக்காமல் போனது. அம்சம் அதற்குப் பிறகு தான் வளர்த்த முப்பது ஆடுகளையும் விற்றுவிட்டு, ஆடு வளர்ப்பதையே நிறுத்திவிட்டாள். எல்லாவற்றிலும் முக்கியமாக அதற்குப் பிறகு சுபாவுக்கு மாடு முட்டும் கனவு ஒருமுறை கூட வரவேயில்லை. ஆனால், அதற்குப் பதிலாக தினசரி கனவில் ஒரு ஆட்டுக்குட்டி வந்து 'மே...மே...' என்று கத்திச் செல்கிறது. ■

**இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை**


படைப்பு
படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற படைப்பாளி **இ.செல்வ ராஜ்** அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17 - 03 - 2023
நாள்

எழுத்தாளர் பெருமாள் முருகன்
(நடுவர்)

**இ.செல்வ ராஜ்**



# விருத்தசேதனம்



ஓவியங்கள் - திண்டுக்கல் தமிழ்ப்பித்தன், அழ.ரஜினிகாந்தன்

அநேகமாக இந்த முப்பது வருடத்திலே என் மனைவி முதல் தடவையாக குழப்பம் அடைந்தது முகத்தில் எதிரொலித்தது.

'என்ன சொல்றீங்க? சுன்னத் ஆ?.. கத்னாவா?.. விருத்தசேதனம்? சர்கம்சிஷன்?..'

'ஆமாம் புனிதா. எனக்கு அது பண்ணணுமாம். சுகர் கம்ப்ளெய்ன்ட் 300க்கும் மேல இருக்கறதால டாக்டர் பண்ண மாட்டேன்னு சொல்லிட்டாரு. சுகர் சிகிச்சை பண்ணபிறகுதான் செய்ய முடியும். எனவே சுகர் டாக்டரைப் பார்த்தேன்.. அவரு மாத்திரையோட இன்சுலின் எடுத்துக்குங்க. சுகர் வேகமாகக் குறையும்னு சொல்லி எழுதிக் கொடுத்துட்டாரு.'

நான் என் மனைவியிடம் நான்ஸ்டாப்பாகச் சொன்னதை அவளால் கிரஹிக்க

முடியவில்லை. பெருமூச்சுவிட்டாள். நான் எனது பேண்ட்டைக் கழற்றிப் பக்குவமாக அசைந்து நடந்து ஜட்டிமேல் மோதாமல் கோட் ஸ்டாண்டில் மாட்டினேன். பிறகு சட்டையையும் கழற்றி மாட்டிவிட்டு ஜட்டியை அவிழ்க்கப் போனேன். அது சிறிது கறையுடன் கெட்ட நாற்றம் அடித்தது. கூடவே டாக்டர் மருந்து போட்ட ஸ்மெல்லும் வந்தது. கழற்றி அழுக்குக் கூடையில் போட்டேன். லுங்கிக்கு மாறினேன்.

எனது அறையில் வந்து நுழைந்து 'என்ன சொல்றீங்க நீங்க? இன்னொரு தடவை விளங்கற மாதிரி சொல்லுங்க' என என்னிடம் கேட்டாள் புனிதா.

'எனக்கு யூரின் போற இடத்துலே நைட்ல சொறிஞ்சு சொறிஞ்சு புண்ணாயிடிச்சிலே.. உன்கிட்டேகூட காட்டினேனே அழுக்கும் சீழ் ரத்தமுமாய் அந்த சர்ஃபேஸ் துர்நாற்றத்தோட. அதை ட்ரீட்மெண்ட் எடுக்க சம்பந்தப்பட்ட டாக்டர் சந்திரனிடம் போனேன், காட்டினேன்...'

'என்னது காட்டினீங்களா?'

'ஆமாம்.'

அவர் பார்த்துட்டு 'இது சில பேருக்கு சுகர் அதிகமாகிவிட்டால் வரும். நீங்கள் சுகர் அளவு 160க்குக் குறைச்சு செக் - பண்ணிட்டு வாங்க. பிறகு டேட் தர்றேன். ஆபரேஷன் பண்ணிடலாம்' என்றார்.

'சார் வலிக்குமா? எனக்கு 54 வயது ஆகுது சார்.. இரண்டு வயசுப் பொண்ணுங்க இருக்காங்க...'

'என்ன பண்றது பாருங்க.. அந்த இடத்துலே இவ்வளவு அழுக்கு சேர்த்து வச்சிருக்கீங்க..' பஞ்சாலத் தடவி எடுத்துக் காண்பிச்சாரு... 'வலிக்காதுங்க. எறும்பு கடிக்கற மாதிரிதான் இருக்கும். பெண்கள்கிட்டே சொல்லாம மறைக்காதீங்க. இது சர்க்கரை நோய் கட்டுப்பாடு இல்லாததால் வருவது. வேற வெனீரியல் டிஸீஸ் இல்லியே...' எனச் சிரித்துக்கொண்டே சொன்னார் டாக்டர்.. 'ஒருவாரம் கழித்து வந்து டேட் வாங்கிப்போங்க.'

எனக்கு அவர் அந்த எனது உறுப்பில் பஞ்சு வைத்துத் தடவி மருந்து வைத்துச் சின்னதாகத் துடைச்சுவிட்டது குறுகுறுப்பாகவும் இன்னும் அந்த உணர்வு வேணும்னு கேட்கிற குப்பை கேட்பு ஆகவும் ரணம் இருந்தது.

இன்னமும் சொன்னார். 'அதை சுன்னத் பண்ணி மேல்தோல் முனை எடுத்துட்டா சீழ் பரவாமல் புண் ஆறிவிடும். மறுபடியும் வராம இருக்க சேனிடேஷன் முக்கியம்'னு சொன்னார். சுன்னத்? கத்னா? இந்த வயசுல கடவுளே எனக்கு இந்தச் சிகிச்சை தேவையா? சிறு வயதிலே எங்க ப்ரண்ட்ஸ் செக்ஸ் இம்ப்ரூவ்மெண்டுக்கும் எய்ட்ஸ் வராம இருக்கறதுக்கும் பண்ணிக்கச் சொன்னாங்க. எனக்குக் கோபமா வரும். இயற்கையை எதிர்த்துப் போகக்கூடாது என்பதில் எனக்கு உடன்பாடு உண்டு. ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இதைச் சிறுவயதிலேயோ பருவகாலத்திலேயோ ஒரு விழாவாகச் செய்வார்கள். சுன்னத் கல்யாணம். உலகத்துலேயே 68 விழுக்காடு ஆண்மக்கள் இசுலாமிய மதத்திலே விருத்தசேதனம் செய்தவர்களாக இருக்கிறார்கள் எனக்கூடப் படித்திருக்கிறேன். இருந்தும் விரை ஆப்ரேஷன் ஹார்ட் ஆப்ரேஷன் கிட்னி ஆப்ரேஷன்-னு சொல்லாம அழகுதமிழ்ல விருத்தசேதனம்னு வச்ச அந்த மகராசனைக் கையெடுத்துக் கும்பிடணும். சின்னபுள்ளைல வரிசையாகக் கொல்லைப்புறத்துல ஒரு சாக்கடையோரம் டூ பாத்ரூம் போவோம். நாலஞ்சு ஆம்பிளப் பசங்களோட அந்தரங்க உறுப்பு அங்கே ஆய்வு செய்வோம். நீளம், அகலம், முனை பெருசு சிறுசுன்னு சில பேருக்கு அந்த மொட்டு அவிழ்ந்து உள்ளே தள்ளிப்போகும் வரும். ஆனால் எனக்கெல்லாம் அப்படியில்ல, ரொம்பக் கூச்சப்படுவேன்.

'கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம அப்படி என்ன யோசனையோ?' எனது தோளை உலுக்கினாள்.

‘ஆமாம்மா. நான் என்னமோ ஆயிட்டேன்.’

‘சொல்லுங்க. பாரத்தை என்மீது இறக்கிவைங்க.’ புனிதாவின் ஆறுதல் வார்த்தை இதமாக இருந்தது. ‘பக்குவமாக மாத்திரைகளோட இன்சுலின் போட்டு சுகர்லெவல் குறைச்சதும் அவர்கிட்டே டேட் வாங்கப்போகணும். நம்ம பொண்ணுங்க காலேஜ்ல இருந்து வந்ததும் சொல்லும்மா.. உங்க அப்பாவுக்கு நோய்த் தாக்கம்னு. என்னைத் தப்பா நினைச்சிடப்போகுது பிள்ளைங்க...’

மறுநாள். முன்பு மாதிரி பைக் ஓட்ட முடியாமல் ஆட்டோவில் பயணம் செய்து நான் வேலைபார்க்கும் அலுவலகம் சென்று அடைந்தேன். ஆபீஸ் வேலையைக் கொஞ்சம் எச்சரிக்கையுடன் செய்தேன். இன்சுலின் மருத்துவ அறிவுரையுடன் போட்டுக்கொண்டதால் பிறப்புறுப்பின் வலி தாக்கம் அன்று மாலை வரை சற்று குறைவாக இருந்தது. இருந்தும் இது குறித்து யாரிடமாவது கேட்கத் தோன்றியது. ராபின்சன் எனது ஆபிஸ்மேட். நிறைய செக்ஸ் பேசுவான். உலக விஷயம் அத்துபடி. அவனைக் கேண்டீனுக்கு அழைத்துப் போனேன். மெதுவாக ஆரம்பித்தேன். எனக்கு இப்படி ஆகிவிட்டது என்று. அவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

‘என்னப்பா செல்வராஜ் சுகர்ல சிக்கிட்டியே. அந்தக் குறைபாடு மாத்திரம் என்ன என்ன செய்யும்னே யாருக்கும் தெரியாது. இன்றைக்கு மருத்துவத்திலே நல்லாக் கொடி கட்டிப்பறக்கிற மருந்து வணிகமாயிடிச்சு. சரி என்ன கேட்க வந்தே, கேளு சொல்றேன்.’

‘இது உயிர் நிலையா இருக்கே. இதுவரை என் உடம்புல டாக்டர் கத்தி என்மேல் பட்டதே இல்ல. இப்ப முதல் தடவையா சிகிச்சை, பயமா இருக்குது...’

‘பயப்படாதே நண்பரே.. இப்பவெல்லாம் இந்தச் சிகிச்சை ஜூ ஜூபி. வலியே இல்லாம அந்த இடத்துல அனஸ்தீசியா தந்துட்டுப் பத்து நிமிடத்துல பண்ணி முடிச்சுடுவாங்க. ஒரு மணி நேரம் கழிச்சு அனஸ்தீசியா மருந்து பவர் இழந்ததும் ஏகவலி எடுக்கும். அதுமட்டும்



தாங்கிக்கோ. எறும்பு கடிக்கிற வலிதான்.. போதுமா?'

'போதும்பா.... என்னவோ ஏதோ பயந்துக்கிட்டு இருந்தேன். ஆமாம் இந்த சுன்னத் உங்க கிறிஸ்டியானிட்டியிலே எல்லாம் கிடையாதா?'

'என்ன அப்படி கேட்டுட்ட.. இதன் வரலாறு ரொம்பப் பெருசு. இந்த சர்கம்சிஷனை விருத்தசேதனம் அல்லது ஆண்விருத்த சேதனம்னு சொல்வாங்க. முஸ்லீம்கள் கத்னா-சுன்னத் என்று பெயரிட்டுக்கொண்டனர். ஆண்குறியின் முன் தோலை நீக்கும் சமயச்சடங்கு அல்லது அறுவைசிகிச்சை இது. சமயம் மற்றும் கலாச்சார ரீதியிலும் செய்ற இந்த விருத்த சேதனம் சுகாதார நோக்கிலும் பண்றாங்க. வடகிழக்கு ஆப்ரிக்கப் பழங்குடி மக்கள்தான் இந்த முறையை முதன்முதலில் செய்தவங்க, நடைமுறைக்குக் கொண்டு வந்தவங்க. அதன்பின் ஆபிரகாமிய மதங்களான யூதம் மற்றும் இசுலாம் ஆகியவற்றில் இது புனிதச்சடங்கு ஆக நடைமுறைப்படுத்தப்பட்டது சார். இதுக்கு விழா எடுத்தவங்க முதல்லே நாங்கதான். இயேசுவின் விருத்தசேதன விழா என்பது இயேசு கிருத்துவுக்கு யூத மரபுப்படி குழந்தை பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்யப்பட்டு இயேசு எனும் பெயரிடப்பட்ட நாளினை நினைவுகூரும் விதமாகக் கொண்டாடப்படும் ஒரு கிருத்துவ விழாவாகும். தங்கமரபு 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கதைகளில் இந்த நிகழ்வு இயேசு முதன்முதலில் ரத்தம் சிந்திட மனுகுலத்தின் மீட்புச் செயலைத் துவங்கியதற்காக முக்கியத்துவம் பெறுகிறது.'

'சரி போதும் ராபின்சன். இவ்வளவு வரலாறா?'

'முடிச்சுடறேன். செல்வராஜ் இது பண்ணிக்கிட்டா வலிப்பு - கனவு ஒழுக்கு (சொப்னஸ்கலிதம்), கண்பார்வைக் குறைபாடு ஆகியவற்றைத் தடுக்குதுன்னு ஒருகாலத்துல ஆய்வு செஞ்சுக் கண்டுபிடிச்சாங்க. அதுசரி நல்லது பண்ணிக்கோங்க.'

நான் கேட்டேன்.. 'இது தமிழ்நாட்ல இருந்ததா?'

'ஒருகாலத்துல பல ஜாதிகள்கிட்ட இனத்தார்கிட்ட தொடர்ச்சியாக விருத்தசேதனம் இருந்தது. தற்போது பிறமலைக்கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தொன்றுதொட்டு இதை ஒரு விழாவாக வழிவழியாகச் செய்து வருகிறார்கள்.'

நாங்கள் இருவரும் வேறு வேறு பிரிவுகளில் பணிக்குப் போய் அமர்ந்தோம். இப்போது எனக்குப் பயம் கொஞ்சமாய்க் குறைய ஆரம்பித்தது. வேகமாக ஓடியது ஒரு வாரம். ஆவாரம்பூவுடன் நீரில் ஊறவைத்த வெந்தயம் எல்லாம் கைகொடுக்க சர்க்கரை அளவு 150ஐக் குட்டி கரணம் அடித்து எட்டிப்பிடித்தது. டாக்டர் சந்திரன் குறித்துக் கொடுத்த ஆகஸ்டு 8ஆம் தேதி மதியம் 4 மணி. அந்த மருத்துவமனை எனக்கு கவுன் போர்த்தியது. வில்லன் கணக்காய்த் தோற்றம் கொண்ட ஒரு மீசைக்காரப் பேர்வழி என்னை பாத்ரூம் பக்கம் தள்ளிக்கொண்டு போனான். என் பின்னால் வந்த புனிதா, மகள்கள் இருவரையும் வெளியே போயிருக்கச் சொன்னாரு. அவரு யாருன்னே எனக்கு அறிமுகம் ஆகலே. என்னை அழுக்கான ஒரு இடத்தில் படுக்கச் சொன்னான். கவுனோட படுத்தேன். படு கூச்சம். எனது பிறப்புறுப்பு சுற்றித் தண்ணீர் மசாஜ் செய்தார். 10வது தடவையாகப் பயன்படும் போலிருக்கு அந்த பிளேடு. முடியை அகற்றினார். வலியோ வலி. பிராணனை போகும் வலி. துடிதுடித்துப் போனேன். 'என்னங்க, புது பிளேடு போடக்கூடாதா?' என்றேன். 'எழுந்துக்க, எடு நூறு ரூபாய்' என்றார். வெளியே எனது மனைவியைத் தரச் சொன்னேன்.

அறுவை சிகிச்சைக் கூடம். சுற்றிலும் ஆயுதங்கள் புடைசூழ நான் நடுநாயகமாகக் கிடத்தப்பட்டேன். நண்பன் ராபின்சன் நினைவுக்கு வந்தான். எறும்புக்கடி வலிக்குமோ என்ற அடிவயிறு பிசைதல். டாக்டர் சந்திரன் மற்றும் நர்ஸ்கள். விளக்குகள் பளிச்சிட்டன.

'செல்வராஜ் ஐந்தே நிமிடம் வலிக்காது..

*நீங்க எங்கே வேலை பாக்கறீங்க? எத்தனை பிள்ளைகள், உங்க மனைவி பேரு என்ன?'*

*எறும்பு மொய்க்க ஆரம்பித்துவிட்டது போல உணர்வு. என் புண் சூழ்ந்த பிறப்புறுப்பை டாக்டர் ஏதோ செய்கிறார். நர்ஸ் அம்மா என்னை அன்பு வார்த்தைகளால் கேள்விகேட்டது. 'உங்க பொண்ணுங்க எத்தனையாவது படிக்கிறாங்க?'*

*'சக்சஸ், அவ்வளவுதான்.' செல்வராஜ் முடித்துக் கை கழுவினார்.*

*நம்பவே முடியல. வலியே இல்லை. கீழ்ப்பகுதி அடிவயிற்றில் முதலில் அனஸ்தீசியா ஊசி போடும்போது வலித்தது. அந்த இடம் இப்போது மரத்துப்போன நிலையில் கட்டு கட்டப்பட்டு இடுப்பு சுற்றித் துணி சுற்றப்பட்டிருந்தது. சிறுநீர் கழிக்க மட்டும் இடம்விட்டு பிளாஸ்டர். மாத்திரைகள் சகிதமாக மனைவியைப் பார்த்தேன். அவள் கண்களில் கண்ணீர்த்துளிகள். மகள்களைப் பார்க்கவே எனக்கு ஒரு மாதிரி இருந்தது. ஒரு ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தேன். மாடிபோர்ஷன் எனது. என்னால் படிக்கட்டுகள் ஏறவே முடியவில்லை. கட்டு கட்டி பிளாஸ்டர் போட்டது துருத்தியது. இரண்டு நண்பர்களைப் பக்கத்து வீடுகளிலிருந்து வரவழைத்துத் தூக்கிப் போகச் சொன்னோம். சல்லடைத்துணி (மருந்து இட்டது) பஞ்சு பிளாஸ்டர் சகிதம் பெரும் வரவேற்புடன் எனது சிறுநீரைக் கழித்தேன். சிறுதுவாரம் என்னைத் திட்டியது போலிருந்தது.*

*இரண்டு நாள் ஆச்சு. நாள் மெதுவாகப் போயிற்று. எனது மனைவியின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. `ஸ்வீட் திருடியாவது தின்னும்போது தான் பலமுறை தடுத்தும் தின்னியே.. பல அவஸ்தை` எனச் செல்லமாகக் கோபித்தாள். இரு மகள்களின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க சங்கோஜப்பட்டேன். சில மணித்துளிகள் வீட்டுக்குள்ளே நடந்து பார்த்தேன். ஏதோ வீ.டி நோய் பெற்றவன் காலை அகட்டிவைத்து நடப்பது போல் உணர்ந்தேன். ஆபிஸில், வெளியே எவன் எவன் எப்படி கேள்வி கேட்பார்களோ? அத்தனைக்கும் பதில் மனதில் இருந்து ஒரு ஃப்ளோ ஆக வரணுமே... விடுப்பு முடித்து ஒரு போர்வீரனைப் போல் புறப்படத்தான் நினைத்தேன். பொந்து எலிபோல் பதுங்கிப் பதுங்கி இறங்கினேன். ஆட்டோ வரை வந்து ஏற்றிவிட்டாள் புனிதா. அவள் இதழ்க்கடையோரம், என்னைப் பத்தி ஒரு புன்னகை. கடவுள் தண்டிச்சிட்டான் என்ற பேருவகை. படிக்கட்டு இறங்கும்போதுதான் எனது முன் கட்டு முந்திரிக்கொட்டை மாதிரி திணறித் திணறி இறக்கியது.*

*அலுவலகம். ஹாய் ஹலோ என்ற உதிரி வார்த்தைகள் ஒவ்வொருவர் வலது கைகளிலும் முளைக்க, ஒரிருவர், 'என்ன சார் ஆச்சு? இப்படி நடக்கிறீங்க? ஏதாவது ஆப்ரேஷனா?' விடாது கேட்ட சக நண்பர்களுக்கு.. 'ம்ம்.. ஆமாம்! சின்னதா பின்புட்டத்துலே கட்டி.. கட்டீ.. ஆப்ரேஷன்.' எப்படி எப்படியோ சமாளித்தேன். கண்காணிப்பாளர் இருக்கையில் அமர்ந்தேன். சிறிது நிமிடத்துக்கெல்லாம், பியூன் துரை வந்து 'சார் ட்டி ஓ கூப்பிடறாரு சார்..' என்றான். எனது கண்களைப் பார்த்து 'என்னா சுன்னத் பண்ணிக்கிட்டீங்களா?' என்றும் சுரீர்னு வார்த்தையால் கிள்ளிப் புன்னகைத்தான்.*

*'உனக்கெப்படித் தெரியும்?'*

*'ஹாங், உனக்குக் கிழிந்த பிளேடிலே ஷேவ் பண்ணினானே. அந்தத் தடியன் சொன்னான்.'*

*ஆபிசர் அறைக்குள் மெல்ல ஆடி ஆடி அசைந்து சென்று நின்றேன். 'வாங்க செல்வராஜ், என்ன 2 நாள் திடீர்னு லீவு போட்டுட்டீங்க. பட்டக்ஸ்ல கட்டியா?'*

*'இல்லை சார் அது வந்து அது வந்து' போட்டுடைத்துவிட்டேன் உண்மையை.. அவர் பகபகவெனச் சிரித்தார்... அது கேலியா? கழிவிரக்கமா? 'விருத்தசேதனம், நல்லா இருக்கே. அந்தப் பேரு நான் கேள்விப்பட்டதேயில்லை. சரியாப் போயிடும்ங்க. இந்தாங்க இந்த லட்டர் மேல உடனே ஆக்ஷன் எடுக்கச் சொல்லுங்க' என்றார். வெளியேறினேன்.*

டீ டைம். எனது நண்பர் ராபின்சன் ‘என்ன நண்பரே முடிந்ததா வி.சே.’ என்றார் நமுட்டுச் சிரிப்புடன். ‘வாங்க ராபின்சன் போய் ஒரு டீ சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்.’

ஐநூறு மீட்டர் தொலைவைக் கடந்தால்தான் நல்ல டீக்கடை வரும். நடந்தேன். என் எதிர்ப்படுபவர்கள், கிராஸ் பண்ணிப் போகிறவர்கள் அனைவரும் என்னை, நான் நடப்பதை ஊன்றிக் கவனிப்பவர்களாகவே சென்றார்கள். அப்படியா? அல்லது எனது மனம் எழுப்பும் சந்தேகமா? எங்கேயோ குதிரை ஓட்டி எசகுபிசகா பிடிச்சுக்கிட்டு வந்துட்டாரு போல. பரிகசிப்புகள் பிடுங்கித்தின்ன திரும்பி வந்து எனது இருக்கையில் கசப்புடன் அமர்ந்தேன். எனது நெஞ்சம் விம்மியது. என்ன மனிதர்கள்? எல்லாவற்றையும் குதர்க்கமாகப் பார்க்கும் மனோபாவத்தை மாற்றவே முடியாதா? அதன்பிறகு கட்டு அவிழ்க்கும் வரை டீக்கு போவதேயில்லை. ஃப்ளாஸ்க் எடுத்துவந்து குடித்துக்கொண்டேன்.

ஒரு வாரம் கழித்துக் கட்டு அவிழ்க்கப்பட்டது. மிகவும் வலித்த முனைப்பகுதி ஒரு தோல் மலர் போல் மலர்ந்திருந்தது. டாக்டர் ‘அழுக்கு சேராமல் நல்லாத் தேய்ச்சுக் குளிங்க. மார்கோ சோப் போடுங்க..’ என்றார்.

வீடு மாடி போர்ஷன் ஏறினேன். உறுத்தவில்லை. விருத்தசேதனத்தின் நன்மை தீமைகளை இதற்குள் ராபின்சன் பெரிய உரையையே பண்ணி எனக்கு உணர்த்தியிருந்தான். என்றைக்கும் இல்லாமல் இன்று சற்று சந்தோஷம் கூடுதலாகப் புனிதாவின் முகத்தில் தெரிந்தது. ‘ஏங்க... ரூமுக்கு வாங்க...’ அவள் அழைப்பில் ஏதோ இருந்தது. ‘ஒண்ணுமில்லை.. கத்னாவுக்குப் பிறகு உங்க ஆப்ரேஷன் பண்ண இடம் எப்படி இருக்குன்னு எனக்குக் காட்டறீங்களா?’ ‘நோ நோ.. இது ஹஸ்பென்ட் ஒன்லி இடம்.. காட்டமாட்டேன்.’ சொன்னேனே தவிர எனது அன்பு மனைவிக்கு அறுவை சிகிச்சை பண்ணிய இடம் காண்பித்தேன். அவளின் திடீர் வெட்கம் பல ஆயிரம் நுண்ணிய உணர்வுகளை வெளிச்சம் போட்டது. ■



மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை




எஸ்.நந்த குமார்

# தோற்றப் பிழை



ஓவியங்கள் - திண்டுக்கல் தமிழ்ப்பித்தன், அழ.ரஜினிகாந்தன்

“அவளைப் பாத்தேன்” என்றார் பாலசுந்தரம்.

“யாரை?” என்றார் சர்மா.

“மலர்விழி.”

“ஓ.. அடிக்கடி சொல்லுவியே. மங்களா டைப்பிங் ஸ்கூல். அந்தப் பொண்ணுதானே?”

“ஆமா.”

இருவரும் நடைப் பயிற்சியில் இருந்தார்கள். காலை நேர மெல்லிய குளிரையும் மீறி முதுகுப் பக்கம் டீ ஷர்ட்டில் வியர்வைத் தீவுகள்.

“எங்கே பாத்தே?”

“என்னோட நர்ஸிங் ஹோம்ல.”

மல்லிகார்ஜுனா டிபன் செண்டர் என்ற சிறிய கடைக்கு முன் நின்றார்கள். அது ஒரு சிறிய ஹோட்டல். இருபதடி அகலம் கூட இருக்காது. பெங்களூர் நகரில் பல தெருவோர

ஹோட்டல்கள் அப்படித்தான். இரண்டு நிமிடத்தில் காபி வந்தது. கூர்க் காபியின் மணம் கிறங்க வைத்தது.

“கிட்டத்தட்ட நாப்பது வருஷம் கழிச்சு மலரைப் பாக்கறேன்.”

“இன்னும் அவளை நீ ஞாபகம் வைச்சிருக்கியா?”

“சில முகங்களை மறக்க முடியாது. அதுவும் பால்ய பருவ முகங்கள் அப்படியே மனசுல பதிஞ்சிடும்.” - சற்று நேரம் கண்களை மூடி பழைய நினைவுகளில் இருந்தார் பாலசுந்தரம். தெருவில் ஒரு பெண் பலமான குரலில் போனில் பேசிக்கொண்டு போனாள். அதிகாலை அமைதியைக் கிழித்தது அது.

“மலர் இப்படி கத்தவே மாட்டா. எல்லாத்துலயுமே ஒரு மென்மை இருக்கும். கற்பூரவல்லி இலையைத் தொட்டிருக்கியா? மிருதுவா இருக்கும். மலர் அப்படிப்பட்டவ.”

“திடீர்னு மலர்விழி இப்போ எதுக்காக வந்தா?”

“ஈவினிங் பார்க்குக்கு வா. சொல்றேன்.”

பாலசுந்தரம் வீட்டுக்குப் போய்க் குளித்தார். அரை மணி நேரத்தில் அமெரிக்காவில் இருந்த மகளிடமிருந்து வீடியோ கால் வந்தது. பேரன் ஹக் செய்வது போல பாவனை காட்டினான். செயற்கைக்கோள் மூலமாக வந்த செயற்கை ஹக். சமையல்காரம்மா வந்தாள்.

“என்ன செய்யட்டும்?”

“மோர்க் குழம்பும் உருளைப் பொரியலும் செஞ்சுடுங்க. நைட்டுக்கு எதுவும் வேணாம். வெளில சாப்பிட்டுக்கறேன்.”

மனைவி பவானி ஆறு வருடங்களுக்கு முன்பாக கண்ணை மூடிப் போனதிலிருந்து இதே சமையல்காரம்மாதான். மாலை ஆறு மணிக்கு செவன்த் மெயினில் இருந்த பூங்காவுக்குப் போனார். பத்து நிமிடத்தில் சர்மா வந்தார்.

“சொல்லு. நீ சின்ன வயசுல மலரை லவ் பண்ணியா?” என்று கேட்டார்.

“இல்லே. லவ் பண்ணியிருந்தா இந்த த்ரில் இருந்திருக்காது. லவ் பண்றதை விட பண்ணாம இருக்கறது சில சமயம் சுவாரசியமா இருக்கும்.”

“அவ உன்னை லவ் பண்ணினாளா?”

“தெரியாது. ஆனா என்னை அவளுக்குப் பிடிச்சிருந்ததுன்னு தெரியும்..” பாலசுந்தரம் சொல்ல ஆரம்பித்தார்.

நாற்பது வருடங்களுக்கு முன்னால் அந்த ஊரில் இருந்தான் அவன். ஆரம்ப நிலையில் இருக்கும் முனிசிபாலிட்டி அது. ஊருக்குள்ளே ஒரு பிரதான தெருவில்தான் இருந்தான் பாலசுந்தரம். பி.யூ.சி படித்துக்கொண்டிருந்தான். சிலோன் ரேடியோ பிடிக்கும். ஒருமுறை “ஓ.. மாம்பழத்து வண்டு” பாடலை விரும்பிக் கேட்டவர்கள் வரிசையில் அவன் பெயர் கூட வந்திருந்தது.

ஒருநாள் மாலை நான்கு மணிக்கு வாசல் திண்ணையில் அமர்ந்து ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தான். அப்போதுதான் அவள் அவனைக் கடந்து தெருவில் போனாள். கையில் சுருட்டிய பேப்பர் இருந்தது. விருக்விருக்கென நடந்து போனாள். ஒரு மணி நேரம் கழித்துத் திரும்ப நடந்து வந்தாள். கையில் இப்போதும் சுருட்டிய பேப்பர். தெருவின் கடைக்கோடியில் ‘மங்களா டைப்ரைட்டிங் ஸ்கூல்’ என்று ஒன்று இருக்கிறது. உரிமையாளர் ரங்கநாதன் என்று துருப்பிடித்த போர்ட் ஒன்று சொல்லிக்கொண்டிருந்தது. அங்குதான் அவள் போகிறாள் என்று அனுமானித்தான். மறுநாள். மூன்றே முக்கால் மணிக்கெல்லாம் பாலசுந்தரம் திண்ணைக்கு வந்துவிட்டான். சரியாக நான்கு மணிக்கு அவள் வந்துவிட்டாள். இன்று இடது பக்கம் திரும்பி அவனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். ஒரு கணம் பிரமித்துப் போனான். என்னவொரு கண்கள்! யானைத் தந்தம் போன்ற நிறத்தில் முகம். அதில் கச்சிதமான வடிவில் கண்கள். ஐந்து மணிக்கு மறுபடியும் திரும்பி வந்தாள். வேண்டுமென்றே ரேடியோவின் சத்தத்தைக் கூட்டினான். அவன் ஏற்படுத்திய கவன ஈர்ப்பு அவள் முகத்தில் கோபத்தை உண்டாக்கவில்லை. அதுவே

போதுமானதாக இருந்தது அவனுக்கு. அடுத்த நாள் திண்ணைக்குப் போகும் முன் கண்ணாடி முன் நின்றான். தலையை வாரிக்கொண்டான். அவள் வருவது தூரத்திலிருந்தே தெரிந்தது. இரட்டை ஜடையை எடுத்து முன் பக்கமாகப் போட்டிருந்தாள். ஜடையை மடித்திருக்கவில்லை. ரயில் மிடில் பெர்த் சங்கிலி மாதிரி தொங்கிக்கொண்டிருந்தன. அவனைக் கடக்கும்போது ஜடை நுனியை கைகளால் திருகிக்கொண்டே நடந்தாள். ஒரே ஒருமுறை திரும்பி அவனைப் பார்த்தாள். அடுத்தடுத்த நாட்களிலும் திரும்பிப் பார்த்தாள். ஐந்தாம் நாள். மாலை நான்கு மணிக்கு வாசலுக்கு வந்தான். அவளைக் காணோம். ஏமாற்றமாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் நண்பன் பாஸ்கர் வந்தான்.

“இன்னைக்கு வைகுண்ட ஏகாதசி” என்றான் பாஸ்கர். ரங்கநாதன் டைப்பிங் ஸ்கூலுக்கு லீவு விட்டுவிட்டார் என்று புரிந்தது. பெருமாள் கோவிலுக்குப் போனார்கள். கூட்டமாக இருந்தது. அந்தப் பெண் எங்கேனும் இருக்கிறாளா எனத் தேடினான். தென்படவில்லை. சக்கரத்தாழ்வார் சன்னதியருகே பிரகாரத்தில் அமர்ந்தார்கள். “டைப் ரைட்டிங் க்ளாஸ்ல யார் வேணும்னாலும் சேரலாமா? ரங்கநாதன் சேத்திப்பாரா?” என்றான் திடீரென பாலசுந்தரம்.

“காசு கொடுத்தா யார் வேணும்னாலும் சேரலாம். யாரை சேத்தப் போறே?”

“நான்தான்.”

மூன்று நாட்கள் கழித்து டைப்ரைட்டிங் ஸ்கூல் ரங்கநாதன் முன்னால் நின்றுகொண்டிருந்தான் பாலசுந்தரம்.

“என்ன?”

“டைப் ரைட்டிங் க்ளாஸ் சேரணும்.”

அவனை ஒருமாதிரியாகப் பார்த்தார் அவர்.

“நீ மாஜிஸ்ட்ரேட் மகாதேவன் பையன் இல்லையா?”

“ஆமா.”

“உனக்கெதுக்கு டைப்பிங்?”

“ஒரு அறிவு விருத்திக்குத்தான்.”

டைப்பிங் கற்றுக்கொண்டால் அறிவு எப்படி வளரும் என அவருக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஒரு கிராக்கியை விட அவர் தயாராக இல்லை. அதுவும் பணக்காரக் கிராக்கி.

“காத்தால பத்து மணிக்குத் தினமும் வந்துடு.”

“இல்லே சார். சாயங்காலம் நாலு மணி ஒதுக்கிக் கொடுத்தா பரவாயில்லே.” ரங்கநாதன் யோசித்தார். மாஜிஸ்ட்ரேட் பையன். மறுக்க முடியாது.


“சரி. நாலு மணி ஒதுக்கித் தர்ரேன். நாளைலேந்து வந்துடு.”

“நாளைக்கா? இன்னைக்கே வந்துடறேனே.”

“இன்னைக்குக் கரிநாள். வேணாம்.”

கரிநாள் மேல் கோபமாக வந்தது அவனுக்கு. வெள்ளிக்கிழமை. பத்து நிமிடம் முன்பாகவே டைப்பிங் ஸ்கூலுக்குப் போய்விட்டான் பாலசுந்தரம். உள்ளிருந்து டொக டொகவென டைப்ரைட்டர் பொத்தான்களின் சத்தம் வந்துகொண்டிருந்தது. நடுநடுவில் உருளையைத் தள்ளிவிடும் சத்தம் வேறு. உள்ளே போனான். “இந்த மெஷின்ல உக்காரு” என்றார் ரங்கநாதன். உட்கார்ந்தான். ரெமிங்க்டன் மெஷின் கருப்பு பூனைக் குட்டி மாதிரி அமர்ந்திருந்தது. பல இடங்களில் சாயம் உதிர்ந்து போயிருந்தது. ஒவ்வொருவராக உள்ளே வந்தார்கள். திரும்பித் திரும்பி வாசலையே பார்த்தான். இதோ வந்துவிட்டாள். நேராக அவனுடைய மெஷினுக்கு வந்தவள் அவன் அங்கே ஆக்கிரமித்திருந்ததைப் பார்த்ததும் குழம்பினாள். அங்கேயே நின்றாள். “மலர்விழி” என்று அழைக்கும் சத்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள். ரங்கநாதன் மாஸ்டர்.

“உன் மெஷின் அந்தப் பையனுக்குக் கொடுத்திட்டேன்.”



"ஏன்?" என்பது போல் பார்த்தாள்.

"மாஜிஸ்டிரேட் பையன். வேற டைம் இல்லேன்னு சொல்லிட்டான். நீ இனிமே காத்தால பத்து மணிக்கு வா." அவனுக்குத் திக்கென்றது. திட்டம் பாதை மாறிப் போகிறதே! மலர்விழி பதில் ஏதும் பேசாமல் வெளியே போனாள். ரங்கநாதனை எதிர்த்துப் பேச முடியாது. எல்லோர் எதிரிலும் கத்துவார். வீட்டுக்குப் போனான். இரவு தூக்கம் வரவில்லை. மாஜிஸ்திரேட் பையன் என்ற அந்தஸ்த்தை வைத்து அவளைச் சாய்த்துவிட்டதாகக் கோபமாய் இருப்பாளோ? மனசு என்னவோ செய்தது.

மறுநாள் காலை. பத்து மணிக்கு வாசலுக்கு வந்து நின்றான். மலர்விழி டைப்ரைட்டிங் ஸ்கூல் நோக்கி நடந்துகொண்டிருந்தாள். திரும்பி அவனைப் பார்த்தாள். பார்வையில் உஷ்ணம் தெரியவில்லை. வெயில்தான் அவள் முகத்தை வாட்டியிருந்தது. நான்காம் நாள். அவன் மெஷினில் அமர்ந்தவுடன் இடது பக்கம் ஏதோ நிழலாடியது. திரும்பினான். மலர்விழிதான் மெஷினில் பேப்பரைச் சொருகிக்கொண்டிருந்தாள். வகுப்பு முடிந்து வெளியே வந்தான். பின்னாலேயே அவளும் வந்தாள்.

"மலர்.. எப்படி மறுபடியும் இதே டைம்க்கு வந்தே?" என்றாள் அருகில் வந்துகொண்டிருந்த இன்னொரு பெயர் தெரியாத பெண்.

"சார்கிட்டே கெஞ்சிக் கூத்தாடி வாங்கிட்டேன். இந்த நேரம்தான் சௌகரியம்." 'சௌகரியம்' – இந்த வார்த்தையைக் கேட்டதும் அவனுக்கு ஜிவ்வென்றிருந்தது. அதன் பிறகு தினமும் நேர்த்தியாக உடை உடுத்திக்கொண்டு வந்தான். குறிப்பாக அழகாக தலை வாரிக் கொண்டான். "எவ்வளவு நேரம்டா தலை வாருவே?" என்று அம்மா கூட கடிந்து கொள்வாள். இப்படியே நான்கு மாதங்கள். மலருடன் எதுவும் அவன் பேசவில்லை. ரங்கநாதன் எதிரே பேசி விடவும் முடியாது. லோயர் பரிட்சையில் மலர் முதல் வகுப்பில் பாஸ் செய்துவிட்டாள். அடுத்து ஹையருக்கும் படிக்க ஆரம்பித்தாள். அப்படியே ஷார்ட் ஹேண்டும் படிக்க ஆரம்பித்தாள். இப்போதெல்லாம் அவனால் அவள் கண்களை க்ளோஸ் அப்பில் பார்க்க முடிகிறது. இமைகளில் இருக்கும் நீளமான இரப்பைகள் கூடத் தெரிகின்றன. ஹையர் பரிட்சைக்குப் பணம் கட்டும் நேரம் வந்தது.

"மலர் நாளைக்குள்ள பணம் கட்டணும்" என்றார் மாஸ்டர்.

"ஒரு வாரம் டைம் கிடைக்காதா?" என்றாள் சோகமாக.


"இல்லே மலர். நாளைக்குப் பணத்தோட வா."

அடுத்த நாள். மலர் தன் டேபிளில் வந்து அமர்ந்தவுடன் சத்தமில்லாமல் ஒரு கவரை அவள் டேபிளில் வைத்தான் அவன்.

'என்ன?' என்பது போல் பார்த்தாள்.

"பிரிச்சுப் பாரு" என விரல்களால் சமிக்ஞை செய்தான். பிரித்தாள். உள்ளே பரிட்சைக்குக் கட்டுவதற்கான பணம். கூடவே ஒரு கடிதம். 'இது ஒரு சின்ன உதவிதான். உன் கண் கலங்கக் கூடாது. அதுக்காகத்தான் இது. பின் குறிப்பு: உன் கண் ரொம்ப அழகா இருக்கு.' கண்களால் குளிர்ச்சியாக அவனைப் பார்த்தாள். உதடு பிரியாமல் ஒரு கோடு மாதிரி

புன்னகைத்தாள். மறுநாள் வகுப்பு ஆரம்பிக்கும் முன் அவன் மெஷின் அருகே ஒரு பேப்பரை வைத்தாள் மலர். பிரித்துப் படித்தான். நன்றி தெரிவித்திருந்தாள். கீழே ஒரு வாக்கியம் எழுதி அதை அடிக்கோடிட்டிருந்தாள். அந்த வாக்கியம்தான் அவனை என்னவோ செய்தது. மிகவும் கர்வமாக உணர்ந்தான். ஹையர் பரிட்சை எழுதிவிட்டாள் மலர். எதிர்பார்த்தது போலவே இதிலும் முதல் வகுப்பு. மாஸ்டர் இருவரையும் தன் அறைக்கு அழைத்தார்.



"மலர் ஹையர் பாஸ் பண்ணிட்டா. நல்ல வேலை கிடைக்கணும். உங்க அப்பாகிட்டே சொல்லிக் கோர்ட்ல ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கச் சொல்லு."

"சார்.."

"அப்பாவால முடியும். மாஜிஸ்டிரேட் நினைச்சா எதுவும் செய்ய முடியும். ஒரு அதிகாரம் இருக்கு இல்லே."

மறுக்க முடியவில்லை. அப்பாவிடம் சொன்னான். "பதினெட்டு வயசு ஆயிடுச்சா?" என்று மட்டும்தான் அப்பா கேட்டார். வேலை வாங்கிக் கொடுத்துவிட்டார். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி பாஸ் செய்துவிட்டால் பணி நிரந்தரம் ஆகிவிடும். மலர் செய்துவிடுவாள். பி.யூ.சி முடித்ததும் மருத்துவக் கல்லூரியில் இடமும் கிடைத்துவிட்டது அவனுக்கு. எப்போதாவது மலரைக் கோவிலிலோ அல்லது கடைத் தெருவிலோ பார்ப்பான். சம்பாத்தியம் காரணமாக அவள் கன்னத்தில் கொஞ்சம் மினுமினுப்பு கூடியிருந்தது. இப்போதெல்லாம் நேர்த்தியாக உடுத்துகிறாள். கண்களின் கவர்ச்சி இன்னும் கூடியிருந்தது. அவளைக் காதலிக்கலாமா? முடியாது என்று அவனுக்குத் தெரியும். அவள் அவனை விட ஒரு வயது பெரியவள். அந்தச் சின்ன ஊரில் மாஜிஸ்டிரேட் பையன் அவ்வளவு சுலபமாகக் காதலித்து விடவும் முடியாது. சமூகம் பார்த்துக்கொண்டே இருக்கும். கேள்வி கேட்கும். சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ஹாஸ்டலுக்கு வந்துவிட்டான். அடிக்கடி ஊருக்குப் போக முடியவில்லை. நான்காம் வருட லீவில் போனபோதுதான் மலருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாக அப்பா சொன்னார். கோர்ட்டுக்கு வரும் ஒரு பணக்கார வக்கீலுக்கு அவளைப் பிடித்துப் போக தன் மகனுக்குக் கட்டி வைத்துவிட்டார்.

பழைய கதை எல்லாவற்றையும் கூறி முடித்துவிட்டு பார்க் பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்தான் பாலசுந்தரம்.

"இப்போ திடீர்னு எப்படி மலர்விழியைச் சந்திச்சே?"

"என்னோட நர்ஸிங் ஹோமுக்கு வந்திருக்கா."

"எதுக்கு?"

"கண் ஆஸ்பத்திரிக்கு எதுக்கு வருவாங்க? சிகிச்சைக்குத்தான்."

"என்ன சொல்ல வர்ரே? மலருக்குக் கண்ல ஏதாவது ப்ராப்ளமா?"

"ஆமா."

"மலர் உன்னைப் பாத்தாளா?"

"இல்லே. அவளால இப்போ பாக்க முடியாது. அவளுக்குக் கண் பார்வைல பிரச்சினை. நரம்புக் கோளாறு. ஆபரேஷன் செய்யணும்."

"ஓ... ஆபரேஷன் செஞ்சாப் பார்வை வந்துடுமா?"

"வந்துடும். சின்ன ப்ராப்ளம்தான். சரி செஞ்சிடலாம்" என்று ஒரு மெடிக்கல் பதத்தைப் பிரயோகித்தார்.

"நாளைக்குத் திங்கட்கிழமை. காத்தால ஆபரேஷன். நான்தான் செய்யறேன்."

"மலரைப் பாத்ததுல சந்தோஷம்தானே?"

"சந்தோஷம்தான். ஆனா இந்தக் கோலத்துல பாத்தது வேதனையைக் கொடுக்குது. இன்னும் என் மனசுல மலர் விழியோட அழகான கண்கள் அப்படியே இருக்கு. பனித் துளி படிஞ்சிருக்கற சங்கு புஷ்பம் மாதிரி பளிச்சுன்னு இருக்கற கண்களை இப்போ பாக்க முடியல்லே. கண்கள் மூடியிருக்கு. உலர்ந்த பேரீச்சம் பழம் மாதிரி இருக்கு. மலரை இந்தக் கோலத்துல என்னால

பாக்க முடியல்லே.”

“நீ ஒரு கண் டாக்டர். இப்படிப் பேசக் கூடாது.”

“நான் டாக்டராப் பேசல்லே. பாலசுந்தரமா பேசறேன். உனக்குத் தெரியுமா? பால்ய வயசுல ஒருத்தர் கூட பழகியிருந்தா இன்னும் அந்தப் பால்ய வயசு உருவம்தான் மனசுல பதிஞ்சிருக்கும். அந்தப் பழைய உருவத்தை நினைச்சுக்கிட்டிருக்கறப்ப அதுக்கு அப்படியே ஆபோஸிட்டா வேற உருவத்தைப் பார்த்தா அதிர்ச்சியைக் கொடுக்கும். மனசு வலிக்கும்.”

“வாஸ்தவம்தான். நீதான் ஆபரேஷன் செய்யப் போறேன்னு மலருக்குத் தெரியுமா?”

“டாக்டர் பேர் பாலசுந்தரம்னு தெரிஞ்சவுடனே விசாரிச்சிருக்கா. அது நான்தான்னு அவளுக்குத் தெரிஞ்சு போயிடுச்சு. ஆபரேஷன் முடிஞ்சுக் கட்டு அவுத்தவுடனே நான் டாக்டரைத்தான் முதல்ல பாக்கணும்னு சொல்லியிருக்காளாம்.”

“ஓ... இன்டரஸ்டிங்” என்றார் சர்மா. பாலசுந்தரம் பதில் பேசவில்லை.

மறுநாள். மாலை. சர்மாவுக்குப் போன் செய்தார் பாலசுந்தரம்.

“மலருக்கு ஆபரேஷன் முடிஞ்சது. இந்த வாரத்துல கட்டு பிரிச்சுடுவாங்க.”

“வெரி குட்.”

“உனக்கு மாண்டியா பக்கத்துல ஒரு பண்ணை வீடு இருக்கு இல்லே. அங்கே போய் நாலு நாள் தங்கிட்டு வரலாம். காத்தால கார் எடுத்துக்கிட்டு வா.”

“ஆஸ்பத்திரி இருக்கே..”

“ஒரு ப்ரேக் எடுத்துக்கறேன்.”

பண்ணை வீட்டில் ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருந்தார் பாலசுந்தரம்.

“நீ ஏன் ஆஸ்பத்திரியை விட்டு இங்கே ஓடி வந்தே?”

“மலர் என்னைப் பாத்துடக் கூடாதுன்னுதான்.”

“அதுதான் ஏன்?”

“நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். பால்ய பருவத்துல ஒருத்தரைப் பாத்தா அந்த உருவம் அப்படியே மனசுல பதிஞ்சிருக்கும்னு. அந்த உருவத்துக்கு மாறா நிஜ உருவத்தைப் பாக்கறப்ப மனசு வலிக்கும். இந்தா இதைப் பாரு.”

தன் சட்டைப் பையில் கையை விட்டு நாலாக மடித்து வைத்திருந்த ஒரு பேப்பரை எடுத்தார். பழுப்பேறிப் போயிருந்தது அந்தக் காகிதம். மடித்த இடங்கள் நைந்து போயிருந்தன. அதை சர்மாவிடம் நீட்டினார்.

“டைப் ரைட்டிங் ஹையர் பரிட்சை எழுத நான் அவளுக்குப் பணம் கொடுத்து உதவினவுடனே மறுநாள் அவ என் டேபிள்ல வைச்ச கடிதம். என்ன எழுதியிருக்கான்னு படிச்சுப் பாரு.”

படித்துப் பார்த்தார் சர்மா. ‘மிக்க நன்றி. வேலைக்குப் போனதும் திருப்பிக் கொடுத்திடறேன். பின் குறிப்பு: உன் ஹேர் ஸ்டைல் ரொம்ப அழகா இருக்கு’ என்ற வாசகம் எழுதி அடிக்கோடிட்டிருந்தது. “அந்த வாசகத்தைப் படிச்சியா? அந்த அடிக்கோட்டைப் பாத்தியா? அப்போ என் ஹேர் ஸ்டைல் ஹிந்தி நடிகர் தேவ் ஆனந்த் மாதிரி இருக்கும். அந்த ஏரியாலயே என் ஹேர் ஸ்டைல் பிரசித்தம். இப்போ என்னைப் பாரு. என் தலையைப் பாரு. பின்னால எண்ணி இருபது முடி இருக்கு. முன்னால முழு வழுக்கை. மலர் எதிர்பார்க்கற பாலசுந்தரம் இது இல்லே. அவள் என்னைப் பாக்க வேணாம். இப்போ அவளைப் பாத்து நான் படற அவஸ்தையை அவளும் பட வேணாம். அவ மனசுல அந்தப் பழைய தேவ் ஆனந்தே இருக்கட்டும். அவ டிஸ்சார்ஜ் ஆகிப் போனவுடனே நான் ஆஸ்பத்திரிக்குப் போறேன்.”

ஊஞ்சலிலிருந்து எழுந்தார் பாலசுந்தரம். ஊஞ்சல் இன்னும் மெதுவாக ஆடிக்கொண்டிருந்தது. ■

● கவிஜி






# முக்கோணத்தில் கதை

**திரைப்படம்: Triangle**

“வாழ்க்கை ஒரு வட்டம்...” - என்று பேசும் வசனம் இங்கே சரியாக இருக்காது. வாழ்க்கை ஒரு முக்கோணம் என்றும் பேசலாமா என்று யோசிக்கும்போதே முக்கோணம் கொண்ட கோணத்தில் எல்லாம் முக்கோணம் என்றால் அதுதான் இந்தக் கதை. முக்கோணக் கதை அல்ல.. முக்கோணத்தில் கதை.

ஜெஸ்.. கதையின் நாயகி.

அவள் பின்னால்தான் நாம் போகப் போகிறோம். போகப் போகப் போவதைப் போல அல்லாமல் நின்றுகொண்டே போவதைப் போல ஒரு தோற்றம் கிடைத்தால் அதுவும்தான் கதையின் ஓட்டம். குழம்புவதற்கோ குழப்புவதற்கோ ஒன்றுமே இல்லை. புரியாத எத்தனையோ இருத்தல்களின் ஒன்றாக இந்த முக்கோணம் இருப்பதைப் புரிந்துகொண்டால் கதை புரிந்துவிடும். புரியாமல் போவது கூட ஒருவகை புரிதல்தானே என்றுதான் படத்தைத் திரும்ப ஒருமுறை பார்த்தேன்.

ஒரு கதை என்றால் ஓர் ஆரம்பம்.. ஓர் இடைவேளை.. ஒரு முடிவு.. இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எந்த வகை கட்டாயமும் இல்லை. இடைவேளைக்கு முன் ஒரு அரை மணி நேரத்தில் கூட கதை ஆரம்பிக்கலாம். அப்படி என்றால் அதுதான் ஆரம்பம். இடைவேளை இல்லாமலே கதை முடிந்து போகலாம். அப்படி என்றால் அதுதான் இடைவேளை. படம் முடிந்து போவது என்பது சுபம் போடுவது மட்டுமல்ல. கேள்விகளை

விதைத்துவிட்டுப் பதிலும் காணாமல் போவதும்தான்.

"கெட்ட கனவுகள் வந்த பிறகு... நமக்குப் பிடித்த நல்ல விஷயங்களை நினைத்துக் கண்களை மூடிக்கொள். கெட்ட கனவுகளின் தாக்கம் மெல்ல மறைந்துபோகும்.." என்பதாக ஒரு மாதிரி புரிதலோடு கதை நகரத் தொடங்கினாலும்... கதையின் ஆரம்பம் அதுவல்ல என்பதுதான் பார்வை. பார்வைகள் பலவிதம் என்று சொல்லும் பறவையின் சங்கேதக் குறியீடாகப் பறக்கும் சாலையில் ஒரு கோர விபத்தில் மாட்டி இறந்துபோகும் தன் குழந்தை டாமியின் நினைவுகளோடுதான் அவளின் ஹார்பர் பயணம் இருக்கிறது. அது கனவென்று கூட அவள் நினைக்கக் கூடும்.

அடுத்தடுத்து நடக்கும் அசம்பாவிதங்கள்.. ஜெஸ்-ஐ ஜெஸ்சே பார்ப்பது.. கொல்ல முயற்சிப்பது.. ஆள் மாறிக் கொல்வது.. என்று கதையின் போக்கு மிக விசித்திரமாக விநோதமாக நகரும் இடத்தில் நிச்சயமாகக் கண்களைக் கட்டிக்கொண்டுதான் வருகிறது. பார்வையாளனையும் திரைக்கதைக்குள் புகுந்து சற்றல்ல பலமாக யோசிக்கவைத்த இயக்குனரின் திறமையை மெச்சத்தான் வேண்டி இருக்கிறது.

எத்தனை நாள் எடுத்துக்கொண்டாரோ திரைக்கதை அமைக்க... அத்தனை கடினமான முடிச்சுகளைக் கொண்ட கதை அமைப்பு. இசைக் கோர்ப்பும், காட்சியமைப்பும் பிரமிப்பு.

சரி விஷயத்துக்கு வருகிறேன்.

நீங்கள் இன்று மாலை 7 மணிக்கு உங்களுக்குப் பிடித்த படத்தைப் பார்க்கத் தொடங்குகிறீர்கள். 8 மணி வாக்கில் உங்கள் காலம் நின்றுபோகிறது. அல்லது ஏதோ ஒரு காரணத்துக்காக நீங்களே நிறுத்திவிடுகிறீர்கள். அதனால் நீங்கள் அந்த 8 மணியிலேயே தங்கிவிடுகிறீர்கள். நின்றுபோன காலம் அதோடு நின்றுவிட்டால் பரவாயில்லை. ஒரு நோக்கத்தின் நீட்சியாக அது மீண்டும் நீங்கள் படம் பார்க்க ஆரம்பித்த 7 மணிக்கு வந்துவிடுகிறது. திரும்பவும் 7 மணியிலிருந்து உங்கள் காலம் நகருகிறது. இம்முறை உங்களுக்குப் படம் பார்க்க ஆர்வம் இல்லை. நீங்கள் சமையலறையில் ஏதோ சமைக்கத் தொடங்குகிறீர்கள். அப்போது சமைத்ததை 8 மணியை நெருங்கும் நேரத்தில் எடுத்துக்கொண்டு உங்கள் அறைக்கு வந்தால் ஏற்கனவே முன்பு வந்த 8 மணியில் தங்கிப்போன உங்களின் முதல் வெர்சன் இன்னும் டிவி முன்னால் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறீர்கள்.

உங்கள் வெர்சனும் நீங்களும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டால்...

இரு காலங்களின் கோடு ஒன்றின் மீது ஒன்று ஓடும் இடம் அது. கோடுகள் ஒன்றன் மீது ஒன்றாக மாறி மாறிப் பின்னி பிணைந்து ஓடுவதில் ஏற்படும் குழப்பங்களைத் தெளிவுபடுத்த நேரம் பிடிக்கும்தானே...? அந்த நேரம்தான் இக்கதையின் கதைநாயகியான... எல்லாரையும் காப்பாற்ற நினைக்கும் ஜெஸ்.

இதே போல மீண்டும் எட்டு மணிக்கு உங்கள் சமையல் அறையோடு உங்கள் நேரம் நின்றுபோகிறது. மீண்டும் 7 மணிக்கு உங்கள் காலம் ஆரம்பிக்கிறது. இந்த முறை நீங்கள் துணி துவைக்கப் போகிறீர்கள். அப்போது ஹாலில் இருக்கும் உங்கள் முதல் வெர்சனையும் சமையல் அறையில் இருக்கும் உங்கள் இரண்டாவது வெர்சனையும் பார்த்தால் எப்படி இருக்கும்... என்ன நடக்கும்.... இதுதான் கதையின் அடித்தளம். இதன் மீது கட்டமைக்கப்பட்ட திரைக்கதையில் ஜெட் வேகத்தில் கதை நகர்வதுதான் இயக்குனரின் மிகப்பெரிய பலம்.

இந்த ட்ரையேங்கில் (2009) சொல்லும் ஒவ்வொரு கதைக்குள்ளும் ஒரு கதை இருப்பதை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் புரிந்துகொள்வதுதான் இக்கதையின் நகர்தல்.

எழுதி இயக்கியவர் - கிறிஸ்டோபர் ஸ்மித்.

ஜெஸ் உள்பட 6 பேர் கொண்ட (கிரேக், டவ்னி, ஹீதர், சாலி, விக்டர்) கடலுக்குள் ட்ரிப் அடிக்கிறார்கள்.

அவர்கள் செல்லும் போட் புயலினால் ஏற்படும் விபத்தில் சிக்கிக் கடலில் கவிழ்ந்து விடுகிறது. அனைவரும் ஒருவழியாக உடைந்த போட்டில் ஏறி உயிர் பிழைக்கிறார்கள். ஹீதர் மட்டும் தண்ணீருக்குள் மூழ்கிவிடுகிறாள். இந்த இடத்தில் முக்கோணம் திரும்ப ஆரம்பத்தில்

இருந்து ஆரம்பிக்கிறது. அப்போது அவர்களை நோக்கி ஒரு கப்பல் வர.. தங்களைக் காப்பாற்றச் சொல்லிக் கத்துகிறார்கள்.

பிழைத்த ஐவரும் கப்பலில் யாரோ ஒருவர் நிற்பதையும் பார்த்துவிட்டு நம்பிக்கையோடு கப்பலில் ஏறுகிறார்கள். ஆனால் உள்ளே செல்லச் செல்லக் கப்பலில் யாரும் இல்லாததும் ஏதோ அமானுஷ்யங்களால் சூழப்பட்டது போல இருப்பதையும் ஒருவாறாக உணர்கிறார்கள். அதில் ஜெஸ் மட்டும் இந்த இடத்துக்குத் தான் ஏற்கனவே வந்ததாகவும் பழகிய இடம் போல இருப்பதாகவும் கூறுகிறாள். ஒரு தேஜாவு மனநிலை. அவளின் மனதுக்குள் மட்டும் ஏதோ இனம் புரியாத விபரீதங்கள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. திடும்மென அங்கே யாரோ ஒருவர் ஒளிந்து நின்று ஓடுவதாகவும் கூறுகிறாள். அப்போது ஜெஸ்-இன் சாவிக் கொத்து சற்று தள்ளிக் கீழே விழும் சத்தத்தோடு கவனம் பெற்றுக் கிடக்கிறது. ஓடிச் சென்று அதை எடுத்த ஜெஸ் அதிர்ச்சியோடு, "இது என் வீட்டுச் சாவி.. இதில் உள்ள டாலரில் இருப்பது என் மகனின் புகைப்படம்.." என்று படபடப்போடு கூறுகிறாள்.

"உன் சாவிக் கொத்து இங்கு எப்படி.." என்று கேள்விகளோடு ஐவர் அணி தடுமாறிக்கொண்டிருக்க.. அதைத் தொடர்ந்து சில காட்சிகளுக்குப் பின்..

யாரோ ஒரு முகமூடி, துப்பாக்கியால் அனைவரையும் கண்மூடித்தனமாகச் சுட.. ஜெஸ் மட்டும் தப்பித்துக்கொள்கிறாள். ஓடி ஓடி.. அங்கும் இங்கும் ஓடி உயிரைக் காப்பற்றிக்கொள்ளப் போராடும்போது.. முகமூடியும் ஜெஸ்-உம் நேருக்கு நேராக முட்டிக்கொண்டு சண்டையிட.. அதில் முகமூடியைக் கடலுக்குள் தள்ளிவிடுகிறாள் ஜெஸ். முகமூடி கடலுக்குள் விழும்போது.. "அவர்களைக் கொன்றுவிடு.. அப்போதுதான் நீ வீட்டுக்குப் போக முடியும்," என்று சொல்லிக்கொண்டே விழுகிறது.



அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருக்கிறாள் ஜெஸ்.

இப்போது கடலுக்குள் மீண்டும் ஒரு உடைந்த போட்டில் ஐவர் குழு இவள் உள்பட மீண்டும் கப்பலை நோக்கிக் காப்பாற்றச் சொல்லி உதவி கேட்டுக் கை அசைக்கிறார்கள். கப்பலில் உயிர் பிழைத்து நிற்கும் ஜெஸ்க்கு ஒன்றும் புரியவில்லை. தலை வலிக்கிறது. தலையைப் பிடித்துக்கொண்டு தடுமாறுகிறாள். இப்படி பல முறை பல முறை அதே காட்சி திரும்பத் திரும்ப வந்துகொண்டேயிருக்கிறது.

அடுத்தடுத்த முறைகளில் ஒருவழியாக ஜெஸ் தாங்கள் ஒரு ட்ரையேங்கலில் மாட்டிக்கொண்டுவிட்டதைப் புரிந்துகொள்கிறாள். ஒவ்வொரு முறையும் கொல்லப்பட்ட சாலி ஒரு இடத்தில் குவிந்து கிடக்கிறாள். அவளிடம்... அடுத்த முறை நாம் இங்கு வருவதைத் தவிர்த்துவிட்டால் இப்படி சாக வேண்டியது இல்லை என்று ஆறுதலும் கூறுகிறாள்.

வீட்டுக்குப் போக வேண்டும் என்று மனதுக்குள் அழும் ஜெஸ் தடுமாறி நகர்தலில் அங்கிருந்த துப்பாக்கி இருக்கும் அறைக்குள் சென்றுவிடுகிறாள். அங்கே.. அவளின் முன் வெர்சன்களால் எழுதப்பட்ட, "எல்லாரையும் கொன்றுவிடு" என்ற காகிதக் குவியல் கிடப்பதைக் காண்கிறாள். அவளும் ஒருமுறை எழுதிப் பார்க்கிறாள்... ஜெஸ்சின் காதில் அமானுஷ்யக் கத்தல்கள் பயங்கரமாக ஒலிக்க... அவளையும் மீறித் துப்பாக்கியைக் கொண்டு தன் நண்பர்களைக் கொல்கிறாள் (ஒவ்வொரு முறையும் கொல்கிறாள்... இரண்டாவது முறை சண்டை போடும்போது முகமூடியைக் கழற்றிய முகத்தில் தானே இருப்பதைக் காண்கிறாள்...). இதை எல்லாம் ஒரு மாதிரியாகப் புரிந்துகொண்ட ஜெஸ் (முதல் காட்சியில் கப்பலுக்குள் நுழையும் ஐவரில் ஒரு ஜெஸ் -காப்பாற்றுபவள்- கதை நாயகி ) அவர்களைக் கொல்லும் தன் அடுத்த அல்லது முன்பிருந்த வெர்சன்களிடம் சண்டையும் போட்டுக் கொல்லவும் செய்கிறாள். கப்பலில் ஓர் இடத்தில் தன் மகனின் புகைப்படம் இருக்கும் டாலர் குவிந்து கிடப்பதும் இப்போது மீண்டும் ஒருமுறை விழுவதும் திரும்பத் திரும்ப ஒரே முறைகள் நடந்துகொண்டிருப்பதையும் உணர்ந்துகொள்கிறாள் ஜெஸ்.

ஒரு கட்டத்தில் தாங்கள் வந்த போட் விபத்துக்கு உள்ளாகும் சமயத்தில் உதவி கேட்டு போனில் பேசிய கிரேகின் குரலைக் கூட இப்போதும் உதவி கேட்டு அழைக்கப்பட்ட



பிரீகியொன்சியில் கேட்கிறாள். அதாவது கடந்த காலத்தில் பேசிய குரல் இன்று இருக்கும் நிகழ்காலத்தில் வந்து சேர்கிறது.

அதாவது... அவர்களின் முக்கோணத்தில் ஒரு கோணம் திரும்பத் திரும்ப அதற்குள்ளாகவே சுழன்றுகொண்டிருக்கிறது. அதாவது முந்தின வெர்சன் ஜெஸ் பிந்தைய ஐவர் அணியைக் கொல்கிறாள். (அதில் பிந்தைய ஜெஸ் தப்பித்துக்கொண்டு முந்தின வெர்சன் ஜெஸ்-ஐக் கொன்றுவிடுகிறாள். ஆனால் சாகும் தருவாயில் முந்தின வெர்சன் ஜெஸ்.. "அவர்களைக் கொல்.. அப்போதுதான் நீ வீட்டுக்குப் போக முடியும்" என்று கூறிவிட்டுச் சாக... அதன் பின்னால் வரும் ஐவர் அணியைக் கொல்ல இப்போது தப்பித்துக்கொண்ட ஜெஸ் காத்திருக்கிறாள். கொல்கிறாள். இப்போதும் தப்பித்துக்கொண்ட இப்போது வந்த ஜெஸ் முந்தின ஜெஸ்-ஐக் கொன்றுவிட்டு..

இது அப்படியே தொடர்கிறது. படம் ஆரம்பிக்கும்போது வந்த ஜெஸ் (கதை நாயகி) இதைப் புரிந்துகொண்டு எல்லாரையும் காப்பற்ற முயற்சிக்கிறாள்.

ஒருவழியாக வெளியே வந்து கடற்கரையில் கரை ஒதுங்குகிறாள். இங்கு நம்மால் வேறு ஒரு கதையைக் கூட கூற முடியும்.. போட் கவிழ்ந்த உடனே அனைவரும் நீரில் மூழ்கி இறந்துபோக, ஜெஸ் மட்டும் கரை ஒதுங்குகிறாள்.. அப்போது அவளின் மனதுக்குள் ஏற்பட்ட பிறழ்வுகளின் நீட்சியாக இந்தக் கப்பல் கதை முழுக்க ஒரு கற்பனைக் கனவு என்று கூட சொல்ல முடியும். ஆனால் அப்படி ஒரு கதைக்குள் இப்போதைக்குப் போக வேண்டாம். அவள் கப்பலில் இருந்து கரை ஒதுங்கியதாகவே இருக்கட்டும். இப்போது வீட்டை நோக்கி ஓடுகிறாள்.

அங்கோ அவளின் முந்தைய வெர்சன் தன் குழந்தையை மிரட்டி அடித்துக் கோபத்தைக் கொட்டிக்கொண்டிருக்கிறது. வந்த கோபத்தில் சுத்தியல் கொண்டு முந்தைய வெர்சனை அடித்துக் கொன்று பிணத்தைத் துணி வைக்கும் பேக்கில் வைக்கிறாள். இதைக் கண்டுவிட்ட மகன் டாமியிடம் கூறும் வசனம்தான் படத்தின் முதல் காட்சி.. "கெட்ட கனவு கண்டால்... கண்களை மூடி நல்லதை நினைத்துக்கொள், நான் அப்படித்தான் செய்வேன்" - என்று கூறிக்கொண்டே இருப்பது.

பிணம் உள்ள பேக்கைக் கொஞ்சம் துணியும் சேர்த்து அடைத்து வண்டியின் டிக்கியில் போட்டுக்கொண்டு மகன் டாமியையும் கூட்டிக்கொண்டு காரில் பயணிக்கையில் கண்ணாடியில் ஒரு பறவை சொத்தென்று விழுந்து ரத்தம் தெறிக்கச்சாகிறது. வண்டியை நிறுத்திவிட்டு ஏற்கனவே எங்கோ இதைக் கடந்தது போல ஒரு மனநிலையில் இறந்துபோன அந்தப் பறவையைத் தூக்கிக் கடற்கரை ஓரத்தில் போடுகிறாள்.. அவளுக்கும் சேர்த்து நமக்கும் அதிர்ச்சி காத்திருக்கிறது.

அதே போல ஒரு குவியல் பறவைகள் அங்கே கிடக்கின்றன.. அப்படி என்றால் இதுவும் முக்கோணத்தில் சிக்கிக்கொண்ட காலத்தின் நிறுத்தல்கள்தான். அவள் முன்பே இந்த மாதிரி பலமுறை வந்திருக்கிறாள் என்பதைப் புரிய முடிகிறது.

“கடற்கரையில் இருந்து வீடு வருவது.. வீட்டில் அவளின் முந்தைய வெர்சனைக் கொல்வது.. பின் காரில் செல்வது.. அப்போது அடிபடும் பறவையைத் தூக்கி ஓரமாய்ப் போடுவது..” - மனதின் தலையைப் பிடித்துக்கொண்டு வண்டி ஓட்ட வண்டி ஒரு விபத்தில் சிக்குகிறது. டாமி இறந்துபோகிறான். பேக்கில் ஏற்கனவே அடித்துக் கொன்று வைத்திருந்த ஜெஸ்-இன் முதல் வெர்சனின் உடல் பேக்கை விட்டு வெளியே வந்து விபத்தில் இறந்தது போலக் கிடக்கிறது.

எல்லாவற்றையும் அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டு நிற்கிறாள் ஜெஸ். அதாவது விபத்து ஏற்பட்டு அம்மாவும் பையனும் இறந்துபோவதோடு முந்தைய லூப் முடிந்துவிடுகிறது. இங்கிருந்து இன்னொரு டைம் லூப் ஆரம்பிக்கிறது. பையனைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் இன்னொரு லூப்பில் ஜெஸ்.. ஹார்பர் நோக்கிப் போகிறாள். அது அடுத்த கோணம்.. அவள் போய்ச் சேருமிடம்தான் நாம் முதல் காட்சியில் கண்ட விக்டரின் அறிமுகத்தோடு கொண்ட கதையின் ஆரம்பம்.

மீண்டும் ஒரு சுழலுக்குள் போய் நிற்கிறது. ஹார்பர்க்குப் போய் அங்கிருந்து கடலுக்குள் போய் விபத்து நிகழ்வதும்.. பின் கப்பலுக்குள் போய்க் கரை ஒதுங்குவதும்.. பின் வீட்டுக்குப் போய்.. வீட்டில் இருந்து ஹார்பர்க்கு வரும் வழியில் விபத்தில் மாட்டுவதும்.. என்று முக்கோணம் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

யோசித்துப் பார்க்கையில்... ஒன்று நன்றாகப் புலப்படுகிறது. இந்தக் கதை எந்த அளவுக்குச் சொல்ல வந்ததைச் சொல்லிவிட்டது என்று என்னால் சொல்ல முடியவில்லை.

இது வாழ்வைப் பற்றி.. வாழ்வின் அபத்தங்கள் பற்றி.. வாழ்வின் நீட்சிகள் பற்றி.. அதனின் மறுபக்கம் பற்றி.. வெளிச்சத்தின் இருண்மைக்குள் சுழலும் மனதின் தீவிர வேகத்தைப் பற்றி... இன்னும் இன்னும் பல காட்சிக் கோணங்களின் முக்கோணத்தையும் சொல்கிறது. நம் புலன்களுக்கு அப்பாற்பட்ட எத்தனையோ கற்பனைகளின் கண்கள் நம்மை மேய்ந்துகொண்டேயிருக்கின்றன. புரிவது எல்லாம் புரிதல்கள் இல்லை என்று புரிந்தும் புரியாத புரிதலின் வாயிலாக மனித குலம் புரிந்துகொண்டேதானிருக்கின்றது என்பதாக நீள்கிறது மனதுக்குள் ஒரு படம்.

இந்தக் கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் என் காலம் 6-8 நின்றுவிட்டால்... நான் திரும்பத் திரும்ப 6-8க்குள் திரும்பத் திரும்ப இதையேதான் எழுதிக்கொண்டிருப்பேன். ஆனால் ஒவ்வொரு முறையும் அடுத்தடுத்த “நான்” எழுதிக்கொண்டிருப்பேன் என்பதுதான் பூமி சுழற்சியின் முடிச்சுகள். ஒரு கட்டத்தில் என்னைப் போல ஒரு மூட்டை “நான்கள்” என் அறையெங்கும் நிறைந்து கிடப்பார்கள். திரும்ப.. திரும்ப.. திரும்ப.. அதுவே இருப்பதும் அது அது அது என்று அது அதுவாகவே நிறைந்து கிடப்பதும்.. முக்கோணத்தில் உள்ள ஒவ்வொரு முனைக்குள்ளும் அவை ஒவ்வொரு முறையாக நிறைவதும்தான் இந்த முக்கோணம் நமக்குச் சொல்ல வருவது. ஒருவேளை நான் சொன்ன இந்தக் கதை இல்லாமல் இந்த முக்கோணம் வேறு ஒரு கதையைக் கூடச் சொல்லி இருக்கலாம்.. சொல்ல வரலாம்... சொல்லாமலே போகலாம்.

ஏனெனில் முக்கோணம்... நாம் உள்ளே சென்று பார்த்துவிட முடியாதது. பார்த்துவிட்டால் வெளியே வந்து சொல்லிவிட முடியாதது. இது புரியாமலே போன புரிதலாகக் கூட இருக்கலாம்.. மீண்டும் ஒருமுறை ட்ரையேங்கிலைப் பார்க்கப் போகிறேன்.

ஜெஸ் ஒருவேளை போர்டிங் ஆகாமல் இருந்தால் முக்கோணத்துக்குள் மாட்டி இருக்க மாட்டாளோ..?!

தன் பையன் இறந்ததை நம்பி இருந்தால்... டைம் லூப்பில் மாட்டி இருக்க மாட்டாளோ..!

**இயக்குநர்: Christopher Smith**

**ஆண்டு: 2009**

**மொழி: ஆங்கிலம்**

தொடர் – 26

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

தமுஎச-வின் புதுகை நகரக்கிளைக் கூட்டம் என்றால் அன்றைக்கு எனக்கு றெக்கை முளைத்துவிடும். கவிஞர்கள் கந்தர்வன், நா.முத்துநிலவன், புதுகை வில்லாளி, ராதிஷா போன்றோரைச் சந்தித்துப் பேசும் நல்வாய்ப்பு அன்றைக்கு எனக்குக் கிடைக்குமல்லவா..! அப்போது புதுக்கோட்டையிலிருந்து இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸில் காரைக்குடியிலுள்ள அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரிக்குத் தினமும் நான் படிக்கச் சென்று வந்து கொண்டிருந்தேன். திரும்பி வருகையில் புதுகை இரயிலடியிலிருந்து (இரண்டு கி.மீ தூரமிருக்கும்) அப்படியே கிளைக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு நடந்தே செல்வேன். திலகர் திடலிலுள்ள பாரத் மெட்ரிகுலேசன் பள்ளியில்தான் அப்போதெல்லாம் கூட்டங்கள் நடக்கும்.

80களின் இறுதியில் தமிழில் ஹைக்கூ கவிதைகள் குறித்த பேச்சு மெல்லக் கேட்கத் தொடங்கியிருந்தது. எழுத்தாளர் சுஜாதா, கவிக்கோ அப்துல் ரகுமானின் ஹைக்கூ தொடர்பான கட்டுரைகளையும் மொழிபெயர்ப்புகளையும் படித்துவிட்டு, ஹைக்கூ மேல் காதலுற்றுக் கிடந்த காலமது. சிறுபத்திரிகைகளில் ஏதேனும் ஹைக்கூ கவிதைகளைப் படித்துவிட்டால் போதும்; அந்தக் கவிஞருக்கு உடனே ஒரு அஞ்சலட்டை எழுதி, அவரை என் நட்பு வட்டத்தில் இணைத்துக்கொள்வேன்.

1987 அல்லது 1988ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். தமுஎச கூட்டமொன்றில் பங்கேற்க, வியர்க்க வியர்க்கக் கூட்டத்திற்குச் சென்றேன். உருண்டையான முகம், அடர்த்தியான முடி,

சட்டையின் மேல்பட்டன் போடாத ஒரு இளைஞர் அந்தக் கூட்டத்தில் கவிதை படிக்க வந்தார். பார்த்ததுமே பிடித்துப்போகும் ஒரு சிரிப்பு. கையில் காகிதமேதுமில்லாமல் தனது நினைவடுக்கிலிருந்து சில ஹைக்கூ கவிதைகளைச் சொன்னார். அதிலொரு ஹைக்கூ;

**‘சுட்ட அப்பளம்**

**சுற்றிலும் பருக்கைகள்**

**பட்டினி ராத்திரி.’**


கவிதையைப் படித்துவிட்டு, இருக்கைக்கு வருமுன்னே ஓடிப்போய்க் கவிஞரின் கைப்பிடித்துக் குலுக்கினேன். `அருமையான ஹைக்கூ...` என்றேன். முகம் முழுக்கப் புன்னகையைப் படரவிட்டு, பெருஞ்சிரிப்பொன்றினை உதிர்த்தார். கம்பீரமான குரலில் கவிஞர் சொன்ன அந்தக் கவிதை, பல ராத்திரிகள் என்னைத் தூங்கவிடாமல் செய்தது.

பிறகு கவிஞரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் வாய்த்தன. அறந்தாங்கி தமுஎச கிளையின் செயலாளராக இருந்த கவிஞர் ஜீவி, அப்போது தொழுநோய் ஆய்வாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அறந்தாங்கியில் கவிஞர் ஜீவி இருந்த அறையில் வேல்முருகன், ரமா ராமநாதன், ரெங்கசாமி என ஒரு நட்பு வட்டமே எப்போதும் குழுமியிருக்கும். அறந்தை கிளைக்கூட்டத்திற்குச் சென்று, அப்படியே பல இரவுகள் கவிஞரது அறையில் நானும் தங்கியிருக்கின்றேன். விடிய விடிய கவிதை குறித்தான உரையாடல்கள் தொடரும். சளைப்பில்லாமல் தொடர்ந்து எல்லோரோடும் உரையாடும் ஜீவி, ஒரு அபூர்வ மனிதராக என்னுள் பதிந்துபோனார்.

எவ்விதக் குறிப்புமில்லாமல் தான் எழுதிய முதல் கவிதை தொடங்கி, தற்போது எழுதியிருக்கும் கவிதைகள் வரை அப்படியே வரி மாறாமல் சொல்லும் ஆற்றல் ஜீவிக்கு உண்டு. அவரது கவிதைகளை மட்டுமல்ல; அவருக்குப் பிடித்தமான பல கவிதைகளையும் மனனமாகச் சொல்லி, மேலும் அதிசயிக்கவைப்பார். கவிஞர்கள் வாலி, மு.மேத்தா, வைரமுத்துவின் சில கவிதைகளைப் பிறகு வாசிக்கும்போதெல்லாம், கவிஞர் ஜீவியின் குரலில் கேட்பது மாதிரியே என் நினைவிலாடும். வார்த்தைச் செறிவும் கவித்துவத் தெறிப்புமான கவிதைகளைப் படைக்கும் ஜீவியின் கவிதைகளுக்கு முதல் வாசகனாகிப் போனேன்.

எல்லோரோடும் பேசுவதற்கு ஜீவியிடம் வார்த்தைகள் இருந்தன. அவரோடு பேசிக்கொண்டே நடந்தால் பத்தடி தூரத்தைக் கடக்கவும் பத்து நிமிடங்களுக்கு மேலாகும். எதிர்வரும் எல்லா மனிதர்களின் முகம் பார்த்தும் புன்னகை பூப்பார். அது வெறும் புன்னகையாக இருக்காது. நட்பின் நேச விசாரிப்பாகவும் இருக்கும். காய்கறிக் கடைக்காரர், பேப்பர்காரர், குட்டி சைக்கிளில் வரும் சிறுமி என எல்லோரிடமும் பேசும் இயல்பான குணம் வாய்க்கப்பெற்றவர் ஜீவி. துயரத்தில் இருப்பவர்களுக்குத் தன்னாலான உதவிகளை எவ்வித எதிர்பார்ப்புமில்லாமல் உடனே செய்துவிடும் ஜீவியின் உயர்குணத்தை நானும் அருகிருந்து கண்டிருக்கின்றேன். அனைவர் மீதும் அன்பைப் பொழியும் ஜீவி, என்னை எப்போதும் ஆகர்ஷிக்கும் கவியாளுமையாக வலம் வருகிறார்.

‘புதுக்கோட்டையிலும் அறந்தாங்கியிலும் தெருக்களில் ஜீவி நடந்து வருகையில் ஒரு மாய ஊது குழலில் மயக்கும் இசைஞரைப் போலிருப்பார். பின்னால் ஒரு இளைஞர் பட்டாளம் ராத்திரி பன்னிரண்டு மணிக்கும்



வரும். யாரோடும் நெருங்கிவிடுவார். தோள் மேல் கை போட்டுப் பேசும், நடக்கும் அழகுக்கு இணையான அழகு அவரது கவிதைகளே...' (வானம் தொலைந்து விடவில்லை – பக்கம்: 6) என்று கவிஞர் கந்தர்வன் எழுதியிருப்பது நூறு சதவீதம் உண்மை என்பதை நெருக்கமாயிருந்து ரசித்தவர்களுள் நானுமொருவன்.

ஜி. வெங்கட்ராமன் எனும் இயற்பெயருடைய கவிஞர் ஜீவி, புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடிக்கு அருகேயுள்ள நெய்வேலி எனும் கிராமத்தில், 1962ஆம் ஆண்டு ஜூன் 12 அன்று கணேசன் - மதுரம் தம்பதியினரின் மகனாகப் பிறந்தார்.

பள்ளி நாட்களிலேயே புத்தக வாசிப்பும், கவிதை எழுதும் ஆர்வமும், மேடையில் பேசும் திறனும் ஜீவிக்குக் கைகூடின. பள்ளியின் மனப்பாடப் பாடல்களை வரி மாறாமல் சொல்லி, சக மாணவர்களை மட்டுமல்ல, ஆசிரியர்களையும் வியக்கவைத்தார். வீட்டின் அறைகளில் புத்தகங்களே நிரம்பியிருக்கும். தந்தையார் அந்தக் கிராமத்தின் கர்ணமாக இருந்ததால், ஓலைச்சுவடிகளும் வீட்டிலிருந்தன. ஓலைச்சுவடிகள், புத்தகங்கள் எனக் கையில் கிடைத்தவையெல்லாம் ஜீவியின் வாசிப்புக்குத் தீனி போட்டன. பள்ளி மாணவனாக இருந்தபோதே, நூலகத்தில் உறுப்பினரானார். நூலகத்தை அதிக முறை பயன்படுத்திய மாணவனெனச் சிறப்புப் பரிசும் பெற்றார்.

12 வயது சிறுவனாக எட்டாம் வகுப்புப் படிக்கையில், 'முயல்' எனும் சிறுவர் இதழில் ஜீவி எழுதிய கவிதையொன்று வெளியானது. 'தினத்தந்தி' நாளிதழில் இரண்டு, மூன்று நகைச்சுவைத் துணுக்குகள் வெளியாகின. புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆண்டு மலரிலும் (1978), கோவையிலிருந்து வெளிவந்த 'துளிகள்' (1980) இதழிலும் கவிதைகள் பிரசுரமாகின.

பல்வேறு இதழ்களில் ஜீவியின் கவிதைகள் தொடர்ந்து பிரசுரமாகிவந்தன. 1984இல் திருச்சியிலுள்ள அகில இந்திய வானொலியின் 'மகரந்த மண்டபம்' நிகழ்வில் கவிஞரது கவிதைகள் ஒலிபரப்பாயின. சிறு பிராயத்திலேயே கவிதைகளை விரும்பிப் படித்த ஜீவிக்கு, 'எமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்குழைத்தல்; இமைப் பொழுதும் சோராதிருத்தல்' எனும் மகாகவி பாரதியின் வரிகளே ஆதர்சமாயின.

ஒரு மேடையில் எப்படிப் பேச வேண்டும் என்பதற்குக் கவியரசு கண்ணதாசனையும், எதைப் பேச வேண்டும் என்பதற்கு மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தையும் முன்மாதிரியாகக் கொண்டு, பேசியும் எழுதியும் இயங்கியும் வருபவர் கவிஞர் ஜீவி.

**'ஒரு இரயில் எஞ்ஜினாய்**

**எப்போதும் இயங்கு;**

**கூடவே பலரைச்**

**சேர்த்துக்கொண்டு,**

**உற்சாகமாகக்**

**கூவிக்கொண்டு...'**

- என்றெழுதியிருக்கும் ஜீவியும் எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு இயக்கவாதியே. தான் பணியாற்றிய பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளராக இருந்து, பின்னர் மாநிலப் பொறுப்புகளுக்குச் சென்று, பணி ஓய்வுபெறும் வரை அதன் மாநிலத் தலைவராகவும் இருந்து, ஒரு இரயில் எஞ்ஜினைப்போல உற்சாகமாக இயங்கிக்கொண்டேயிருந்தவர்.

ஜீவியின் முதல் கவிதைத் தொகுப்பு 'வானம் தொலைந்து விடவில்லை' 1993 ஜூலையில் அன்னம் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. அப்போது புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அறிவொளி இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஜீவி பணிசெய்து கொண்டிருந்தார். அறந்தாங்கியில் ஜீவியின் கவிதை நூல் வெளியீட்டு விழா பெருங்கொண்டாட்டமாக நடைபெற்றது. அந்த நூலிலுள்ள கவிதைகளை ஜீவியின் கிறுக்கலான கையெழுத்திலேயே பலமுறை படித்திருக்கின்றேன். அவரது குரல்

வழியே பலமுறை கேட்டிருக்கிறேன். நூலான பிறகும் பலமுறை வாசித்திருக்கின்றேன்.

**‘கண் விழி சூரியனே**

**உன் வானம்**

**இன்னும் தொலைந்து போய்விடவில்லை...’**

- எனும் நூலின் நம்பிக்கைத் தெறிப்பான முதல் கவிதையே முத்திரைக் கவிதை.

**‘கவிதையை**

**கரகமாக மட்டுமல்ல...**

**வாளாகவும் சுழற்றி வருகிறோம்...’**

- என்று கவிதையை ஓர் ஆயுதமாகச் சுழற்றி வரும் ஜீவியின் காதல் கவிதைகளும் தனித்துவமானவை; இதோ... மாதிரிக்கு ஒரு ‘தவிப்பு.’

**‘விறகு எரிந்தால்**

**கரியாகும்.**

**கரி எரிந்தால்**

**சாம்பலாகும்.**

**உன் நினைவுகள் மட்டும்**

**எதுவுமே மிஞ்சாமல்**

**எரிகிறதே... எப்படி?’** *(பக்கம்: 15)*

- என நியூட்டனின் மூன்றாவது விதிக்கே சவால் விடும் காதல் கவிதைகளை எழுதியுள்ளார் ஜீவி.

‘மின்னல் கீற்றுகள்’ எனும் தலைப்பில் ஜீவி எழுதிய 9 ஹைக்கூ கவிதைகளும் இந்நூலில் உள்ளன.

**‘சிதைந்த கல்தான்**

**செதுக்கச் செதுக்கச்**

**சிற்பம்.’** *(பக்கம்: 29)*

இது மூவரி கவிதைதான் என்றாலும் வாசிப்பவரின் உள்ளங்களில் எவ்வளவு பெரிய நம்பிக்கையை விதைக்கிறது.

**‘ஒட்டல் தொழிலின் நடப்பைக் கேட்டால்**

**உனக்கும் கூட அழுகை வரும்...’** *(பக்கம்:45)*

‘வசந்தம்’ வார இதழ் நடத்திய கவிதைப்போட்டியில் முதல் பரிசினைப் பெற்ற இக்கவிதையும்,

**‘குறிஞ்சி மலைத்தேனே**

**கொண்டாடும் சந்தனமே...’** *(பக்கம்: 21)*

- எனும் அறிவொளி இயக்கத்திற்காக எழுதிய பாடலும் எனக்கு ரொம்பவும் பிடித்தமானவை.

*1996* ஆகஸ்டில் ஜீவியின் இரண்டாவது கவிதை நூல் ‘இருவேறு முகங்கள்’ வெளியானது. இந்த நூலிலுள்ள ‘அதற்கு மட்டும்...’ எனும் கவிதை பலராலும் மேற்கோளாகச் சுட்டப்பெற்று, பரவலான பாராட்டினைப் பெற்ற சிறப்புக்குரியது.

**‘பிறப்புப் பதிவேட்டில்**

**அப்பா பதிந்தாராம்**

**எம்ப்ளாய்மெண்ட்**

**எக்சேஞ்சுக்கு**

**நானே போனேன்.**

**வாக்காளர் பட்டியலுக்கு மட்டும்**

**அரசாங்கமே அனுப்பியது.’** *(பக்கம்: 23)*

தொடர்ந்து அலுவலகப் பணிகள், இயக்கப் பணிகள், இலக்கியப் பணிகளோடு, கவிதைகள் எழுதுவதையும், கூட்டங்களில் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்த ஜீவியோடு, பல நூறு கலை இரவுகளுக்குச் சென்று வந்த பயண அனுபவங்கள் ஒவ்வொன்றும் தனிநூலாக எழுதுமளவுக்கு விஷய ஞானமுடையவை.

கலை இரவுகளுக்குச் சென்றுவிட்டு, தூக்கமின்றி, விடிய விடியப் பேருந்தில் பயணம் செய்து புதுக்கோட்டைக்குத் திரும்புவோம். அப்படியே அறந்தாங்கிக்குப் பேருந்து ஏறுவார் ஜீவி. மாலையில் அதே புன்னகையோடு புதுக்கோட்டைக்குத் திரும்பி வருவார். ‘எப்படி முடிகிறது இவரால் மட்டும் இப்படி?’ எனப் பலமுறை பார்த்த ஜீவியின் மீதான வியப்பு சற்றும் குறையாமல் கூடிக்கொண்டேதான் இருந்தது.

இவ்வளவு கூட்டங்கள், பயணங்கள்

என்று எப்போதும் பரபரப்பாக இயங்கும் ஜீவி, எப்போது எழுதுகிறார் என்பது என் இமாலயக் கேள்வியாக இருந்தது. பயணங்களிலேயே யோசிப்பார். வார்த்தைகளைக் கோர்ப்பார். மனசிற்குள்ளேயே ஒருமுறை சொல்லிப் பார்ப்பார். ஒரே வீச்சில் அப்படியே எழுதிவிடுவார். ஜீவியின் வீச்சான கையெழுத்தைச் சட்டெனப் புரிந்துகொண்டு எழுதிட இருவரால் மட்டுமே முடிந்தது. ஒருவர் கவிஞரது இணையர் வாணி. இன்னொருவர் நானே.

இதுவரை நைலான் ஊஞ்சல் *(1998)*, சின்னஞ் சிறகுகள் *(2000)*, அஞ்சறைப் பெட்டி *(2002)*, ஜீவி கவிதைகள் *(2010)*, அசுர சாதகம் *(2013)*, அடித்துப் பெய்த மழை *(2016)*, ஆனா... *(2021)*, ஊற்று மணல் *(2022)* ஆகிய கவிதை நூல்களையும், கவிதையும் கவிதை சார்ந்தும் *(2011)*, கவிதை குறித்த சொற்கள் *(2015)* ஆகிய கவிதை குறித்த கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார் ஜீவி.

தனது நூல்களுக்காக நொய்யல் விருது, ம.தி.மு.க. இலக்கிய அணி, கரூர் தமிழ்ச் சங்கம், தாரகை அறக்கட்டளை, கவிதை உறவு ஆகியவை வழங்கிய பரிசுகளைப் பெற்றிருப்பதோடு, பாரதி முற்றத்தின் ‘கவிஞர் சிகரம் விருது’, திசைகள் வழிகாட்டி அமைப்பின் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’, தமிழக அரசின் ‘தமிழ்ச் செம்மல் விருது’ ஆகிய விருதுகளையும் தனது தொடர் பங்களிப்பிற்காகப் பெற்றுள்ளார் ஜீவி. கவிஞரது கவிதைகளைப் பேராசிரியர் மோகனசுந்தரம் ஆய்வுசெய்து, இள முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

‘பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றுவது மாதிரி, சுற்றி இருப்பவர்களை, என்னை வார்த்த இயக்கத்தை, சமூகத்தைச் சேர்த்துக்கொண்டு வளரவே பிரியப்படுகிறேன்’ என்று சொல்லும் ஜீவியின் கவிதைகள் இந்த மக்களையும் அவர்களது பாடுகளையும் பதிவுகளாக்கும் சமூகப் பயன்பாடுமிக்க கவிதைகளாக விளங்குகின்றன.


ஜீவியின் எல்லாத் தொகுப்புகளிலும் அழகான சிறுகதைக்கான கதைக்கருவுடனிருக்கும் பல கவிதைகள் இருக்கின்றன. ஒரு கதையை மிகக் குறைவான வார்த்தைகளில் செறிவாகக் காட்சிப்படுத்தி, அதைக் கவிதையாக்கியிருப்பதே ஜீவியின் கவிதை நுட்பமெனலாம். கவிஞரது முதல் தொகுப்பிலுள்ள ராசாத்தி... ரோசாப்பு...., கடிதம், பார்வை, மரம் ஆகிய கவிதைகளாகட்டும்; இரண்டாவது நூலிலுள்ள வாழ்க்கை, வளர்சிதை மாற்றம், காது குத்து, விளையாட்டாய்..., பார்த்தவை, கோபக்காரன், வேடிக்கை, தெளிவு, மீசை ஆகிய கவிதைகளும் க(வி)தைக்கவிதைகளே. இந்தப் பட்டியல் எல்லா நூல்களிலும் தொடர்கின்றன.

அதிலும் `பார்வை` கவிதை ரொம்பவே விசேசமானது. சரியாய் முப்பது ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் என் நினைவில் பதிந்திருக்கும் இந்தக் கவிதையை இப்போது மீண்டும் பதிவுசெய்ய இன்னொரு காரணமுமிருக்கிறது.

நாள் முழுக்க எல்லா வீட்டு வேலைகளையும் அரக்கப் பரக்கச் செய்துகொண்டிருக்கும் மனைவியை அறிமுகம் செய்கையில் பலரும், ‘அவ ஹவுஸ் ஒய்ஃப்; வீட்டிலே சும்மாதான் இருக்கா...’ என்று சொல்லும் வழக்கத்தின் மீது, மிக அழுத்தமான கேள்வியை எழுப்புகிறது இக்கவிதை. இன்றைக்குச் சிலர் இந்தக் கவிதையை வேறு வார்த்தைகளில் சொல்லி, அவர்கள் எழுதியதாகப் பெருமைப் பேசித் திரிவதையும் பார்க்க முடிகிறது. அதனாலேயே இந்தப் ‘பார்வை’ கவிதை, மீண்டும் வாசகப் பார்வைக்குப் பதிவாகிறது.

‘ஐந்து மணிக்கு
அலாரம் அடிக்க
எழுந்து போனாள்
வாசல் தெளிக்க.

கோலம் போட்டு
கூடம் பெருக்கி
அடுக்களை கழுவ
ஆறு ஆனது.









பால் தரும் ஆள்வர
காப்பி போட்டு
எழுப்பிக் கொடுக்க
ஏழு ஆனது.

சட்டினி அரைத்து
இட்டிலி சுட்டு
தட்டில் தருகையில்
சரியாய் எட்டு.

சின்ன மகனுக்கு
சீருடை மாட்டி
கேட்டுக்கு வந்து
டாட்டா காட்டி
ஸ்கூலுக்கு அனுப்பி
ஹாலுக்குள் நுழைகையில்
மணியோ ஒன்பது.

கணவரின் தேவை
கணக்காய் முடித்து
ஆபிஸ் அனுப்பி
பத்துத் தேய்த்த பின்
பார்த்தால் பத்து.

அழுக்குத் துணிகள்
பொறுக்கிச் சேர்த்து
வழுக்கும் பாத்ரூம்
கழுவிக் குளிக்க
பதினொன்று ஆனது.

பாஸ்கெட் எடுத்து
மார்க்கெட் புகுந்து
பேரம் பேசி
வாங்கி வருகையில்
நேரம் பன்னிரண்டை
நெருங்கி யிருந்தது.

காய்ந்த துணிகளுக்கு
இஸ்திரி போட்டு
உண்டு முடிக்க
ஒரு மணி ஆனது.

அலமாரி பீரோ
ஒழுங்கு படுத்தி
அறையைப் பெருக்க
சரியாய் இரண்டு.

வந்தபின் கொடுக்க
காப்பி போட்டு
பிள்ளையை அழைக்கச்
செல்கையில் மூணு.

டியூசன் எடுக்கணும்
டிபன் செய்யணும்
ஓய்வு இல்லாமல்
வேலை பார்த்தால்தான்
பத்து மணிக்காவது
படுக்கப் போகலாம்.

எந்திர கதியில்
வேலை நடக்கையில்
வந்தார் கணவர்
புது நபருடனே.
காப்பி கொடுக்கையில்
கணவர் சொன்னார்.

'இவ என் மனைவி'
கூப்பிய கையுடன்
வந்தவர் கேட்டார்
'என்ன செய்யுறாங்க?'
பட்டென்று உடனே
பதில் வந்தது
'சும்மாதான் இருக்கா!'

கவிதையின் கடைசி வரி, பளாரென்று நம் கன்னத்தில் அறைகிறதல்லவா..! ஒரு சிறுகதைக்கான நேர்த்தியுடனும், காட்சி விவரணைகளோடும் எழுதப்பட்டுள்ள இந்தப் 'பார்வை' கவிதையை வாசித்த சிலரது பார்வையையாவது மாற்றும் அல்லவா..!

தன் பெயரைப்போலவே தமிழ்க் கவிதையில் என்றென்றும் ஜீவித்திருப்பார் ஜீவி என்பது மட்டும் நிதர்சனமான உண்மை.

- இன்னும் சொல்வேன்..

சிறுகதை

ஆண்டன்பெனி
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

# அதுவொரு அப்பாக்கள் காலம்



“அப்பா... ரொம்ப அவசரம்.. என்னோட ப்ராக்கிரஸ் ரிப்போர்ட்ல உங்க கையெழுத்தை நானே போட்டுக்கிட்டேன்” என்று மகன் சொன்னபோது, “உன்னோட மார்க்கை நான் எப்படிடா தெரிஞ்சிக்கிறது?” என்றேன்.

“அதான் ஸ்கூலேருந்து மெசேஜ் வந்திருக்குமே? அதுல பார்த்திருக்கலாமில்ல” என்றான்.

“இது தப்பில்லையா?”

“உங்ககிட்ட சொல்லாம மறைச்சிருந்தா தப்புதான்... ஸ்கூல் மெசேஜை இன்னும் நீங்க பார்க்காம இருக்கிறதுதான் தப்பு” என்கிறான்.

எனக்கு இவன் வயது இருக்கும்போது என் அப்பா என்கிற எல்லைச்சாமி எனக்கு எப்படி இருந்தார் என்ற நினைவு வந்தது. கொஞ்சம் முகத்தை இறுக்கமாக வைத்து ‘இங்க வா’ என்றாலே டவுசரில் ஒண்ணுக்குப் போய்விடுவேன். அவரிடம் இப்படியெல்லாம் பேசமுடியாது. பிள்ளைகள் அம்மாக்கள் மூலமாகவும், அம்மாக்கள் பிள்ளைகள் மூலமாகவும் அப்பாக்களிடம் பேசிய காலம். எல்லாவற்றிற்கும் அப்பாவின் அனுமதிக்காகக் காத்திருந்த அம்மாக்கள், பிள்ளைகளையும் அப்படியே காக்கவைத்தார்கள். அவர்களின் பயத்தை மெதுவாகப் பிள்ளைகளுக்கும் கடத்தினார்கள். அதனாலேயே அப்பா என்கிற பிம்பம் பயமாகவே இருந்தது. பிள்ளைகளைக் கட்டுப்படுத்த, அப்பாக்களைப் பயமுறுத்தும் கருவியாக அம்மாக்கள் கட்டமைத்திருந்தார்கள். அதை உறுதிபடுத்தும் விதமாக, வெளியில் ஆயிரம் பேசும் அப்பாக்களும் வீட்டில் பெரிதாகப் பேசுவதில்லை. கடுமையாகவே இருந்தார்கள். பெரும்பாலும் இருமல் அல்லது செருமல்.... அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளப் போதுமானதாக இருந்தது.

பல நேரங்களில் அவரின் செருப்புகள் வீட்டில் அவர் இருப்பதற்கான அடையாளமாக இருக்கும். அவை இல்லையென்றால் வீடே அமளிப்படும். இரண்டு மணி நேரம் இல்லாதபோது தெரு விளையாட்டு, நாள் முழுக்க இல்லையென்றால் அதே விளையாட்டு கண்மாய் வரை போகும்.

இப்படியெல்லாம் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டில் என் மகனைப் போல் கையெழுத்து போட்டுவிட முடியாது. தெரிந்துவிட்டால் நாள்முழுக்க கட்டாந்தரையில் முட்டிபோட வைத்துவிடுவார். மீசைக்கு நல்லெண்ணெய் விட்டு அவர் நீவிவிடும்போதெல்லாம், என் மேல் உதட்டைத் தடவிப் பார்த்து... பெரியவனானதும் இதைவிடப் பெரிய மீசை வைக்க நினைத்துக்கொள்வேன். ஊரில் இருப்பவர்களில் அப்பா அளவிற்கு யாருக்கும் மீசையில்லை. ஊர்த்திருவிழா அல்லது வீட்டு விசேசங்களில் எட்டுமுழம் வேட்டி கட்டி சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது ராஜாபோல் இருப்பார்.

அந்நாட்களில் மட்டுமே வீட்டில் நீண்டநேரம் இருப்பார். அப்படி ஒருநாளில் சாயங்கால நேரத்தில் தனலட்சுமி டூரிங் கொட்டகைக்கு முள்ளும் மலரும் சினிமா பார்க்கக் கூட்டிப் போயிருந்தார். வரும் வழியெல்லாம் வீட்டுக்குத் தெரியாமல் காதல் திருமணம் செய்துகொண்டு போயிருந்த தன் தங்கையைத் திட்டிக்கொண்டே வந்தார்.. ஷோபா மாதிரி தனக்கு மரியாதை தந்திருந்தால் அந்தக் கேடுகெட்டவனுக்கே கல்யாணம் செய்துவைத்திருப்பேன் என்ற புலம்பலுக்கிடையே இந்த சினிமாவுக்குப் போகலாம் என்று சொன்ன அம்மாவுக்கும் திட்டு கிடைத்தது.

அதுதான் அப்பா எங்களைக் கூட்டிச் சென்ற முதலும் கடைசியுமான சினிமா. எல்லா சினிமாவிலும் அண்ணன்கள் பேச்சைக் கேட்காமல் தங்கைகள் காதல் திருமணம் செய்து ஓடிப் போய்விடுவதாக நம்பினார்.

அன்பு, பாசம், காதல் என மனதை வருடும் மெல்லிய உணர்வுகளுக்குள் வெளிப்படையாகச் சிக்காத ஒரு உறவினை அப்பா என்று உணர்ந்திருக்கிறேன். எல்லாம் தெரிந்த... ஆனால் எதுவுமே தெரியாத ஒன்றாக இருந்தார். எல்லா உறவுக்குள்ளும் ஒரு அப்பா இருந்தார். எல்லா உணர்வுக்குள்ளும் ஒரு அப்பா இருந்தார். என் அக்காவிடம் அவரைப் பார்த்திருக்கிறேன். அம்மாவிடமும் அவரைப் பார்த்திருக்கிறேன்.

கண்ணீரையும் கண்களுக்குத் தெரியாமல் கொட்டிவிட அப்பாக்களுக்கு மட்டுமே தெரியும். அவர் அழுது நான் பார்த்ததில்லை. அக்கா திருமணத்தின்போது அழுதிருக்க வேண்டும். ஆனாலும் எங்களின் முன்பு அழுதுவிடக்கூடாதென்று தவிர்த்தார்.

அப்பாவிடம் எனக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டும் என்றால், தாத்தா பற்றிக் கேட்பேன். உடனே என்னை அருகில் சேர்த்துக்கொள்வார். அவரின் அப்பா பற்றிப் பேசுவதில் அவ்வளவு ஆசை இருந்தது. தாத்தாவின் வீரத்தில் தொடங்கும் கதை, ஊரே நடுங்கும் பெருமையில் முடியும்.

அப்பா எனக்குக் காட்டிய தாத்தா என்கிற பிம்பம் இன்னும் பயமாக இருந்தது. அவர் பெருமை என்று சொல்லும் எல்லாவற்றிலும் அன்பு இல்லையே என்று தேடினேன். அப்பா கூடப்பிறந்தவர்கள் பன்னிரெண்டுபேர்... தாத்தா யாரைக் கூப்பிடுகிறாரோ அவர்மட்டுமே எதிரில் போய் நிற்பார்களாம். மற்றப்படி ஊர்த் திருவிழா, பண்டிகைக் காலங்களில் தாத்தாவோடு எல்லோருமாகச் சேர்ந்து சாப்பிட ஒரு வாய்ப்பு கிடைக்குமாம். இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது என்று நினைத்துக்கொள்வேன்.

தாத்தாவின் கைபடும் தொடுவுணர்வுகூட அப்பாவுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. அப்பாவிடம் இதுபற்றிக் கேட்டபோது, குழந்தைகள் பிறந்து ஆறுமாதம் வரைகூடத் தூக்குவதில்லையாம்...

'தனக்குக் குழந்தைகளைத் தூக்கத் தெரியாது.... தலை நிக்கட்டும் தூக்குறேன்' என்றாராம்.

ஆறு மாதம் கழிந்தபிறகு, கொஞ்சம்

தூக்கியிருக்கிறார்.. கூட்டித் திரிந்திருக்கிறார். அதுவும்கூட அப்பாவைப் பள்ளியில் சேர்க்கும்வரையே. அதன்பிறகு பிள்ளைகள் பற்றிய கவலை அவர்களின் கல்யாணத்தின்போது வந்திருக்கிறது. பாட்டி அடிக்கடி சொல்வாராம், ‘பிள்ளைங்க பேரைக்கூட சமயத்துல மாத்திக் கூப்பிடுவாரு’ன்னு.

அதிலும் அத்தை காதல் திருமணம் செய்துகொண்டு போனதிலிருந்து தாத்தா இன்னும் கொடூரமானவராக மாறியிருக்கிறார். யாரையும் நம்பாமல், குறிப்பாக வீட்டுப் பெண்கள் மீது ஒரு வெறுப்புடனே இருந்திருக்கிறார்.

தாத்தா மாதிரியில்லை அப்பா. அம்மா எவ்வளவுதான் அப்பாவைக் காட்டிப் பயமுறுத்தினாலும், ஆரம்பத்தில் இருந்த பயம் நாளாக நாளாகக் குறைந்திருந்தது. கல்லூரி முடிக்கும்வரைகூட என்னைத் தன்னுடைய கண்பார்வையிலேயே வைத்திருந்தார்.

வெளியூரு போகும்போது எனக்கு என்ன பிடிக்கும்... என்பதிலிருந்து, அக்காவுக்கு என்ன பிடிக்கும் என்பதுவரை அம்மாவிடம் கேட்டுவிட்டு வாங்கிவருவார்.

நான் பறக்கப் பழகிய பின்னும், என்மீதான அக்கறை அவரிடம் இருந்தது. அக்காவுக்கு மாப்பிள்ளை பார்த்துவிட்டுவந்து முதலில் என்னிடம்தான் ‘மாப்பிள்ளை பிடிச்சிருக்கா’ என்று கேட்டார். என்னிடம் கேட்டதுதான் எல்லோருக்கும் ஆச்சர்யமாக இருந்தது. நான் தயங்கியபோது, ‘என் காலத்திற்குப் பிறகு நல்லது கெட்டது நீதான பார்க்கணும்’ என்றார்.

உடனே நான், பிடிச்சிருக்கு என்றதும் அக்கா என்னை முறைத்தாள். உடனே பிடிக்கலை என்றேன்.. ‘அவன் சின்ன பய அவனுக்கு என்ன தெரியும்? பயப்படுறான் பாருங்க’ என்று அம்மா சொன்னதும், அதை ஆமோதித்தார்.

என் இளமைக் காலத் தொடக்கத்தில் அப்பாவுக்குப் பயந்த அம்மா, இளமைக் காலத்தின் இறுதியில் அப்பாவிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றத் தொடங்கியிருந்தார். காலச்சக்கரம் மெதுவாக எல்லா இடங்களிலும் அம்மாக்கள் பக்கமாகச் சுற்றிய நேரம்.

அம்மா ராணியாகியிருந்தார். அப்பாவின் இருமல் செருமல் வார்த்தையாகியிருந்தது. இறுதிக்காலம் வரையிலும் அரசனாகவே இறந்துபோன தாத்தாவின் காலம் அப்பாவுக்கு வாய்க்கவில்லை.

அப்படி அப்பாவைப் பார்க்க எங்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஆனாலும் அப்பாவுக்குப் பயப்படும்படியாகவே எங்களைப் பார்த்துக்கொண்டார் அம்மா.

தனக்குப் பயந்தே இருக்க வேண்டுமென்று நினைக்கிற அப்பா, “உங்ககிட்ட சொல்லாம மறைச்சிருந்தா தப்புதான்... ஸ்கூல் மெசேஜை பார்க்காம விட்டது உங்க தப்பு”னு என் மகன் என்னைச் சாதாரணமாகக் கையாளும்போது சிரிக்கிறார்.

“நீ இப்பவும் எனக்குப் பயப்படுற மாதிரியே, அவன் உனக்குப் பயப்படணும்னு நெனைக்காத... அது வேற காலம், இது வேற காலம்” என்கிறார்.

அப்பா காலத்தில் பாதியில் இடம் மாறிய அதிகாரம், இப்போது தொடக்கத்திலேயே மாறிவிட்டது. மகனுக்கு அம்மாவிடம் இருக்கும் பயம் என்னிடமில்லை. என்னை வெகு சாதாரணமாக டீல் செய்கிறான்.

அவனுக்கு என் காவல் தேவையில்லை. அவனுக்கான என் வழிகாட்டுதலில் இருக்கும் நன்மை தீமைகளை உடனே பட்டியலிடுகிறான். இருவரும் தத்தம் மூச்சுக்காற்று படும் தூரத்திலேயே இருக்கிறோம். ஆனால் வேறு வேறு காலத்தில் வேறு வேறு எண்ணங்களில்.


அவனது கனவு எனக்குப் புதிதாக இருக்கிறது. அவனது பாதைகள் எனக்குப் பழக்கமில்லாதது. இப்ப ‘வர்ஷா ஹரிணியைப் பிடிக்கல’ என்கிறான். அந்த நேரத்தில் கைபேசியில் அழைக்கும் ஜனனியிடம் வெகு இயல்பாக என்னருகிலிருந்தே பேசுகிறான். அவன் செயல் சரியா தவறா என்று எனக்குப் புரியவில்லை.

‘உங்க அனுமதி எனக்குத் தேவையில்லை... அம்மாகிட்ட பேசி சம்மதம் வாங்கித்தாங்கப்பா...’ பள்ளிச் சுற்றுலாவுக்கு என் மூலம் அவன் அம்மாவிடம் அனுமதி



கேட்கிறான். எனக்கும் அவனுக்குமான சிறு கால இடைவெளியில் எல்லாமும் மாறியிருக்கிறது. அம்மா மூலமாக அப்பாவிடம் அனுமதி வாங்கிய காலம் வெகு தூரத்திற்குச் சென்றிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் அப்பா மூலம் அம்மாவிடம் பிள்ளைகள் அனுமதி வாங்க நிற்பதை ஆச்சர்யத்துடன் வேடிக்கை பார்க்கிறேன். என்னைவிடவும் வீட்டு ஹாலில் போட்டோவாகத் தொங்கிக்கொண்டிருக்கும் என் தாத்தாவுக்குத்தான் ஆச்சர்யமாக இருக்கும். அத்தையிடம் கோபப்பட்டதற்குத் தார்மீகமாக மன்னிப்பு கேட்கக்கூடும்.



அப்பா உணர்வில் அந்தக்காலம், இந்தக்காலம், வருங்காலம் என்ற குழப்பத்தில் இருக்கிறேன். 'ஜனனி என்ன பேசுகிறாள்?' 'வர்ஷா ஹரிணியைவிடவும் நன்றாக இவனிடம் பேசுவாளோ?' மனதுக்குள் ஆயிரம் அலைகள் மாறி மாறி வந்துகொண்டிருந்தன. காலத்தின் இயல்பு புரிந்ததும் மனம் அமைதியானது.

காலத்தின் குவளைக்கு ஏற்ப தன்னை நிறைத்துக்கொள்ள இந்த அப்பாக்களால் எப்படி முடிகிறது? இப்போதும் அப்பாவை நான் வெளிச்சம் என்பேன். அப்பா என்கிற வெளிச்சத்தைப் பிடித்து வெகுதூரம் நடக்க ஆசையாக இருந்தபோதும் அந்தக் காலச் சூழ்நிலை அதற்கு ஒத்துழைக்கவில்லை. அவரும் ஒரு அப்பாவின் இயல்பாக... யாரோ சோல்லிக் கொடுத்ததை அப்படியே இறுக்கமாக நடித்துக்கொண்டிருந்தார். அம்மாவும் கூடச்சேர்ந்து அதை அப்படியே நம்பவைத்துக் கொண்டிருந்தார்.

அப்பாவிடம் அந்த வயதில் இருந்த பயத்தை இப்போதும் தொடர்கிறேன்... பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றபோதிலும். பயம் இருப்பதுபோல் நான் நடிப்பதை இந்தத் தள்ளாத வயதிலும் அப்பா விரும்புகிறார். அதில் அவருக்கு அப்படியொரு சந்தோசம். திடீரென மிரட்டும் தொனியில் அவர் பேச, பயப்படுவதுபோல் நான் நடிக்கும் காட்சியை, என் மனைவி உண்மையென்று நினைத்து என்னைக் கேலி செய்வாள்.

அப்பாவை இறுதி வரைக்கும் அப்பாவாக வைத்திருப்பதில் என்ன தவறு இருக்கிறது என்பேன். இன்னமும் அவருக்கு மகனாகவே நான் இருக்கிறேன் என்கிற ஒரு நம்பிக்கையை, ஒரு சந்தோசத்தைக் கொடுப்பதில் தவறு இல்லை என்பேன்.

'நீங்க பயப்படுறதுனாலதான், உங்கள மாதிரியே நானும் உங்க அப்பா அம்மாவுக்கு பயப்படணும்னு நெனைக்கிறாங்க... ஆனா என்னால அது முடியாது..' என்கிறாள். ■

*

பயணம்
தொடர் - 2

இந்திரன்



# கரீபியன் தீவுகளில் அலையும் தமிழனின் ஆன்மா

கரீபியன் கடலில் மிதந்துகொண்டிருக்கும் - இதுவரையிலும் நான் பெயர் கேள்விப்பட்டிராத - ஒரு மர்மத் தீவிலிருந்து, அந்தத் தீவிற்கு வருகை தருமாறு எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. அந்தத் தீவின் பெயரை எப்படி உச்சரிப்பது என்றுகூட எனக்குத் தெரியவில்லை. எனக்கு வந்த மின்னஞ்சலுக்குப் பதிலிடுவதா வேண்டாமா என்று குழம்பிக்கொண்டிருந்த வேளையில்தான் பாரீசில் வாழும் பிரெஞ்சு பேராசிரியரான தேவ்குமாரன் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அந்தத் தீவின் பெயர் "கொதுலுப்" என்று பிரெஞ்சு உச்சரிப்பில் சொன்னார். *`GUA-DELLOUPE`* என்று எழுதப்படும் அந்த ஐந்து சின்னஞ்சிறு தீவுகளின் கூட்டம் பூகோளரீதியாக ஐரோப்பா கண்டத்தில் இல்லையென்றாலும் அது பிரான்சு நாட்டின் ஒரு மாநிலம்தான் என்றும், அங்கு ஐரோப்பாவில் இருப்பது போன்றே "ஈரோ"தான் புழக்கத்தில் இருக்கும் நாணயம் என்றும் குறிப்பிட்டார். அங்கேயுள்ள "கோபியோ" ( *GOPIO- GLOBAL NETWORK FOR PEOPLE OF INDIAN ORIGIN)* எனும் இந்திய சர்வதேச அமைப்பிற்கு எனது ஆங்கில நூல்களைக் கொடுத்தது அவர்தான் என்றும், தயங்காமல் போய் வாருங்கள் என்றும் வாழ்த்திச் சொன்னார்.

நான் கணினியில் அந்தத் தீவு குறித்த தகவல்களைச் சேகரித்தேன். கரீபியன் கடலில் உலக வரைபடத்தில் கியூபாவுக்குக் கீழே, வெறும் *1628* சதுர கிலோ மீட்டர்கள்

மட்டுமே பரப்பளவு கொண்ட ஐந்து தீவுகளின் கூட்டம்தான் அது என்றும், பிரெஞ்சை ஆட்சி மொழியாகக் கொண்ட அதன் மக்கள் தொகை 4 லட்சத்து 60 ஆயிரம் மட்டுமே என்றும் தெரிந்துகொண்டேன். விமானத்திலிருந்து பார்த்தால் ஒரு பட்டாம்பூச்சியின் வடிவத்தில் அது தெரிவதால் அதற்கு "பட்டாம்பூச்சித் தீவு" எனும் பரவலான பெயரும் இருப்பதாக அறிந்தேன்.

எனது பயண ஏற்பாடுகளை நான் முன்பின் சந்தித்திராத மிஷெல் நாராயனின்சாமி (MICHEL NARAYANINSAMY- THE PRESIDENT GOPIO, GUADELLOUPE ), ரெஜிஸ் ராம்சாமி (REGIS RAMSAMY – THE PRESIDENT, GOPIO, REUNION ISLAND) ஆகியோர் செய்தனர். முன்பின் சந்தித்திராத அவர்களின் பெயர்களில் இருந்த தமிழ் அடையாளத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் அவர்களைப் பற்றித் தெரியாது.

சென்னையிலிருந்து புறப்பட்டு பாரீஸ் சார்ல்ஸ் தெகோல் விமானநிலையத்தில் இறங்கினேன். அடுத்த அரை மணி நேரத்துக்குள் பாரீசின் மற்றொரு விமான நிலையமான ஒர்லிக்கு ஓடிப் போய் கொதுலுப் விமானத்தைப் பிடிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. ஒருவழியாக கொதுலுப்பின் சின்னஞ்சிறிய விமான நிலையத்தில் சென்று இறங்கியபோது பயங்கரமான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவை எனக்காக அல்ல. கொதுலுப்பின் புகழ்பெற்ற கால் பந்தாட்டக் குழு வெளிநாடு சென்று வெற்றி வாகை சூடி வந்திருக்கிறது. என்னோடு பாரீசிலிருந்து பயணம் செய்து வந்த கொதுலுப் கால்பந்தாட்டக் குழு தனது சிவப்பு வண்ண யூனிஃபார்மினால் விமான நிலையத்தைக் கலக்கியது. அந்தக் களியாட்டத்தில் கரைந்தது எனது வரவு.

கொதுலுப்பில் இருக்கும் பிரெஞ்சு நாட்டின் சுற்றுலாத்துறை மூன்று இந்திய எழுத்தாளர்களை அழைப்பதாக முடிவெடுத்து என்னைச் சென்னையிலிருந்தும், சயந்தன் சக்கரபோர்த்தி என்ற வங்காளி எழுத்தாளரைத் தில்லியிலிருந்தும், அருண்குமார் எனும் இந்தி எழுத்தாளரை வாஷிங்டனிலிருந்தும் அழைத்திருந்தார்கள் என்பதைப் பின்னர் தெரிந்துகொண்டேன். அந்தத் தீவில் எங்களுக்கு எந்த வேலையும் கிடையாது. வெறுமனே ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் தங்கிக்கொண்டு அந்த நாட்டையும், மக்களையும் சுற்றிப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் வேலை. இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் அந்தத் தீவின் பின்னணியில் ஏதேனும் படைப்பிலக்கியம் செய்வோம் என்றால் மகிழ்வோம் என்றார் கொதுலுப் தீவின் சுற்றுலாத்துறையின் இயக்குனரான பிரெஞ்சுக்காரர்.

கொதுலுப் எனும் அந்த ஐந்து சின்னஞ்சிறிய தீவுகளில் எரிமலை இருக்கிறது; மழைக்காடுகள் உள்ளன; அற்புதமான அருவிகள் உள்ளன; உலகின் மிகத் தூய்மையான கடற்கரைகள் எங்கு பார்த்தாலும் இதயத்தை வசீகரிக்கின்றன. கரும்பும், வாழையும், அன்னாசியும், அனைத்துத் தானியங்களுமாய்ச் செழித்துக் குலுங்குகிறது தீவு. கொதுலுப்பில் கரும்புச் சக்கையிலிருந்து தயாராகும் ரம் எனும் மதுபானம் உலகிலேயே பெயர் பெற்று விளங்குகின்றது. அமைதி அங்கே கொள்ளை மலிவு. நான் கவிதைகளை எழுதும் மனநிலைக்குச் சென்றேன். அத்தீவின் இயற்கை அழகு கவிதை எழுதாமல் இருக்க முடியாது என்கிற பித்த மனநிலைக்கு என்னை அழைத்துச் சென்றது. நிறைய கவிதைகளை எழுதினேன். அண்மையில் அத்தீவில் எழுதிய கவிதைகளைத் தொகுத்து "மிக அருகில் கடல்" எனும் பெயரில் ஒரு கவிதைத் தொகுப்பாக வெளியிட்டேன்.

ஊரைச் சுற்றிப் பார்த்தபோது எனக்குத் தெரிய வந்த ஒரு உண்மை என்னை வெகுவாகத் தாக்கியது. இந்தியாவில் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம், சந்திரநாகூர் ஆகிய பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த பல பகுதிகளிலிருந்து இந்தியர்கள் சுமார் ஆறு தலைமுறைக்கு முன்னால் கூலித் தொழிலாளிகளாகச் சென்று இத்தீவில் குடியேறி இருக்கிறார்கள். இவர்களின் வம்சாவளியினர்



இப்போது இத்தீவின் முக்கிய குடிமக்களாக மாறியிருக்கிறார்கள். செல்வந்தர்களாகவும், பெரும் நிலக்கிழார்களாகவும் உள்ளனர்.

1848இல் கருப்பர்களின் அடிமை முறை உலகெங்கிலும் ஒழிக்கப்பட்ட பிறகு கொதுலுப்பில் இருந்த கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கருப்பர்கள் யாரும் தயாராக இல்லை. உலகில் அடிமை மனப்பான்மையுடன் கீழ்ப்படிதல் உள்ளவர்கள் யாரென்று பிரெஞ்சுக்காரர்கள் தேடியபோது அதற்கு இந்தியர்கள்தான் உகந்தவர்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே இந்தியாவின் பிரெஞ்சுக் காலனிப் பகுதிகளிலிருந்து 40000 கூலித் தொழிலாளிகளைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இவர்களில் 70 சதவீதம் பேர் தமிழர்கள்.

அவர்கள் தீவில் சென்று இறங்கியவுடன் அவர்களின் ஆவணங்களைக் கிழித்துப் போட்டுவிட்டு அவர்கள் தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்பாத வகை செய்து இருக்கிறார்கள். தமிழ் மக்கள் தங்கள் மதத்தின் முறையில் திருமணம் செய்துகொண்டால் அது சட்டப்படி செல்லாது என்று கூறவே அனைவரும் கிருத்துவ மதத்திற்கு மாறியிருக்கிறார்கள். இன்று இத்தீவில் வாழும் தமிழர்களில் ஒருவருக்குக் கூடத் தமிழ் தெரியாது. அனைவரும் பிரெஞ்சு மொழி பேசுகிறார்கள். அனைவரும் கிருத்துவர்கள். முழுக்க முழுக்க பிரெஞ்சுக் கலாச்சாரத்துக்கு மாறிவிட்ட இவர்கள் இன்றைக்குத் தங்களின் வேர்களைத் தேடிப் பயணப்படுகிறார்கள்.

இவர்கள் தமிழ் மொழியை மறந்துவிட்டாலும் கூட, தமிழ்ப் பண்பாடு இவர்களை இன்னமும் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கவே செய்கிறது என்பதுதான் விந்தையிலும் விந்தை. பிரெஞ்சு சுற்றுலாத்துறையின் சார்பாக என்னுடன் காரோட்டி வந்து அனைத்து இடங்களையும் சுற்றிக் காண்பித்தவரான ஒருவர் தமிழரைப் போலவே தென்படவில்லை. அவர் கருப்பர் இனத்தவரைப் போல் இருந்தார். ஆனால் அவர் என்னிடம் ஒருமுறை சொன்னார், நான் பாண்டிச்சேரியின் தமிழினத்தைச்

சேர்ந்தவன் என்று. அவர் பெயரும் கூட தமிழ்ப் பெயர் இல்லை. பொதுவாக அந்தத் தீவில் வாழும் தமிழ் வம்சாவளியினரின் பெயரில் தமிழ் இருக்கும். உதாரணத்துக்கு கோபியோ அமைப்பின் இன்றைய தலைவர் மிஷெல் நாராயணின்சாமி என்பதைச் சொல்லலாம். இதே போன்று ஏராளமான தமிழ்ப் பெயர்கள் கோபர்தன் ழான் மரீ, பெருமாள் ஃபிலிஸ்ட் கோவிந்தின், ஆறுமுகம் தித் அர்மாண்ட் என்று பிரெஞ்சு வேடமிட்டுப் புழங்கிவருகின்றன. எனவே அந்த நண்பரிடம் நீங்கள் பாண்டிச்சேரி தமிழ் வம்சாவளியினர் என்பதற்கான ஆதாரம் என்ன என்று கேட்டேன். அவர் என்னை அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் வீட்டின் அலங்கார அலமாரிக்குள் பித்தளையில் செய்யப்பட்ட மிகப் பழமையான வெற்றிலைப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருந்தது. எனது முன்னோர்களில் ஒருவர் வைத்திருந்த இந்தப் பெட்டிதான் நான் பாண்டிச்சேரித் தமிழன் என்பதற்கான அடையாளம் என்று சொன்னபோது நான் மிரண்டுபோனேன். தமிழ் அடையாளம் ஒரு வெற்றிலைச் செல்லம் எனும் ஒரு கலைப்பொருளின் மூலமாகத் தலைமுறைகள் தாண்டி வாழ்கிறது என்பது என்னைப் பரவசப்படுத்தியது.

இதேபோல் கடலோரப் பகுதி ஒன்றில் இருக்கும் சந்தை ஒன்றைப் பார்ப்பதற்காகச் சென்ற பாதையில் ஒரு அதிசயத்தைக் கண்டேன். அங்கு திருநெல்வேலிப் பகுதிகளில் காணப்படும் சுடலை மாடன் வழிபாட்டின் தடயம் ஒன்றைக் கண்டேன். மாடம் ஒன்று கட்டப்பட்டு அங்கு தேங்காய் உடைத்து, குங்குமம் போன்று சிவப்பு வண்ணம் பூசப்பட்ட அன்னாசிப்பழம் படைத்து வழிபாடு நிகழ்த்தப்பட்டு வருவதைக் கண்டு அதிசயித்தேன். இதே போன்ற தமிழர்களின் மதரீதியான தீ மிதித்தல், அலகு குத்துதல் போன்ற பல சரியை கிரியைகள் இங்கே இன்னமும் உயிர்த் துடிப்புடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ்மொழி முற்றிலுமாக வேரழிந்து நிற்கிறது.



இதே போன்று எங்களுக்காகச் சிறப்பான நாட்டியம் ஒன்று நிகழ்த்திக் காட்டப்பட்டது. அதனை நிகழ்த்தியவர்கள் நவநாகரீகமான இளம்பெண்களும், இளம் ஆண்களும். இவர்களை வழிகாட்டும் விதமாகச் சில மூத்தவர்களும் நாட்டியத்தில் பங்கேற்றனர். இந்நாட்டியத்தின் உடை அலங்காரம் தமிழகத்துத் தெருக்கூத்து, மலபார் பகுதியில் வழங்கும் கூத்துக்கள் போன்றவற்றின் சாயலுடன் இருந்தது. அருமையான இசைப்பாடலுக்கு ஆடிய அவர்களின் பாடல்களை ஒலிப்பதிவு செய்துகொண்டு எனது ஓட்டல் அறைக்கு வந்தேன். பிரெஞ்சு மொழியில் பாடப்பட்ட பாடல்கள் என்று நான் கருதிய பாடல்களை அமைதியாக மீண்டும் மீண்டும் கேட்டுப்பார்த்தபோது எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்தப் பாடல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் அமைந்திருந்தன. அவற்றை மோசமான உச்சரிப்பில் பாடியதால் என்னால் அடையாளம் காண முடியவில்லை. எனவே பேச்சு வழக்கு அற்றுப்போனதாக இருந்த தமிழ்மொழி கலைகளின் வாயிலாக இன்னமும் திரிபடைந்து ஒலித்துவருகிறது என்பதைக் கண்டேன்.

கூலி அடிமைத் தொழிலாளிகளாக ஆறு தலைமுறைகளுக்கு முன்னால் கொதுலுப் தீவுக்குச் சென்ற தங்கள் முன்னோர்கள் பற்றிய அக்கறை இன்றைய கொதுலுப் தமிழர்களுக்குத் தோன்றியிருக்கிறது. அவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற முதல் கப்பலின் வருகையை நினைவு தினமாகக் கொண்டாடுகிறார்கள் இப்போது. அவர்களின் நினைவாக, பளிங்கில் மணிமாளிகை ஒன்றை கோபியோ எனும் சர்வதேச அமைப்பு நிர்மாணித்துவருகிறது. அதன் திறப்பு விழா மிக விரைவில் நடைபெறப்போகிறது.

கடல் பல கடந்து கரீபியன் கடலும், அட்லாண்டிக் கடலும் கலக்கும் ஒரு இடத்தில் இருக்கும் கொதுலுப் என்னும் சின்னஞ்சிறு தீவுகளில் இன்னமும் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது தமிழ் மூதாதையர்களின் ஆன்மா.

தொடர் – 9

ஆதிரன்

# வானவில் வண்ண மின்னல்



## மொழி

எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே – தொல்காப்பியம்

*"The difference between the almost right word and the right word is the difference between the lightning bug and the lightning" - Mark Twain.*

மனிதன் தனது கருத்தைச் சகமனிதனுக்குப் புலப்படுத்துவதற்கு ஒரு கருவியாகக் கொள்ளும் ஒலித்தொகுதியே மொழி என்பார் பாவாணர். மொழி ஒரு இணைப்புக் கருவி. மேலும் மொழி என்பது ஒரு சிந்தனைக் கருவி. நம் மனத்தின் உள்ளே ஏதாவது ஒன்றைச் சிந்திப்பது என்பது மொழியின் ஒரு நிலை ஆகும். பலர் சேர்ந்து ஒரு இனமாக வாழ்வதற்கு அவர்களின் நிறமோ பழக்கவழக்கமோ காரணமில்லை. மாறாக அவர்கள் ஒரு மொழி பேசுவோராக இருப்பதுதான் காரணமாகும். அதன்படி, ஒரு மொழி என்பது ஒரு இனத்தின் புற அடையாளம் எனலாம்.

பேசப்படுவதும் கேட்கப்படுவதும் மொழியின் முதல் படி என்றால் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த படி ஆகும். எண்ணப்படுவதும் நினைக்கப்படுவதும் கனவு காணப்படுவதும் மொழியினாலே சாத்தியப்படுகிறது. மொழி குறித்த இந்தப் பத்தியை விக்கிபீடியாவிலிருந்து அப்படியே அளிக்கிறேன்;

`பயன்பாட்டு மொழியியல் அல்லது பயனாக்க மொழியியல் என்பது, மொழியியலின் ஒரு பிரிவாகும். இது மொழியியற் கோட்பாடுகளை உலகின் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பயன்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது. இது மொழிக் கல்வி, இரண்டாம் மொழிகற்றல் போன்ற துறைகளிலேயே அதிகம் பயன்பட்டு வந்தது. இத்துறை மொழி கற்றல் ஆய்வுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது என்பவர்களுக்கும், இல்லை, இது மொழியியற் கோட்பாடுகளின் பயன்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்குகிறது என்போருக்கும் இடையே தொடர்ச்சியான இழுபறிநிலை இருந்து வந்தது. தற்காலத்தில், மொழியியல் தொடர்பான அறிவு பல்வேறுபட்ட அறிவுத்துறைகளுக்கும் தேவையான ஒன்றாக உள்ளது. இலக்கியம், நாட்டுப்புறவியல், அகராதியியல், சமூகவியல், மானிடவியல் போன்ற துறைகளிலும், உளவியல், கணினி அறிவியல், நரம்பியல், தகவல் தொடர்பியல் போன்ற அறிவியல் சார்ந்த துறைகளிலும் மொழியியலின் தேவை பெருமளவுக்கு உணரப்பட்டுள்ளது. இத்துறைகளிலான ஆய்வுகளில் மொழியியல் கோட்பாடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழியியல் (Linguistics) என்பது மொழியை அறிவியல் முறைப்படி ஆராய்வதற்குரிய ஒரு துறையாகும். மொழியின் வடிவம், பொருள், சூழல் போன்றவற்றையும் மொழியியல் ஆய்வு செய்கிறது. மொழியியலாளர்கள் சொற்களின் ஒலி மற்றும் பொருளுக்கு இடையிலான ஓர் ஒற்றுமையைக் கவனிப்பதன் மூலம் பாரம்பரியமாக மனித

மொழியைப் பகுப்பாய்வு செய்கின்றனர். ஒலிப்பியல் என்பது பேச்சு மற்றும் உரையாடல் ஒலிகளைப் பற்றிய ஆய்வு ஆகும். மேலும் இது அவர்களின் ஒலி தொடர்பான மற்றும் ஒலிகளைத் தெளிவாக உச்சரிப்பதற்குரிய உச்சரிப்பொலியியல் பண்புகளுக்குள்ளும் நுழைகிறது. மறுபுறம், மொழியின் அர்த்தத்தை ஆய்வு செய்து உலகின் பிற கூறுகள், பண்புகள் மற்றும் உலகின் பிற அம்சங்கள் ஆகியவற்றிற்கு இடையேயான உறவுகளை எவ்வாறு புரிந்துகொள்வது, செயல்படுத்துவது மற்றும் பொருளை வழங்குவது, அத்துடன் எவ்வாறு நிர்வகிப்பது, தோன்றும் கருத்து மயக்கத்தை எவ்வாறு தீர்ப்பது ஆகியவற்றைப் பற்றியும் மொழியியல் பேசுகிறது. அதேவேளையில் சொற்பொருள்களைப் பற்றிய ஆய்வு, சூழல் எவ்வாறு மொழிக்கான பொருளை உருவாக்குகிறது என்ற உண்மை நிலையையும் ஆராய்வதை மொழியியல் நடைமுறையாகக் கொண்டுள்ளது. இலக்கணம் என்பது ஒரு மொழியில் சொற்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை நிர்வகிக்கும் விதிமுறைகள் தொடர்பான நடைமுறையாகும். இவ்விதிமுறைகள் ஒலிகளுக்கும் அவை தரும் பொருளுக்கும் பொருந்தும். மேலும், ஒலிக்கும் ஒலியமைப்புகளின் அமைப்பு சார்ந்த குரலியல், சொற்களின் அமைப்பு மற்றும் உருவாக்கம் சார்ந்த உருபனியல், சொற்றொடர்கள் உருவாக்கம் மற்றும் அமைப்பு சார்ந்த தொடரியல் உள்ளிட்டவற்றின் உட்கூறுகள் சார்ந்த துணைவிதிகளையும் இலக்கணம் வரையறை செய்கிறது. இலக்கணத்தின் கொள்கைகளில் நவீன இலக்கணக் கோட்பாடுகள் கவனம் செலுத்துகின்றன. இவை பெரும்பாலும் நோம் சோம்சுகியின் சித்தாந்தக் கல்வியின் பொது இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மொழியியல் ஆய்வு, கீழே தரப்பட்டுள்ள மூன்று விதமான அடிப்படைகளில் நடைபெறுவதாகக் காணப்படுகிறது. பழங்கால இலக்கண பதிப்பான தொல்காப்பியம், தமிழ் மொழியில் மட்டும் இல்லாமல் உலக மொழிகளில் ஒரு மொழியியல் ஆய்வு என்பதில் முதன்மையும், தொன்மையும் பெற்றது. *1. விளக்கமுறையும் வரலாற்றுமுறையும் (Synchronic and diachronic)* -- விளக்கமுறை, என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மொழியின் நிலையைக் கருத்திலெடுத்து ஆய்வு செய்வதைக் குறிக்கும். வரலாற்றுமுறை என்பது ஒரு மொழியின் அல்லது ஒரு மொழிக் குழுவின் வரலாற்றையும், அவற்றில் எவ்வாறான அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் ஆராய்வதாகும். *2. கோட்பாட்டு மற்றும் பயன்பாட்டு முறை* -- கோட்பாட்டு மொழியியல், தனிப்பட்ட மொழிகளை விவரிப்பதற்கான சட்டகங்களை *(frameworks)* உருவாக்குவதுடன், அனைத்து மொழிகள் தொடர்பான கோட்பாடுகள் பற்றியும் கவனத்திற் கொண்டுள்ளது. *3. சூழ்நிலைசார் மற்றும் சுதந்திரமான முறை.* பிரித்தானிக்கா கலைக்களஞ்சியம் பெருமொழியியல் *(macro-linguistics)*, நுண் மொழியியல் *(microlinguistics)*, என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறது. சூழல்சார் மொழியியல், ஒரு மொழி எவ்வாறு இந்த உலகத்துடன் பொருத்தப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை, அதன் சமூகச் செயற்பாடு, எவ்வாறு பெறப்பட்டது, எவ்வாறு உருவானது மற்றும் எவ்வாறு நோக்கப்படுகிறது என்பவற்றைக் கருத்திலெடுத்து ஆராய்கின்றது. சுதந்திர மொழியியல், மொழிகளின் புறநிலை அம்சங்களைக் கருத்தில்கொள்ளாது, அம் மொழிகளைத் தனியாக ஆராய முற்படுகிறது. இவ்வாறான பகுப்புகள் இருந்தாலும், பொதுவாக எவ்விதச் சிறப்பு அடைமொழிகளுமில்லாது, வெறுமனே "மொழியியலாளர்கள்" என்று அழைக்கப்படுபவர்கள், மொழியியலின் மையக்கருவாகக் கருதப்படும் சுதந்திர, கோட்பாட்டு விளக்கமுறை *(synchronic)* மொழியியல் பற்றியே முக்கியமாக ஆர்வமுடையவர்களாக உள்ளார்கள். இதுவே பொதுவாகக் "கோட்பாட்டு மொழியியல்" என்று அழைக்கப்படுகிறது'.

கோட்பாட்டு மொழியியல், ஒவ்வொரு மொழிக்கு உள்ளேயும், ஒரு குழுவாக எல்லா மொழிகளுக்கு இடையேயும் உள்ள பொதுவான தன்மைகளைக் கண்டுபிடித்து விளக்கமுயலுகின்ற அதேவேளை, பயன்பாட்டு மொழியியல், இந்தக் கண்டுபிடிப்புகளின் பெறுபேறுகளை ஏனைய துறைகளில்

பயன்படுத்துகிறது. வழக்கமாகப் பயன்பாட்டு மொழியியல், மொழியியல் ஆய்வை, மொழி கற்பித்தல், மற்றும் ஏனைய துறைகளில் பயன்படுத்துவதைக் குறிப்பிடுகிறது.

பேச்சுத் தொகுப்பு (Speech synthesis) மற்றும் பேச்சு அடையாளம்காணல் (Speech recognition) என்பன கணினிகளில் குரல் இடைமாற்றிகளை ஏற்படுத்துவதற்கு மொழியியல் அறிவைப் பயன்படுத்தும் உதாரணங்களாகும்.

"மொழியியல்" என்ற பெயரில் தற்போது நடைபெறும் பெரும்பாலான வேலைகள், சுத்தமாக விபரிப்பு சார்ந்தவையாகும். மொழியியலாளர்கள், கருத்துக்களெதையும் கூறாமல் அல்லது மொழியின் எதிர்காலப் போக்குத் திசைகளைக் குறிப்பிட்டுக் காட்டாமல், மொழியின் இயல்பை விளக்கவே முனைகிறார்கள். எனினும் பல தொழில்சார் மற்றும் அமெச்சூர் மொழியியலாளர்கள், எல்லோரும் பின்பற்றவேண்டிய நியமங்களை வைத்து, மொழிக்கான விதிகளையும் குறித்துக் காட்டுகிறார்கள். விதிப்புமுறை சார்பாளர்கள் (Prescriptivists), "பிழையான பயன்பாடு" என்று கருதி முத்திரை குத்தும் ஒரு விடயத்தில், விளக்கமுறையாளர்கள் (descriptivists) அப் பயன்பாட்டின் மூலம் எதுவென்று ஆராய முயல்வர்; அல்லது அதை "வினோதப் போக்கு" (idiosyncratic) என விளக்குவர். அல்லது, மிக நவீனமானது அல்லது அங்கீகரிக்க முடியாத வட்டார மொழிகளிலிருந்து பெறப்பட்டது போன்ற காரணங்களுக்காக விதிப்புமுறை சார்பாளர்களால் விரும்பப்படாத சில ஒழுங்குமுறைகளை வெளிப்படுத்துவார்கள்.

எந்த அளவு பரந்த மொழி பயன்படுத்தும் குழுவினரை ஆராயவேண்டும் என்பதிலும் மொழியியலாளர்கள் வேறுபடுகிறார்கள். சிலர் குறிப்பிட்ட ஒருவருடைய மொழியை அல்லது மொழி அபிவிருத்தியை மிகவும் நுணுக்கமாக ஆராய்வர். சிலர் ஒரு முழு பேச்சுச் சமுதாயத்தினதுக்குத் தொடர்பான மொழிபற்றி ஆய்வு செய்வர். வேறு சிலர் எல்லா இடங்களிலும் உள்ள எல்லா மனித மொழிகளுக்கும் பொருந்தக்கூடிய விடயங்கள் பற்றி ஆராய முயல்வர். கடைசியாகக் குறிப்பிடப்பட்ட திட்டத்துக்காக நோம் சோம்சுக்கி பிரபலமாக வாதிட்டார். அத்துடன் இது, உளவியல்சார் மொழியியல் (psycholinguistics) மற்றும் அறிதிற அறிவியல் துறைகளைச் சேர்ந்த பலரைக் கவர்ந்தது. மனித மொழியிற் காணப்படும் பொதுமைகள் மனித மனத்தின் பொதுமைகள் பற்றிய முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்தும் எனக் கருதப்பட்டது.

கோட்பாட்டு மொழியியல் பொதுவாக, ஓரளவுக்குத் தனித்தனியாக ஆராயத்தக்க வகையில் பல்வேறு பிரிவுகளாக வகுக்கப்படுகிறது. கீழ்வரும் பிரிவுகள் இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன: ஒலிப்பியல் (phonetics), ஒரு மொழியில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு ஒலிகள் பற்றிய துறை; ஒலியியல் (phonology), ஒரு மொழியின் அடிப்படை ஒலிகளின் வடிவுரு பற்றி ஆராயும் துறை; உருபனியல், சொற்களின் உள் அமைப்புப் பற்றி ஆராயும் துறை; சொற்றொடரியல் (syntax), எவ்வாறு சொற்கள் சேர்ந்து இலக்கணத்துக்குட்பட்ட வசனங்களை உருவாக்குகின்றன என்பதை ஆராயும் துறை; சொற்பொருளியல் (semantics), சொற்களின் நேரடியான (literal) பொருளையும் (சொல் குறிக்கும் பொருள் (lexical semantics)), அவை சேர்ந்து உருவாக்கும் வசனங்களின் நேரடியான பொருள்களையும் ஆராயும் துறை; மொழிநடை (stylistics), மொழியின் பாணிகளை ஆராயும் துறை; சூழ்பொருளியல் (pragmatics), தொடர்புச் செயற்பாடுகளில் எவ்வாறு utterances பயன்படுத்தப்படுகின்றன (literally, figuratively, அல்லது வேறுவிதமாக) என்பது பற்றிய ஆய்வு; தொடரியல் (syntax). ஒலி, உருபன் என இந்த ஒவ்வொரு பகுதியினதும் தனிப்பட்ட முக்கியத்துவம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை, எனினும், கிட்டத்தட்ட எல்லா மொழியியலாளருமே இந்தப் பிரிவுகள் குறிப்பிடத்தக்க அளவு பொதுப் பகுதிகளைக் கொண்டிருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்வர். இருந்தாலும் ஒவ்வொரு துணைப்பிரிவும், குறிப்பிடத்தக்க அறிவுப்பூர்வ ஆய்வுகளைச் செய்யக்கூடிய அளவுக்குத் தனியான அடிப்படையான எண்ணக்கருக்களைக் கொண்டுள்ளன.

■

கவிஞர் ஏகாதசி



# கைதொட்டா தீட்டாம்...

**சா**தி என்கிற ஒற்றைச் சொல்லால் எத்தனை துயரம் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கிறது என்பதற்கு அளவே இல்லை. சாதி எப்படி உருவானது என்பதைப் பற்றி இங்கே பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் சாதியை மனித மனங்களிலிருந்து வெகு விரைவாக அகற்ற வேண்டும். அது மனிதனின் உன்னத வாழ்வுக்கு எதிரானது. சாதி என்பது மனங்கள் சுமக்கும் மலம் போன்றது, இதை மலம் என்று உணராதவரை இவர்கள் சாதியைச் சுமப்பார்கள். சாதியின் கோரமுகத்தால் நசுக்கப்படுகிறவர்களின் வலி பூமியாலும் தாங்கிக்கொள்ள இயலாதது.

சாதி படிந்த ஒருவர் வாழ்வின் எல்லாச் செயல்பாடுகளிலும் நேர்மையற்றவராகவே இருப்பார். இதில் என்ன நகைச்சுவையான விசயம் என்றால் அந்த நபர் தன்னை உலகத்தின் உத்தமரெனக் கருதிக்கொள்ளும் அறியாமைதான். சாதியத்தை அணையாமல் பார்த்துக்கொள்வது அல்லது தூண்டிவிடுவது மதம். இந்த மதத்தையும் சாதியையும் மனங்களிலிருந்து அகற்ற வேண்டுமெனில் நமக்குக் கல்வி போதாது, பகுத்தறிவு வேண்டும்.

என்னுடைய 22 வயதில் எங்கள் ஊர் பணியான் கிராமத்தில் "பெரியார் பாசறை" என்கிற ஒரு மன்றத்தைத் திறக்க திட்டமிட்டு வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன். இந்த மன்றத்தில் பதினைந்திற்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக இருந்தோம். இம்மன்றம் வளர்ந்து நிற்கும் சூழலில் ஊரிலுள்ள ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, பொருளாதாரத்தைப் பூர்த்திசெய்கின்ற திட்டத்தோடு கொள்கைகளை வகுத்துவைத்திருந்தோம். பாசறை திறப்பு விழாவன்று ஊர் மத்தியில் பெரியார் படம் ஏந்திய பதாகையை ஊன்றியபோது பிரச்சனை முளைத்தது. அந்தப் பதாகையில் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் பெயர்கள் இடம் பெறுவதன் மூலம் அவர்கள் உற்சாகமாவார்கள் என்பதற்காகத் தலித் நண்பர்களின் பெயர்களை இடம்பெறச் செய்ததுதான் அதற்குக் காரணம். அதிலும் பிற சாதி நண்பர்களின் பெயர்களும் தலித் நண்பர்களின் பெயர்களும் ஒரே பதாகையில் இடம்பெற்ற காரணம்தான் முக்கியமானது. ஏனெனில் அதுவரை அப்படி ஒன்று அங்கு நடந்ததில்லை. ரசிகர் மன்றப் பதாகையாக இருந்தாலும் சரி, கட்சிப் பதாகையாக இருந்தாலும் சரி, அந்தந்தச் சாதியினர்

அவரவருக்குள்தான் உறுப்பினர்களை வைத்துக்கொள்வார்கள். அந்த விழா தொடர்ந்தால் இரவு தலித் தெருவுக்குள் கல்லெறிவது என்கிற அவர்களின் இரகசிய திட்டம் அறிந்த நாங்கள் விழாவை நிறுத்தினோம்.

இன்னொருமுறை தோழர் திருமாவளவன் அவர்களின் பதாகையை உடைத்து நொறுக்கினார்கள் இடைச்சாதியினர். காரணம் கேட்டதற்கு, திருமாவளவன் அந்தப் பதாகையில் மீசையை முறுக்கிவிட்டிருந்தார், அதனால்தான் நாங்கள் உடைத்தோம் எனப் பதில் சொன்னதாகக் கேள்விப்பட்டேன்.

திடீரென என் சட்டை கிழிந்துவிட்டதால் எனது தலித் நண்பன் ஒருவனின் சட்டையை வீட்டிற்குப் போட்டுக்கொண்டு வந்திருந்தேன். காலையில் கொடியில் புதிதாக ஒரு சட்டை இருப்பதைக் கண்ட என் அம்மா, சட்டை யாருடையதென என் மூலம் தெரிந்துகொண்டு கையால் தொட்டால் தீட்டு என்று எண்ணி ஒரு குச்சியால் அந்தச் சட்டையை எடுத்துக்கொண்டு வெளியே தூக்கிப் போட்ட காட்சியால் இன்னும் என் இதயம் விம்முகிறது. நகரத்தில் உள்ளோர் `சாதி இன்னுமா இருக்கு` என்று கேட்கிறார்கள். சாதியவாதிகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்டுக் கிடந்தபோது தொலைதொடர்பு தொழில்நுட்பம் உள்ளிட்ட எண்ணற்ற புதிய கண்டுபிடிப்புகள் மனிதர்களுக்கு ஒரு வண்ணமயமான வாழ்க்கையைப் பரிசளித்தது. எல்லாரும் இதில் முங்கிப் போய்விட்ட சூழலில் உலகமே சுபிட்சம் பெற்றுவிட்டதாக நம்புகிறோம். ஆனால் நாம் விட்டுவிட்டு வந்த அதே இடத்தில்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கான பல சான்றுகளில் சமீபத்தில் தலித் சகோதரர்களின் குடி தண்ணீர் தொட்டிக்குள் மலத்தைக் கலந்த கொடூரமும் ஒன்று.

பிற உயிர்களைத் துன்புறுத்தி மகிழ்கிற குணம் ஆதிக்க மனோநிலையில் இருந்து தோன்றுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தால் மட்டும்தான் என்னவென்று பார்ப்பார்கள். ஆனால் எளிய மனிதர்கள் ஆதிக்கச் சாதியினரால் தன் மனைவிக்கோ குழந்தைகளுக்கோ ஆபத்து வந்துவிடும் என்றெண்ணி வலியைத் தாங்கிக்கொண்டு வாழவேண்டிய அவல நிலையில் இருக்கின்றனர்.

1968 டிசம்பர் 25 அன்று கீழவெண்மணியில் நடந்த பட்டியலின மக்கள் 44 பேரின் படுகொலையை யாரால் மறக்க முடியும்? இதில் 20 பெண்கள் 19 குழந்தைகளும் இருந்தார்கள் என்பதை எப்படி தாங்கிக்கொண்டு நாமெல்லாம் சோறு தின்று உயிர் வாழ்கிறோம்? அவர்களின் கோரிக்கை மிக மிகச் சிறியது. நிலக்கிழார்களிடம் கூலியாக நாழி நெல் கூட்டிக் கேட்டார்கள். அதை அவர்கள் ஏற்கவில்லை. இதற்கென்ன செய்யலாம் என ஒரு குடிசையில் கூடிப் பேசினர். இதைப் பொறுக்காத நிலக்கிழார்கள் மொத்தமாகக் குடிசையைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். இங்கே கூலி கூடக் கேட்டதும் கூடிப் பேசியதும் கூட ஒரு விசயமில்லை, அவர்கள் பட்டியல் இன மக்கள் என்பதும், ஓர் அடிமை எப்படி கேள்வி கேட்கலாம் என்பதும்தான் அவர்களுக்குப் பிரச்சனை. இது மட்டுமா வரலாறு நெடுக சாதித் தீயில் வெந்த சனங்களின் வடுக்கள் இருக்கின்றன.

பட்டியல் இனத்தைச் சேர்ந்த சங்கர் என்பவர் கௌசல்யா எனும் பெண்ணைச் சாதி மறுப்புத் திருமணம் செய்ததற்காக, 2016 மார்ச் 13இல் உடுமலை பேருந்து நிலையத்தில் நடந்த சங்கரின் படுகொலை ஈரக்கொலையை நடுங்கச் செய்தது. ஒரு ஆணும் பெண்ணும் அன்பைப் பரிமாறிக்கொண்டது தவறா? ஒத்த மனம் கொண்ட ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொண்டு வாழ்வைத் தொடங்கியது தவறா? சாதி பார்த்தா வரும் காதல். தோட்டத்தில் வேலை செய்யும் பட்டியல் வகுப்பைச் சேர்ந்த பெண் கூலித் தொழிலாளர்களிடம் நிலக்கிழார்கள் பாலியல் வன்மைத்தைக் காட்டும்போது அழிந்துபோகிற சாதி, வேறு வேறு இனத்தைச் சேர்ந்த இளம் வயது ஆண் பெண்ணுக்குள் அழியக்கூடாதா என்ன? எழுத்தாளர் இமயம் அவர்கள் எழுதிய "பெத்தவன்" கதை, சாதி வெறிபிடித்த சமூகத்தின் குறியீடு. அந்தக் கதை தமிழகத்தின் கிராமங்களில் நடக்கும் நிஜம்.

*எங்கள் ஊரில் சமீபமாக ஒரு தலித் பாட்டி இறந்துவிடுகிறார். பெரிதாக ஆதரவு இல்லாத அவரின் பிணத்தைப் பாடையில் கிடத்தி எடுத்துச் செல்கின்றனர். பிணம் ஆதிக்கத் தெருவின் வழியாகத்தான் இடுகாடு செல்லவேண்டும். சில மாதங்களுக்கு முன் நடந்த இரு பிரிவினருக்கு இடையிலான ஒரு தகராறு காரணமாக, பாட்டியின் பிணத்தை அந்தத் தெருவில் கொண்டு செல்ல மறுத்து பிணம் கீழே இறக்கி வைக்கப்பட்டு, பிரச்சினை பெரிதாகி 200 காவலர்கள் சூழ, எட்டுமணி நேரம் கழித்தே அந்த வழியாகப் பிணம் எடுத்துச் செல்லப்பட்டது. பாட்டி உயிரோடு இருக்கும்போது அந்த வழியாகத்தான் தோட்ட வேலைக்குச் சென்றிருக்கிறார். அந்தத் தெருவில் பிறந்த குழந்தைகளைக் குளிப்பாட்டப் போயிருக்கிறார். கபடியில் விழுந்து வந்த இளைஞர் பலருக்கும் சுளுக்கு எடுக்கப் போயிருந்திருக்கிறார். ஆனால் இன்று பிணமாகத் தெருவைக் கடப்பதில் மேல் சாதிக்காரர்களுக்கு லாபமில்லை என்பதால் தடுத்து நிறுத்தினர். பாட்டி, முதலும் கடைசியுமாகத் தன் வேலையாக தன் பிணத்தை மண்ணில் புதைத்துக்கொள்ளக்கூட அனுமதிக்காத சாதியை நீங்கள் இன்னும் எத்தனை நூற்றாண்டிற்குக் கட்டி அழப்போகிறீர்கள்?*

*எல்லா இலக்கிய வகைமைகளும் சாதிக்கெதிராக அசைவை ஏற்படுத்த வேண்டும். பரியேறும் பெருமாள், அசுரன் போன்ற திரைப்படங்கள் மிகச் சரியாக இரண்டு கோணங்களில் சாதியின் முகத்தில் உமிழ்ந்தன. திரைப்படங்களின் வாயிலாகச் சுதந்திரமாக இதுபோன்ற கருத்துக்களைப் பாடல்களில் அதிகம் வைக்க முடியாது என்பதற்காக மக்கள் மத்தியில் நேரடியாகப் பாடுவதற்காக நான் தொடர்ந்து தனியிசைப் பாடல்கள் எழுதிவருகிறேன். அதில் ஒன்றுதான் கீழ்காணும் வரிகள் அல்லது வலிகள்.*

**தொகையறா**

சேரி இங்கு கோபுரமா சீக்கிரத்தில் மாறுமடா...

பரம்பர கோபந் தீர – இப்ப பறையடிச்சு
ஆடுங்கடா...

**பல்லவி:**

கையி தொட்டா தீட்டாம் மக்கா–நம்ம
காலு பட்டா தீட்டாம் மக்கா
வாழ்ந்து காட்ட வேணுமடா– இப்ப
வாங்கிப் போட்டுக் குத்துங்கடா

குனிஞ்சு போன ஊருக்குள்ள–மக்க
நிமிந்து நடக்க வேணுமடா
மலத்த அள்ளுன கையால் தான்–
நாக்க மடிச்சு விசிலு போடுங்கடா

**சரணம் – 1**

நட்ட நெல்லு சமையக்கட்டில்
நாம மட்டும் படிக்கட்டில்
காலமெல்லாம் பொலம்புறது
கடவுளுக்கும் கேக்கலியே

ஆடு மாடு கூட –அட சாதி பாப்பதில்ல
மனுசனுக்குப் போல – அதுக்கு ஆறறிவும் இல்ல
வானம் பூமி எல்லாருக்கும் பொதுவு – அட
ஏன்டா இனி வளைய வேணும் நம்மலொட முதுகு

**சரணம் – 2**

மேல் படிப்ப நம்ம புள்ள
தொட்டுவிடக் கூடாதாம்
கீழ் சாதிப் பொண்ணுகள
காதலிச்சா ஆகாதாம்

தோளு மேலத் துண்டு – நாமபோட்டா என்ன குத்தம்
காலுலதான் செருப்பு – அட கண்டா என்ன குத்தம்
சோக மெல்லாம் வேணாம் தூக்கிப் போடு – இனி
சூறாவளிக் காத்தாப் போல சொழன்டு நீயும் ஆடு

**சரணம் 3**

கூலி நெல்லு நாழி கூட
கேட்டதுக்கு கொளுத்தினான்
கோவில் உள்ள விடாமத்தான்
வாசலில நிறுத்தினான்

பேறுகாலம் பாத்து – உயிர் வளத்த தெல்லாம்
நாம
சுடுகாட்டில் பொணத்த – அட எரிக்கிறதும்
நாம
எல்லாத்துக்கும் நம்ம தொண வேணும் – அட
அவங்களுக்கு நம்மலத்தான் தூர வைக்கத்
தோணும்






# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

**கடிதம் - 13**

எழுதியவர் : எழுத்தாளர் பாலகுமாரன்

*12th June 1972*

திங்கள்

அன்புள்ள நம்பி,

சனிக்கிழமை மத்யானம் உங்க லெட்டர் கிடைச்சது. அப்ப வீணை வாசிச்சிகிட்டுதான் இருந்தேன். புதுப்பாட்டு - கல்யாணி ராகம் - எனக்குப் பிடிபடாம ஆட்டங்காமிக்குது. வீணையை மடியிலே வெச்சிகிட்டே உங்க லெட்டரைப் பிரிச்சுப் படிச்சேன்.

நல்லவேளை, இந்த மனுஷனுக்கு நம்ப ஞாபகம் இருக்கு - சுத்தமா மறந்திட்டு ஊரோட அழுந்திட்டாரோன்னு நினைச்சது - தப்புன்னு பட்டது. ரொம்ப சந்தோஷம் நம்பி - ஊரு போரடிக்கும்ன்னு *assumption*னோடவே போயிருக்கீங்க - எழுதற வேலைக்கு அந்த மாதிரி ஊருதான் சரி. போரடிக்கிறதும் அடிக்காததும் நம்ம மனசைப் பொறுத்த விஷயங்கள், இல்லையா - இந்தத் தடவை உங்க ஊரைப் புதுசா பாருங்களேன். எனக்கும் இந்த ஊருக்கும் சம்பந்தமில்லேங்கற நினைப்பை ஏற்றி ஒவ்வொரு *corner*யும் புதுசா - பழக்கமில்லாத இடம் மாதிரி பாருங்களேன். ரொம்ப அற்புதமா படும். விஷயம் கிடைக்கும்.

இல்லே - உங்களிடம் பட்டணத்தின் பாதிப்பு இருக்கா - அதை இந்தக் கிராமத்திலே வெளிப்படறதான்னு தள்ளி நின்னு பாருங்களேன். இன்னும் சுவாரஸ்யமா இருக்கும்.

நான் போன வாரம் விச்சு - நா.விச்வநாதன் கல்யாணத்துக்குக் கபிஸ்தலம் போயிருந்தேன். தஞ்சாவூர் ஜில்லாவின் செழிப்பான கிராமம். இரண்டு நாள் தங்கினேன்.

முற்றிலும் வேறான மண்ணும் மனுஷாளும் கண்ணுக்கு ரொம்ப இதமா இருந்தாங்க – *Quite interesting experiences.*

பிலஸாபிகல் அவுட்லுக்கே இல்லாத ஜனங்கள் *all earthly people and eratic* – ஒரு *pedestrian humour*-ஓட ஒருத்தன் கழுத்தை ஒருத்தன் அறுக்கத் தயாரா இருக்காங்க – வெட்கம் – கூச்சமெல்லாம் கம்மி. விடியகாலைலே – அங்க அறிமுகமான ஒரு நண்பர் – வேஷ்டியை வழிச்சுண்டு திடும்னு எழுந்து ‘இஞ்ச சௌர்யமா இருக்கு சார் வாங்க’ன்னு கூப்பிட்டார். ஒரு செகண்ட். அதிர்ந்து போய்ட்டேன்.

கல்யாணிக்கு *Telegram* கொடுத்தேன். லெட்டர் போட்டேன். பதில் போட்டார் – விவரமா ஒன்னும் எழுதலை – நீங்க சொல்லுங்க – எப்படியிருக்கார் கல்யாணி? சந்தோஷமா தெளிவா இருந்தாரா - விமர்சையான கல்யாணமோ – நீங்க என்ன பேசினீங்க – அவரோட, எங்களைப் பத்தி கேட்டாரா – என்ன கேட்டார். என்ன சொன்னீங்க. இலக்கியம் பற்றி பேச நேரம் கிடைச்சுதா – கல்யாண வீட்டிலே அந்த *group* ஒன்னு *form* ஆயிருக்குமே – என்ன பேசினாங்க அவுங்க – ப்ரியா - என்ன சொன்னான் – எழுதுங்களேன்.

ராஜி ஜெய் இவங்களைப் பார்த்து 3 வாரமாச்சு. *Not even a phone contact.* இனி எப்ப பார்ப்போம்ங்கிறது பற்றியும் *idea* இல்லே. கிட்டத்தட்ட நட்பு விலகிப் போச்சுன்னே நினைக்கிறேன்.

இந்தத் தனிமையும் ஒரு சுகம்தான்.

ஆக நீங்க இல்லாதது நல்லா தெரியுது. *I am lacking with lot of literary information* – எங்கே, என்ன மீட்டிங் நடக்குதுங்கறதே தெரியலே. சார்வாகனோட உரத்த சிந்தனை போன சனிக்கிழமை நடந்துதாம் – *But Nobody knows it.*

நண்பர் சுப்பு அரங்கராசன் எப்படியிருக்கிறார். விசாரித்ததாகச் சொல்லுங்கள். குறுந்தொகை கையிலிருக்கிறது – வேறென்ன வேணும் இதைவிட படிப்பதற்கு. ஒரு பண்டித விளக்கத்துக்கு மேலே அதில போய்ப் பார்க்கணும் - அப்பத்தான் பிடிபடும்.

வரட்டுமா.

அன்புடன்

பாலகுமாரன்.

•••

## கடிதம் - 14

எழுதியவர் : எழுத்தாளர் பாலகுமாரன்

*16th Dec `74*

இனிய நம்பி ----

உங்கள் இரு கடிதங்களும் கிடைத்தன. வேலை பளுவும் – மறதியும் காரணம்.

விளிம்பு – அதிகம் பேரைத் தொடவில்லை. *Dry* ஆக இருக்கிறதென்பதாகத்தான் கேள்விப்பட்டேன். உங்களுக்குக் கதை பிடித்திருக்கிறதென்பது என் வரையில் முக்யமான விஷயம் – ஏனெனில் நீங்களெல்லாம் உள்ளோடும் *communist sympathisers. Middle class* பூர்ஷ்வாத்தனங்களை மறுக்கிறவர்கள். என்னுடைய *Middle Management* கதாநாயகன் தங்களைக் கவர்ந்தது ஆச்சர்யம்தான். அவன் பாட்டாளிகளை வழிப்படுத்தவோ உற்சாகமூட்டவோ ஒன்றிணைக்கவோ செய்யாதவன். `தான்` என்ற வட்டத்தில் (இந்த `தான்` *i.e.* `I` பெரிய ரூபத்தில் இன்னும் விஸாலமானவன்தான்) கதை கவர்ச்சிகரமாக இல்லை என்ற கூற்றை உங்கள் உணர்ச்சியான கடிதம் பொய்ப்பிக்கிறது. நன்றி நம்பிராஜன்.

இந்த ஊக்கத்துடன் இதே த்வனியில் சில கதைகள் எழுதியிருக்கிறேன்.

கல்யாணி அண்ணன் என்ன சொல்கிறார் விளிம்பு பற்றி. மூக்குக் கண்ணாடியை ஒருதரம் தூக்கிவிட்டு இன்னொரு தடவை படிக்கணும்னு சொல்வாரோ.

*Training* எப்படி இருக்கிறது. எழுதுங்கள்.

மிக்க அன்புடன்

பாலா.

•••

## கடிதம் - 15

எழுதியவர்: எழுத்தாளர் கௌதம நீலாம்பரன்

கௌதம நீலாம்பரன்

9/11/88

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு. நம்பிராஜன் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் அன்பான மடல் கிடைத்தது. மகிழ்ச்சி. நன்றி. இரண்டொரு நாட்களாக உடல் நலமில்லை. கடிதமும் தாமதமாகவே கிடைத்தது. எனவே உடனே தங்களுக்கு மறுமொழி எழுத இயலாது போயிற்று. தாங்கள் பொறுப்பாசிரியராக இருந்து ஒரு புதிய வார இதழினை உருவாக்குவது அறிந்து மகிழ்ந்தேன். திறமைசாலியான தங்களுக்கு இந்த வாய்ப்பு மிகுந்த முன்னேற்றத்தை அளிக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன். ஒரு புதிய வார இதழ் வாசகர் மனத்தில் நல்லிடம் பெற்று வளர்வது கடின உழைப்பிற்குப் பிறகே சாத்தியமாகும். தாங்கள் கடினமாக உழைத்து, ஒரு நல்ல எதிர்பார்ப்பை உருவாக்கி, இதழை வளர்க்க வேண்டும். பாடுபடுங்கள். பலன் நிச்சயம் கிட்டும். விரைவில் என் சிறுகதை அனுப்புகிறேன். வாய்ப்புக்கு நன்றி.

அன்புடன்,

கௌதம நீலாம்பரன்.

•••

## கடிதம் - 16


எழுதியவர்: எழுத்தாளர் கௌதம நீலாம்பரன்

கௌதம நீலாம்பரன்

5/12/88

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு. நம்பிராஜன் அவர்களுக்கு,


வணக்கம். நலம். நலம்தானே? தங்கள் அன்பான கடிதத்தின்படி சிறுகதை அனுப்பியிருந்தேன். மிகச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. நன்றி. இதுவரை என் கதைக்கு திரு. ம.செ. படம் வரைந்ததில்லை. இது என்னுள் ஓர் ஆதங்கமாகவே இருந்தது. அந்தக் குறையைத் தாங்கள் போக்கியுள்ளீர்கள். மகிழ்ச்சி. வாய்ப்பு கிடைத்தால், திரு. மணியம் செல்வன் அவர்களின் ஓவியங்களுடன் வரலாற்றுத் தொடர் ஒன்று எழுதவும் ஆவல் உண்டு. தாங்களே அந்த வாய்ப்பை அளித்தாலும் மகிழ்வேன். ஒன்றும் அவசரமில்லை. காலமும் நேரமும் வரும்போது செய்யலாம். முதலில் இதழ் பலப்படட்டும். மக்கள் நடுவே மேலும் இதைப் பிரபலப்படுத்த ஆவன செய்யுங்கள். நெடுங்காலம் திறமை வளர்த்த உங்களுக்கு இது ஒரு சரியான களமாக அமையட்டும். நீங்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுடைய நல்ல நண்பர்களில் ஒருவனான எனக்கு எப்போதும் உண்டு.




இதழ் சிறப்பாகவே இருக்கிறது. கலைஞர் பற்றி ராதாரவி எழுதும் தொடர், மக்கள் கவனத்தைக் கவரலாம். இன்னும் கொஞ்சம் ஜோக்குகளும் சினிமாச் செய்திகளும் அதிகம் தேவை. தராசு, ஜூ.வி. பாணிக் கட்டுரை ஒன்றிற்கு மேல் தேவையா என்பதை

யோசிப்பது நல்லது. சென்னை தவிர இதர நகரங்களின் பிரமுகர்கள் – பொது ஜனங்கள் சம்பந்தப்படுகிற மாதிரி அம்சங்கள் சில சேர்க்கப்படலாம். (சாதாரணப் பேட்டிகளையே கூறுகிறேன்.)

`இளமைக்காலம்` என்று கேட்டால் கடைகளில் தெரிவதில்லை. `பருவகாலம்`தான் இருக்கிறது என்று கூறுகிறார்கள். நானும் பழம்பெரும் எழுத்தாளர் ஒருவரும் ஒருகடையில் கேட்டபோது, அங்கே சிரித்தார்கள் என்பது நிஜம். பிறகு அதே கடையில் இந்த ஏடு விற்பனைக்கு வந்தது என்று வலியுறுத்திக் கூறியபிறகு, `ஓ.. அதுவா. இன்னும் வரலே சார்` என்றார்கள். பெயர் அத்தனை சிறப்பில்லைதான். எனினும் வைத்தாயிற்று. இனி அதை விளங்கச் செய்வதே நம் வேலை. எனவே, விளம்பரப்படுத்த எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்தலாம். ஒரு வரலாற்று நாவல் போட்டு, நன்கு பப்ளிசிட்டி செய்வது சிறப்பு சேர்க்கும். நல்ல குடும்பங்களின் கையில் பத்திரிகை செல்ல இது உதவும். (நிச்சயமாக இதை நான் சுயநலத்தில் கூறவில்லை. முதலில் நீங்கள் வேறு நல்ல எழுத்தாளர் கதையே போடலாம். பிறகு நானும் எழுதுகிறேன்.)



ஒரு மாறுதலுக்காக, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை நல்ல சிறுகதைக்கான ஓவியத்தையே அட்டையில் போடலாம். மாருதி, ஜெயராஜ், கோபுலு, மணியம் செல்வன், அரஸ் போன்றோரின் ஓவியங்கள் தொடர்ந்து அட்டையில் இடம்பெற்றால், பத்திரிகையின் தரத்தை உயர்த்தி, குடும்பங்களின் உள்ளே உலவச்செய்யும். அவசரப்பட்டு இந்த யோசனையைப் புறக்கணிக்க வேண்டாம். ஒரேமாதிரி சினிமா-அரசியல் பத்திரிகைகளின் சாயல் நிறைய இருக்கிறது. பலருக்கும் இதில் வெறுப்பும் குழப்பமும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஒரேயடியாகத் தவிர்க்கச் சொல்லவில்லை. வித்தியாசம் – சிறப்பாக – அவசியம் தேவை என்பது என் கருத்து.

அன்புடன்

*P.கைலாசநாதன்*

•••

## கடிதம் - 17

*எழுதியவர்: எழுத்தாளர் கௌதம நீலாம்பரன்*

கௌதம நீலாம்பரன்

*30.3.08*

அன்பிற்கினிய நண்பர் திரு. விக்கிரமாதித்யன் அவர்களுக்கு,

வணக்கம். வாழ்க பல்லாண்டு.

தங்கள் சஷ்டியப்த பூர்த்தி நிகழ்வில் நேரில் வந்து கலந்து கொள்ளவியலாது போயினும் என் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 23.3. ஞாயிறு பகலில் திருநள்ளாறு, பூம்புகார், மயிலாடுதுறை, கும்பகோணம் என்று சுற்றிக்கொண்டிருந்தேன். திருமண மண்டபம், கோவில்கள், உறவினர் வீடுகள் என்று நேரம் ஓடியது. இரண்டு நாள் முன்பு நண்பர் இங்கு வந்திருப்பாரே என்று நினைத்துக்கொண்டேன். சென்னை திரும்பி, மனைவி உடல் நலமில்லாமல் பரணி ஆஸ்பத்திரியில் சேர்த்து, அலைச்சல். உடனே தபால் எழுத இயலாது போயிற்று.

சிமிழில் கவிதைகளுக்கு சன்மானம் அனுப்புவது இல்லை. அதனால் புதுசுகளின் புதுசுகளை வெளியிடுவதோடு

விட்டுவிடுகிறேன். தங்கள் கவிதைகளை வெளியிட முடியாத ஆதங்கம் எனக்கு உண்டு. முன்பு போல் சிறுகதைத் தொகுதி ஒன்று அனுப்பினால், மறு பிரசுரமாக வெளியிடுவேன். புதிதாக ஒரு குறுநாவல் (40 அல்லது 50 பக்கம்) அனுப்பினாலும் வெளியிட்டு சன்மானமும் அனுப்புவேன். முழு நாவல் ஒன்றும் (60 பக்கத்திற்குள்) அனுப்பலாம்.

தங்கள் பிள்ளைகள் நல்ல நிலையை அடைந்திருப்பர் என நம்புகிறேன்.

60 துவங்கி, 80 வரை உங்கள் எழுத்துப்பணி முழுவீச்சில் அமையட்டும். அப்போதுதான் அடுத்த 20 ஆண்டுகளை (நூறு வரை) மகிழ்வான நினைவுகளில் கழிக்க முடியும். ஒரு குறுங்காவியம் போன்று ஏதேனும் எழுத முயலுங்கள்.

அன்பு நண்பன்

கௌதம நீலாம்பரன்.

...

## கடிதம் - 18

எழுதியவர் : கோமல் சுவாமிநாதன் (சுபமங்களா ஆசிரியர்)

22.11.93

அன்புள்ள நம்பிராஜன் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேன்.

தங்கள் கவிதை ரசனைக்கு சாதகமாகவும் பாதகமாகவும் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

தாங்கள் டிசம்பர் முதல் வாரத்தில் சென்னை வரும்போது சந்தித்து மேலும் இதுபற்றி பேசுவோம்.

குற்றாலம் இரண்டாவது சீசன் எப்படி இருக்கிறது?

உடல்நலமாயிருக்கிறீர்களா? கலாப்பிரியாவைச் சந்தித்தால் கேட்டதாகச் சொல்லவும்.. ரொம்ப அன்பான மனிதர். ஆர்பாட்டமில்லாமல் இருந்த அவரைச் சந்தித்துப் பழகியது எனக்கு மகிழ்ச்சியூட்டும் விஷயம்.

தங்களன்புள்ள

கோமல் சுவாமிநாதன்.

...

## கடிதம் - 19

எழுதியவர் : கோமல் சுவாமிநாதன் (சுபமங்களா ஆசிரியர்)

21.1.94

அன்புள்ள நம்பிராஜன் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது.

தங்கள் கவிதை ரசனை கட்டுரைகளை அந்தரத்தில் விட எனக்கும் இஷ்டமில்லை. கொஞ்சம் விட்டு வேறு ஒரு உருவத்தில் அதை *present* செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டுள்ள கவிகளைப் பற்றியெல்லாம் ரசனைப்பகுதி வரவேண்டும். சில வாசகர் கடிதங்களிலிருந்து எனக்குக் கிடைத்த விமரிசனங்கள், சில கவிதைகளுக்கு வலிந்து பொருள் கூறுவதாகவும் தெற்றென விளங்கும் கவிதைக்கு அதிகமாகவே விளக்கம் எழுதப்படுவதாகவும் சொல்கின்றன. இன்னும் கூர்மையாக இரண்டு பக்க அளவிற்குள் கட்டுரை இருக்குமானால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்றும் சில நண்பர்கள் பிரியப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் தங்களுடன் கலந்து பேச வேண்டும். தாங்கள் பிப்ரவரியில் வரும்போது மீண்டும் நாம் பேசி பழையபடி தொடங்கலாம் என நினைக்கிறேன். எழுதிவைத்திருக்கிற பகுதியை (வைதீஸ்வரன்) அனுப்பிவைக்கவும்.

உடல்நலம் பேணவும்.

தங்கள் அன்புள்ள
கோமல் சுவாமிநாதன்

- தொடரும்.

விடியாத ஒரு இரவில்
குரைத்துக்கொண்டிருந்த
நாயின் மேலான அச்சம்
இன்னும் கூடியபடி இருந்தது
கடிகார முட்களின்மேல்
மெல்ல ஊரும் சர்ப்பத்தின் விசம்
எப்போது தீரப் போகிறது
இருளுக்குள் வந்துபோகும்
உருவத்தையும்
இதுவரை பார்த்ததில்லை
நீண்டுவரும் ஆதரவுக் கரத்தையும்
சட்டெனப் பிடிக்க
உயிர் ஒத்துக்கொள்ளாது
சுவரில் வழியும் குருதி
வெடிப்பில் பூக்கும் நாக்குகள்
வெளிச்சத்தில் வந்தோடும் குறிக்கண்கள்
கைகால்களை அசைக்கவிடாது
பிடித்துக்கொள்ளும்
சீழ் வழியும் விரல்கள்
கூர் பற்களின் பாதம் படியும்
என்னுடல்
இப்படியான எல்லாச் சதிராட்டத்தையும்
அதிகாலையின் உறக்க மயக்கம் விழுங்க
இப்போதுதான் தொடங்குகிறது வாழ்வு.

➤ யாழ் தண்விகா

••

இறந்த காலத்திலிருந்து
மீன்களைப் பிடித்துக்கொண்டு
வந்திருக்கிறேன்

மரணச்செய்தியைக் கொண்டுவரும்
தபால்காரனின் முகத்தில்
அடுத்த வீட்டின் பரிசுச்செய்தியும்
அவனுக்குச் சற்று கனம்

அறிவிக்கப்பட்ட யுத்தம்
ஒரு மனிதனின் வாழ்க்கை

வேரோடு பிடுங்கப்பட்ட மரத்திற்காக
மனுவை எழுதிக்கொண்டிருக்கும்
பறவையின் அழுகுரலுக்கு முன்
ஒரு வேட்டைக்காரனின்
குறிவைக்கப்பட்ட அம்பு

நாட்குறிப்புகளின் பக்கங்களில்
எரிந்துகொண்டிருக்கும்
பால்ய கால நினைவுகள்

பின்குறிப்பு எழுதிக்கொண்டிருக்கின்ற
காலங்களை யாவரும்
கணக்கிலெடுப்பதில்லை

எப்படி இறந்த காலமென
நீங்கள் கணித்துக்கொண்டிருக்கிறீர்கள்
நிகழ்காலத்தில்
உங்கள் பிறந்தநாட்கள் வருகின்றபோது

எல்லா அதிகாரத்திற்கும்
எதிராக ஒரு குரல்
ஒலித்துக்கொண்டேயிருக்கட்டும்

கவனமாய் இருப்பதையே
கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுகிற காலத்தைப்
பிரகடனம் செய்யும் நாம்
சுழன்றி உழன்றும் ஊழ்வினை

➤ ராம் பெரியசாமி

••

பலனற்றுப் போயின எனது மன்றாடல்கள்
கருணை என்பது காதல்பொய்

சீடர்கள் அற்ற பிரசங்கியானேன்
இந்தக் காதலால்

பார்ப்பவர்கள் கல்லெறிய
என்னைப் பித்தேற்றியவள்
தெளிவுடன் கூறுகிறாள்
மெழுவர்த்தியின் மேலான பரிதாபம்
நம்மை இருளில் தள்ளிவிடும் என்று

சிற்பத்தைத் தானாகவா காட்டும் பாறை

வாய்கள் ஆயிரம் சூழ்ந்திருக்கலாம்
பாவம் என்றுரைக்க
ஊமைக்குக் குரலாவது எது

ஆதியில் தன்வசமிருந்த சொல்லை
கொடுக்க மனமில்லாதவனின்
ஆலய வாசலில் கையேந்தினாலும்
புனிதப்படுத்தப்படாத நாவு என்னுடையது

முதல்பார்வை விதைக்க
மறுபார்வை வளர்த்துவிட்ட
இந்தத் துயரம்
அவளைக் கரித்து எழுதாது
என் மீதே வழியட்டும்

மெழுகுவர்த்தி சிலுவையில்தான்
எரியவேண்டுமா என்ன

கோ. பாரதிமோகன்

வலிய திருகலால்
உடைந்து கிடக்கிறது மூடியும் நறுமணமும்.

நிதானிக்கத் தள்ளாடுதலைக்
கொண்டாடுகின்றன குடுவைகள்.

கோப்பை சந்தோசமா
குடுவை துக்கமா
புளித்த ஏப்பமாக வருகிறது விடை.

புன்னகையொரு சர்வரோக நிவாரணி
என்றவளின் உதடு
கோப்பையின் மேல்பாகமாகத் தோன்ற
வழியாமல் ஊற்றப்படுகிறது
சில முத்தச் சொட்டுகள்.

நிரம்பி வழிய
இடம் தராத கோப்பைகளில்
ஒரு சொட்டு கூட மிச்சமில்லை.

ஒருமுறை குலுக்கி அலசும்போது
நுரைத்துப் பொங்குகிறது
போதையின் மிச்சம்.

ஊதுபத்திப் புகை அணைந்ததும்
மறுபடியும் கோப்பையாக உருவெடுக்கிறது
மீளத் தெளிந்த அறை.

வரம் அருளத் தயாராகிறார்
காலியான குடுவைகளை
பழைய விலைக்கு வாங்கிய கடவுள்.

மா. காளிதாஸ்

visai@padaippu.com

படைப்பு

# விசை

பல்சுவை மாத மின்னிதழ்

